SARINIHAR

# சரிநிகர்

சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

இதழ்-173 ஜூன் 10-ஜூன் 23,1999 விலை 10.00




## தேசியக் கொள்கையற்ற தேசியக் கல்வி நிறுவகம்!



## ராசிக் : கொலைக்கு காரணம் என்ன?

## சிறைக் கூடங்களில் சித்திரவதைகள்!





இந்திய-பாகிஸ்தான் போர்:

## சிக்கித் தவிக்கும் காஷ்மீர் மக்கள்!

# 'பிரச்சாரப் படை'

கடந்த 1.6.99 அன்று ஈ.பி.டி.பி. உறுப்பினரும், நல்லூர் பிரதேச சபை உப தலைவருமான தியாகராஜா, ராஜ்குமாரும் அவரது மைத்துனரும் கந்தர் மடத்தில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டது தெரிந்ததே. இதனையடுத்து மறுநாள் 2.6.99அன்று ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு ஈ.பி.டி.பி. கோரிக்கை விடுத்திருந்தது. 2.6.99அன்று திருநெல்வேலியில் கடைகள் பூட்டப்பட்டிருந்தன. படையினர் வந்து கடைகளைத் திறக்கச் சொல்லி கடை உரிமையாளர்களுக்கு உத்தரவிட்டனர். இதனை அவதானித்த ஈ.பி.டி.பி.யினர் உடனே 51வது படையணித்தளபதி மாரம்பேயுடன் தொடர்பு கொண்டனர். அவரும் இன்று ஒரு நாள் மட்டும் விட்டுக் கொடுங்கள் என்று தனது சிப்பாய்களுக்கு உத்தரவிட்டார் எனினும் சிப்பாய் ஒருவர். இன்றைக்கு ஈ.பி.டி.பி. நாளைக்கு புளொட் பூட்டச்சொல்லும் இதையெல்லாம் அனுமதிக்க முடியாது என்றார்.

கடந்த 27.5.99அன்று வியாழக்கிழமை யாழ் மாநகர சபைக்கு விஜயம் செய்த இராணுவத்தினர் அங்கு கடமையிலீடுபட்டிருந்த சிற்றூழியர் ஒருவரைப் பார்த்து நாளை வெள்ளிக்கிழமை கடமைக்கு வரமாட்டீர்களா என்றனர். (புலிகள் செவ்வாய், வெள்ளி தினங்களில் கடமைக்குச் செல்ல வேண்டாம் என அரச ஊழியர்களைக் கேட்டிருந்த வேளை) அதற்கு அவையளும் துவக்கு வைச்சிருக்கினம் நீங்களும் துவக்கு வைச்சிருக்கிறியள். நாங்கள் என்ன செய்யிறது என்றார். உடனே சிப்பாயும் நாங்கள் உங்களைச் சுட மாட்டோம். நாங்கள் உங்களைப் பாதுகாக்கத் தான் வந்து நிற்கிறோம் என்றாரே பார்க்கலாம். அம்மையார் இனிமேல் அரசியல் பிரச்சாரத்திற்கு அரசியல்வாதிகளை விட்டுவிட்டு சிப்பாய்களையே அழைத்துச் செல்லலாம் போலிருக்கிறது. சிப்பாய்கள் அரசியல் விளக்கமளிப்பதில் அரசியல்வாதிகளையும் மிஞ்சிவிட்டார்கள் ....

# சும்மா ஒரு சூளுரைப்பு!

சிங்கள வீரவிதான இயக்கம் பயங்கரவாத எதிர்ப்பு இயக்கம் மற்றும் இனவாத ரீதியான ஆர்ப்பாட்டங்களிற்கும் பிரச்சாரங்களிகும் எதிராக இ தொ.க.ா. போராடப்போவதாகவும் அதற்காக மக்களை அணிதிரட்ட போவதாகவும் சூளுரைத்துள்ளது.

இதுவரைகாலமும் இத்தகைய சக்திகள் தலையெடுக்ககக் காரணமாக அமைந்த பௌத்த பேரினவாதத்திற்கு எதிராக எந்த நடவடிக்கையையும் எடுக்காது மாறாக அவற்றிற்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் ஆதரவு வழங்கிய இ.தொ.கா. இன்று ஏன் .இத்தகைய சூளுரைப்புகளை மேற்கொள்கிறது?

இ.தொ.காவின் செல்வாக்கு மலையகத்தில் சடுதியாக சரிந்துவருவதும் அதன் சர்ந்தர்ப்பவாத அரசியல் மக்கள் முன் தெளிவாக இனங்காணப்படுவதாலும் ஆட்டம் கண்டு இருக்கும் இ.தொ.கா. மீண்டும் தன் செல்வாக்கை சரிசெய்யவே இத்தகைய சூளுரைப்புகளில் இறங்கியுள்ளதாக நம்ப வேண்டியுள்ளது. ஏனெனில், பௌத்த பேரினவாத அடக்குமுறைக்கு சட்டரீதியான அங்கீகாரமளித்துவரும் அவசரகால சட்டத்திற்கு அது ஆதரவு கொடுத்து வருவதால் மலையகம் எங்கும் தொழிலாளர்கள் இனவாதிகளால் நசுக்கப்டுகையில் வாய்மூடி இருத்தல் இரத்தினபுரி போன்ற பிரதேசங்களில் இடம்பெற்ற இனக்கலவரத்தின் பின்பும் அதற்கெதிராக எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்காது இருத்தல் மட்டுமன்றி அதற்கு காரணமாக அமைச்சர் ஒருவரே உள்ளார் எனத்தெரிந்தும் மௌனமாக இருத்தல் போன்ற இனவாத சம்பவங்கள் செயல்களில் எல்லாம் மௌனம்காத்து ஆதரவு வழங்கிய இ.தொ.கா. இன்று மட்டும் ஏன் கூக்குரல் இடுகின்றது?

வீரவிதான போன்ற இயக்கங்களை எதிர்க்க மயிலும் இ.தொ.கா. அவை வளருவதற்கான புறச்சூழலை உருவாக்கி தரும் இனவாத அரசுகளையே இதுவரை ஆதரித்தும் வந்துள்ளது. இவ்வகை அரசுகளின் யுத்தத்திற்கும், அதற்கான சட்டங்களிற்கும் ஆதரவு கொடுத்துவிட்டு இன்றுமட்டும் எதிர்க்க முயல்வதும் அதற்காக தமிழ், தமிழ் இனம் என இனத்துவ அடையாளங்களை முன்னிறுத்தி அரசியல் செய்ய முனைவதும் அதன் அரசியல் வங்குரோத்துதனத்தை நிவர்த்தி செய்யும் செயல்களே அன்றி வேறொன்றும் இல்லை.

ஆனால், அது சூளுரைப்பதும், கூக்குரல் இடுவதும் வெறும் வார்த்தைகளாகவே கரைந்து போகப்போவதும், அப்படி அது செயலில் இறங்கினாலும் அது பௌத்த பேரினவாத மயப்படுத்தலை எந்த விதத்திலும் பாதிக்காத செயல்களாகவே அமையும் என்பதும் இ.தொ.காவின் அரசியலை நன்கு புரிந்து கொண்டவர்களிற்கு புரியும்.

# எழுகின்ற கேள்விகள் !

புலிகளின் அரசியல் படுகொலைகளிற்கு எதிராகவும் சிவில் நிர்வாக சீர்குலைப்பிற்கு எதிராகவும் ஈ.பி.டி.பியால் அண்மையில் யாழ். குடாநாட்டில் ஹர்த்தால் நடத்தப்படடது.

ஈ.பி.டி.பி. கூறுவதுபோன்றே அது மக்களின் நலனிற்காக நடாத்தப்படுகின்றது என்பதையும் நம்புவோம். ஆனால், அவ்வாறு நம்பமுனையும் போதுதான் எமக்கு பல கேள்விகள் எழுகின்றன.

இதுவரைக்கும் சிவில் நிர்வாகம் என்ற பெயரில் முற்றுமுழுதான இராணுவ நிர்வாகம் நடக்கையில் அதனை ஏன் எதிர்க்கவில்லை?

பத்துவயது சிறுவர்களிற்கு கூட அடையாள அட்டை முறையை கொண்டு வந்த இராணுவ நிர்வாகத்திற்கு எதிராக இன்று மட்டும் ஏன் எந்த ஒரு எதிர்ப்பையும் காட்டவில்லை.

600க்கும் மேற்பட்டவர்கள் காணாமல் போய் இன்றுவரை என்ன நடந்தது என தெரியாமல் இருக்கையில் அதற்கு காரணமானவர்கள் மீது ஏன் எந்தவொரு எதிர்ப்பு நடவடிக்கையிலும் இறங்கவில்லை?

செம்மணி இழுத்தடிப்பு, பாலியல் வல்லுறவு, சிவில் விமான போக்குவரத்தை இராணுவ விநியோகத்திற்குப் பயன்படுத்தியமை. பயன்படுத்துதல் போன்றவற்றிற்கு எதிராக எந்தவொரு நடவடிக்கையும் எடுக்காமை போன்ற கேள்விகள் எழுகின்றன.

ஈ.பி.டி.பி. இன்று வரை தமிழ் மக்களின் நலன்சார்ந்து எந்தவொரு நடவடிக்கையிலும் இறங்காது இன்று இத்தகைய போராட்டங்களில் ஈடுபடுகையில் இவ்வாறான கேள்விகள் எழுவது தவிர்க்க முடியாமல் உள்ளது.

# புலிகள் அழைக்கிறார்கள் !

கடந்த 6.6.99 அன்று புலிகள் தேசத்துரோகிகளுக்கு ஒரு வேண்டுகோள் என்ற தலைப்பில் ஏனைய தமிழ்க் குழுக்களையும் தம்முடன் இணைந்து கொள்ளுமாறு அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளனர். அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.


இன்று தமிழ் மக்கள் மிக வேதனையான, தாங்கமுடியாத கொடுமைகள் அனுபவித்து வருகின்றனர். இராணுவ சர்வதிகார ஆட்சியின் கீழ் அடிமைகளாக சிறைக்கைதிகள் போல் எம் மக்கள் பசி பட்டினியுடன் வாழ்ந்து வருகின்றனர். எமது இலட்சியப் பயணம் வரலாற்று முனைப்புப் பெற்றிருக்கும் வேளையில் நீங்கள் எதிரியுடன் இணைந்திருப்பது கவலைக்குரியது. நீங்கள் மக்கள் விரோத துரோக செயற்பாடுகளில் ஈடுபடுவது மன்னிக்க முடியாது.

உலகின் நான்காவது பெரிய வல்லரசே எம்மை அழிக்க முடியாது அவமானத்துடன் திரும்பிப் போனது. ஜே.ஆர்., பிரேமதாச, டி.பி. விஜேதுங்க போன்றோர் கூட எம்மை அழிக்க நினைத்தார்கள். ஆன்ால், முடியவில்லை. நீங்கள் அரசுடன் கூட்டுச் சேர்ந்து மக்கள் விரோத நடவடிக்கையில் ஈடுபடுவதன் மூலம் உங்கள் குடும்பத்திற்கு துரோகமிழைப்பதுடன் ஒட்டுமொத்த தமிழினத்திற்கும் துரோகம் இழைக்கிறீர்கள். உங்களது வறுமை, அறியாமை போன்றவற்றை ஆடம்பர, உல்லாச சுயநலக் கும்பல்கள் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்கின்றன. நீங்கள் எங்கிருந்தாலும் புலிகள் நுழைவார்கள். தேசத்துரோகிகளுடன் சேர்ந்து உங்களை நீங்களே அழித்துக்கொள்வதை நிறுத்துங்கள்.

நீங்கள் பொதுவாழ்வில் இணைவதை நாம் வரவேற்கிறோம். நீங்கள் எமது அமைப்புடன் இணைந்து போராடுவதை நாம் வரவேற்கிறோம். நாம் தோளோடு தோள்நின்று போராடும் போது எமது தலைவரின் வழிகாட்டலின் கீழ் நீங்கள் போராட முடியும். மாபெரும் தலைவன் எமக்கு கிடைத்துள்ளான். எமது தலைவர் உங்களைத் தனது சகோதரராகக் கருதி நீங்கள் போராட்ட பொது வாழ்வில் ஈடுபடுவதையே வரவேற்கிறார். நீங்களும் இப்போராட்டத்தில் பங்கேற்க வேண்டும். ராசீக்கிற்கு நடந்தது உங்களுக்குத் தெரியும் தானே. துரோகத்தனத்தை விட்டு தன்மானத்துடன் வாழப்போகிறீர்களா அல்லது உங்களை நீங்களே அழித்துக்கொள்ளப் போகிறீர்களா என அந்த அறிக்கையில் கேட்கப்பட்டுள்ளது.

# கையொப்பம் போட்டால் சரி !

அண்மையில் இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையின் வருடாந்தக் கூட்டம் நடை பெற்றுக் கொண்டிருந்தபோது ஊழல் பேர்வழிகளே வெளியேறுங்கள் என்ற பதாகைகளுடன் நல்லூர் கிளை உறுப்பினர்கள் அலுவலகத்திற்கு வெளியே ஆர்ப்பாட்டம் செய்தனர். இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளையில் 32லட்சம் ரூபா மோசடி செய்யப்பட்டுள்ளதாக நல்லூர் கிளை உறுப்பினரான மகேசன் தெரிவித்தார். மகேசன் தான் 1994ம் ஆண்டு இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளையில் பயிற்சி நெறியொன்றைப்பூர்த்தி செய்ததாகவும், தனக்கு மாதமொன்றுக்கு 450/- வழங்கப்படும் என பயிற்சி நெறியின் ஆரம்பத்தில் தெரிவிக்கப்பட்டதாகவும் ஆனால், இதுவரை தனக்கு எதுவித வித கொடுப்பனவும் வழங்கப்படவில்லையெனவும் வவுச்சரில் கையொப்பம் மட்டும் வாங்கப்பட்டதாகவும் கூறினார்.



## தீர்வு கையில் !

இலங்கையின் இனப்பிரச்சினைக்கான காரணங்களை அரசியல்வாதிகள் ஒரு புறமும், வரலாற்றாசிரியர்கள் இன்னொரு புறமும் ஆராய்ந்து கொண்டிருக்கையில், அதற்கான காரணம் என்ன என்று அரசாங்கம் இப்போது ஒரு தெளிவான முடிவுக்கு வந்து விட்டது.

இனவாத அரசியலோ, விடுதலைப் புலிகளின் பாசிச நடவடிக்கைகளோ அல்லது ஐ.தே.கவின் சந்தர்ப்பவாத அரசியலோ தான் இதற்குக் காரணம் என்று அது கூறியிருக்கலாம் என்று நீங்கள் யூகிக்கக்கூடும்.

ஆனால், அப்படியெல்லாம் சாதாரண காரணங்களால் இந்தப் பிரச்சினை உருவாகியிருந்தால் அது தீர்ந்திருக்காதா என்ன?

உண்மையில், இதற்கெல்லாம் காரணம் இவை எல்லாவற்றையும் மீறிய ஒரு விடயம். உங்களாலும் எங்களாலும் கற்பனை பண்ணிக் கூடப்பார்க்க முடியாத ஒரு விடயம்.

ஆனால், அரசாங்கத்திற்கு அது தெரிந்து விட்டது.

தென்னிந்தியாவில், திருச்சிராப்பள்ளியில் இருக்கும் ஸ்ரீரங்கத்தின் ராஜ கோபுரம் இலங்கையை நோக்கியிருப்பதே இலங்கையின் இத்தனை பிரச்சினைகளுக்கும் காரணம். 400 அடி உயரமான இந்தக் கோபுரத்தின் பார்வை இலங்கையில் படுவதே இங்கு நடக்கும் இனப்பிரச்சினைக்கு காரணமாம்.

இதனைக் கண்டு பிடித்த அரசாங்கம், உடனடியாக அதற்கு மாற்று ஏற்பாடு செய்வதிலும் துரிதமாக இறங்கிவிட்டது.

பாதுகாப்பு பிரதி அமைச்சர் அனுருத்த ரத்தவத்த கலாசார அமைச்சர் லக்ஷ்மன் ஜயக்கொடி ஆகியோர் தலைமையில் ரூ. 600 மில்லியன் செலவில் முத்துராஜவெல பகுதியில் பல்மதத் தன்மை வாய்ந்த கோவிலொன்றை நிர்மாணிக்கும் வேலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீரங்க கோபுரத்தின் பார்வையின் பாதிப்பைத் தணிக்க கடல் மட்டத்திலிருந்து 35 அடி உயரத்தில் ஒரு கோவிலைக் கட்டுவது என்ற முடிவுடன் ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டத்திற்கான அடிக்கல் 'ஈஸ்வர வருடம் தை மாதம் இருபத்தோராம் திகதி அதாவது ஆயிரத்து தொளாயிரத்து தொண்ணூற்று எட்டாம் ஆண்டு பெப்ரவரி மாதம் 9ம் திகதி' மாண்புமிகு ஜனாதிபதி சந்திரிகா அவர்களால் நாட்டி வைக்கப்பட்டுள்ளது!

இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வுப் பொதியை உடைப்பில் போட்டுவிட்டதாக அரசாங்கத்தை விமர்சிப்பவர்கள் இனியாவது வாயை மூடிக்கொள்ளட்டும்.

இனப்பிரச்சினை தீர வேண்டுமா, கோவிலை விரைவாக கட்டி முடிக்க ஏதாவது நிதியுதவி செய்யுங்கள்.

- வீணாக அரசியல் ஆய்விலும், போராட்டத்திலும் காலத்தைப் போக்கிக் கொண்டிராமல்!

## மிகப்பெரிய சோதனை!

வவுனியாவில் நம் இயக்க வீரர்களுக்கு ஏற்பட்டுள்ள சோதனை பெரும் சோதனை.

ஆயுதங்களைத் தூக்கிப்பிடித்தபடி வீதி வலம் வர முடியவில்லை. தேங்காய், செவ்விளனீர், தேங்காயெண்ணை என்பவற்றால் கிடைக்கும் வரிக்கு மேலாக ஆயுதமேந்தி உலா வருவதில் வெளிப்படும் அதிகாரம் அதிகம் சக்தி வாய்ந்தது. கௌரவமானது. சந்தோசமானதும் கூட.

ஆனால், அதைச் செய்ய முடியாமல் வெறுமனே தமது முகாம்களுக்குள்ளும் வாசலிலும் ஆயுதங்களுடன் நிற்க வேண்டிய நிலை.

பொழுது போகாததற்கு றைபிளை இழுத்து 'லோட்' பண்ணுவதும் பிறகு 'றிலீஸ்' பண்ணுவதுமாய் நிற்க வேண்டிய நிலை. இந்த நிலை எத்தனை நாளைக்கு நீடிக்கப் போகிறதோ?

0 0 0

ஆனால், திடீரென ட்ரான்ஸ்போமர்கள் வெடிக்கின்றன. இயக்க காவல் நிலையங்களிலிருந்து கூப்பிடு தூரங்களில் உள்ளவை. தண்டவாளத்தின் துண்டு குண்டு வைத்துத் தகர்க்கப்படுகிறது. புலிகள் வவுனியாவுக்குள் நுழைந்து விட்டார்கள் என்ற ஒரு நிலைமை அங்குள்ள இயக்கங்களால் முணுமுணுக்கப்படுகிறது.

0 0 0

தாங்கள் ஆயுதங்களுடன் திரிய வேண்டுமென்பதற்காக 'இவையளே இதைச் செய்திருப்பினம்' என்று சொன்னார் ஒரு அனுபவசாலி. தான் வந்த ரெயின் 'அருந்தப்பில்' குண்டு வைத்து தகர்க்கப்பட்ட தண்டவாளத் துண்டை தாண்டி வந்த கதையை அவர் சொன்னார். ஈரப்பெரியகுளம் தாண்டி 2 நிமிடம் கூட இருக்காது. பலத்த சத்தம். ரெயின் நின்றது. எல்லோரும் இறங்குகிறார்கள். பார்த்தால் தண்டவாளத்தில் 2 அடி துண்டு ஒன்று இல்லை. பிறகு ஆமி பொலிஸ் வந்து திருத்தவேலை. ரெயின் புறப்படுகிறது. ரெயினில் இருந்த ஒரு சிங்கள ஊழியர் இப்படிச் சொன்னாராம்.

"உது மினிபஸ்காறங்கடை வேலை. இப்ப ரெயிலோடுறதால அவைக்கு சனமில்லை. புலியள் வைச்சிருந்தா 2 அடியே முழுத் தண்டவாளமும் எல்லோ போயிருக்கும்"

0 0 0

எப்படியோ, புலிகள் வவுனியாவுக்குள் நுழைந்து விட்டார்கள் என்பதை நம்ப மறுக்கிறார்கள் அங்குள்ளவர்கள்.

இது தான் இயக்கங்களுக்குள்ள மிகப்பெரிய சோதனை!

000

## 'விடுவிக்கப்பட்ட' மடுமாதா

மடுமாதா கோவிலிலிருக்கும் இராணுவத்தினரை வெளியேறுமாறு விடுக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு எந்தப் பதிலும் இல்லை.

ஆனால், கோவிலில் இருந்த அகதிகள் வெளியேற்றப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.


புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களை விடுவிக்கப் போவதாகக் கூறிய படையினர், மடுமாதா கோவிலை யாரிடமிருந்து விடுவித்திருக்கிறார்கள் என்று நினைக்கிறீர்கள்.

அகதிகளிடமிருந்து.

அகதிகளின் ஆக்கிரமிப்பால் பாதிக்கப்பட்ட மடுமாதா இப்போது இராணுவத்தின் சப்பாத்துகளின் கீழ் பத்திரமாக இருப்பதாக அண்மையில் அங்கு போய்வந்த ஒருவர் தெரிவித்தார்.

# காத்தான்குடி:
# பட்டலந்தைப் பாணியிலான வதைமுகாம்!

மே 14ம் திகதி காத்தான்குடியில் மு.காங்கிரசின் பிரச்சாரக் கூட்டம் முடிவடைந்து இரண்டு மணித்தியாலங்களுக்குள்ளாகவே காத்தான்குடி இரண்டாம் குறிச்சியில் வசிக்கும் சாஜஹான் (20) எனும் இளைஞர் உலகக்கோப்பை கிரிகெட் போட்டியினை ரசித்துக் கொண்டிருக்கும்போது, வீட்டிலிருந்து அழைத்துச் செல்லப்பட்டு காத்தான்குடி டெலிகொம் அமைந்துள்ள அறையொன்றிலே அடைக்கப்பட்டு மிகக் கொடூரமான முறையிலே தாக்கப்பட்டுள்ளார். இத்தாக்குதல் முறையினை நோக்கும்போது ஐ.தே.க. காலத்து பட்டலந்த முகாம் நினைவுக்கு வருகிறது. இதற்காக இவ்விளைஞர் தனது வீட்டிலிருந்து பிரதியமைச்சரின் உத்தியோகபூர்வ வாகனத்திலே அழைத்துச் செல்லப்பட்டது குறிப்பிடத்தக்கது. இக்கடுமையான தாக்குதலிலே பங்கு கொண்ட நபர்களாக, பிரதியமைச்சரின் மெய்ப்பாதுகாவலர்களான ஜாபிர், பதுறுஸ்ஸமான் ஆகியோரும் றிஸ்வி எனும் அடியாளும் அடையாளங்காணப்பட்டுள்ளனர்.




றிஸ்வி என்பவர் முன்னர் பிரதியமைச்சரின் சிபாரிசின்பேரில் டெலிகொம் நிறுவனத்தில் பணியாற்றி பின்னர் பொய்யான கல்விச் சான்றிதழ்களை சமர்ப்பித்தார் என்ற வகையிலும், கடமை ஒழுங்கீனம் காரணமாகவும் வேலையில் இருந்து இடைநிறுத்தப்பட்டவர். இவர் தற்போது இவ்வாறான அடிதடி, எடுபிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறார்.

சாஜஹான் தாக்கப்பட்டதற்கான காரணம் முஸ்லிம் காங்கிரசின் கூட்டம் நடைபெற்ற அதே தினம் ஜும்மாத் தொழுகையின் பின்னர், துண்டுப்பிரசுரம் ஒன்றினை விநியோகித்தார் என்பதற்காகவே! இப்பிரசுரத்தில் இதுவரை காலமும் முஸ்லிம் காங்கிரஸார் முஸ்லிம் பொதுஜனங்களுக்காக நடாத்திய உரிமைப்போராட்டங்களையும், தென்கிழக்கு மாகாணம் என்ற கனவுக் கோட்டையினையும் நையாண்டிப் பாணியிலே விமர்சித்ததோடு அன்றி நடைபெறவிருந்த கூட்டத்திற்கு வருமாறு கால்களிலே விழுந்து கெஞ்சுவதாயும் குறிப்பிடப்பட்டிருந்தது. காத்தான்குடி டெலிகொம் அறையிலே கடுமையான சித்திரவதைக்குட்பட்ட சாஜஹான் இறுதியிலே பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டார். அங்கும் அவருக்குரிய அதி.உன்னதமான (சித்திரவதை) கடமைகள் நிறைவேற்றப்பட்ட பின்னர் கடைசியாக இந்தப்பிரசுரங்களை விநியோகிக்கத் தந்தது யார்? எனக் கேட்டு அவ்விளைஞனின் ஆணுறுப்பினை மேசை லாச்சியிலேயே வைத்து .. நெறிப்பதற்கான முன் முயற்சியிலே பொலிசாரும் பிரதியமைச்சரின் கூலிப்படைகளும் ஈடுபட்டவேளையிலே, சாஜஹான் விடயத்தை கூறிவிடவே கடுமையான விசாரணைகளுக்கு பின்னர் அன்றிரவு முழுவதும் காத்தான்குடி. பொலிசிலே அடைத்து வைக்கப்பட்டு காலையிலே விடுவிக்கப்பட்டார். தற்போது சாஜஹான் மிகக் கடுமையான காயங்களுக்காக மட்டக்களப்பு பெரியாஸ்பத்திரியிலே அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருகிறார்.

இந்த நிகழ்வுகளின் பின்னணியை நோக்கும்போது ஜனநாயகம் முற்றுமுழுதாகவே குழிதோண்டிப் புதைக்கப்பட்டிருப்பதோடு, வெகுஜனத் தொடர்புத்துறைக்கு பொறுப்பான பிரதியமைச்சர் என்ற வகையில் ஹிஸ்புல்லாஹ் அவர்கள் கருத்துச் சுதந்திரத்தினை அடியோடு நசுக்கிவிடுவதற்கான எத்தனங்களில் ஈடுபடுவனூடாக தனது பொறுப்பின் நம்பகத் தன்மையினை கெடுத்துக்கொள்வதோடு, நாட்டில் ஏனைய பாகங்களில் வேகமாய் வளர்ந்துவரும் வன்முறை சார்ந்த அரசியல் கலாசாரமொன்றிற்கும் வித்திடுகின்றார். பொலிசாரிடம் சாஜஹான் தாக்கப்பட்டதற்கான காரணத்தை வினவும்போது பிரதியமைச்சரின் முறைப்பாட்டின் அடிப்படையிலேயே தாங்கள் இக்காரியத்தை புரிந்ததாக கூறுகின்றனர். அப்படியாயின் எந்தச் சட்டத்தின் கீழ் இவ்விளைஞர் தடுத்து வைக்கப்பட்டார்? இவர் செய்த குற்றமென்ன? ஜனநாயக நாடொன்றில் யாருமே அரசியலில் ஈடுபடவும், அது தொடர்பான கருத்துக்களை தெரிவிக்கவும் சுதந்திரமும், உரிமையும் இருக்கின்ற தருணத்தில் சாஜஹான் தடுத்துவைக்கப் பட்டதும், அதையும் மீறி மிகக் கடுமையாக பொலிசாரினாலும், பிரதியமைச்சரின் கையாட்களாலும் தாக்கப்பட்டதும் அடிப்படை உரிமை மீறலாகும். இது தொடர்பில் மனித உரிமைக் குழுக்கள் அதிதீவிர நடவடிக்கைகளினை எடுக்க வேண்டும்.

தொங்குநிலையினை அடைந்திருக்கும் முஸ்லிம் காங்கிரஸ் தனது அரசியலை நகர்த்துவதற்கு இவ்வாறான வன்முறைக் கலாசாரங்களை கட்டவிழ்த்து விடுவதனூடாக இதுவரை காலமும் கூறி வந்த குர்ஆன், ஹதீஸ் அடிப்படையிலான அரசியல் வழிமுறை என்ற பொய்யான பித்தலாட்டத்தின், உண்மையான நிலைப்பாட்டினை மக்கள் உணர்ந்து கொள்வதற்கும், இதுவரை காலத்தில் ஏனைய பேரினவாத, இனவாத கட்சிகளையும் விட மோசமான ஒரு அரசியல் போக்கை நோக்கிஅது செல்ல முயல்வதையும் இலகுவாகவே இனங்கண்டு கொள்வதற்கும், இவ்வாறான அடாவடித்தனங்கள் நல்லதொரு ஆரம்பமென கருதப்படுகின்றன! இது தொடர்பில் தங்களது சிம்மாசன நோய்க்கு தீனிபோட முஸ்லிம்களின் உயிர்களையும், காவுகொள்ளட்டுமே!

-மு




# 'இதற்குமேல் முடியாது!'

தமிழ் மக்களின் மீது சிங்கள வீரவிதான இயக்கம் நடத்தும் எதிர்ப்பு இயக்கத்திற்கு எதிரான தமிழ் மக்களின் கண்டனத்தை உறுதி செய்யும் கண்டனப் பொதுக் கூட்டமொன்று 08. 06. 1999 செவ்வாய்க்கிழமையன்று பி. ப. 7.00 மணிக்கு சுகததாச விளையாட்டரங்க ஹொட்டேல் மாநாட்டு மண்டபத்தில் ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸின் அரசியல் பிரிவின் ஏற்பாட்டில் அதன் தலைவர் மனோ கணேசன் தலைமையில் நடைபெற்றது.

பெருந்திரளான தமிழ் பேசும் மக்கள் கலந்து கொண்ட இனவாதத்துக்கு எதிரான கண்டனக் கூட்டத்தின் பேச்சாளர்களாக நவ சம சமாஜக் கட்சி சார்பில் அப்துல் நிசாம், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் சார்பில் குமார் பொன்னம்பலம், பாராளுமன்ற உறுப்பினர்களான வாசுதேவ நாணயக்கார, இரா. யோகராஜன் ஆகியோர் கலந்து கொண்டு பெருகிவரும் இனவாத நடவடிக்கைகளுக்கு எதிரான தமது பலத்த கண்டனங்களைத் தெரிவித்ததோடு, அமைப்பு ரீதியாக அணிதிரட்டப்பட்ட இனவாதத்துக்கு எதிரான தேசிய இயக்கமொன்றை அமைக்கும் அவசியம், அவசரம் குறித்தும் கருத்துத் தெரிவித்திருந்தனர்.

இதற்கிணங்க இனவாதத்துக்கு எதிராக இந்திய வம்சாவளித் தமிழர்கள், ஈழத் தமிழர்கள், முஸ்லீம்கள் ஆகிய தமிழ் பேசும் மக்கள் அனைவரையும் உள்ளடக்கிய ஒன்றுபட்ட எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றையும், கண்டன ஊர்வலமொன்றையும் 11.06.1999 வெள்ளிக்கிழமையன்று கொழும்பு நகர மையப் பகுதியில் நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

கூட்டத்தின் கேள்வி நேரத்தின் போது இனவாதத்திற்கெதிராக இவ்வளவு கதைக்கும் நீங்கள் இனவாதத்திற்கு துணைபோகும் அவசரகாலச் சட்டத்திற்கு ஆதரவாக பாராளுமன்றத்'தில் வாக்களிப்பது ஏன் என்று ஒருவர் கேள்வியெழுப்பினார். இதற்குப் பதிலளித்த யோகராஜன் பா.உ "பாராளுமன்றத்தில் நான் விரும்பாமல் செய்யும் காரியம் இது ஒன்றுதான். எமது மக்களின் நலன்களுக்காக இதைச் செய்ய வேண்டியுள்ளது. இதற்கு மேல் இதை விளக்க முடியாது"என்றார்.

-எஸ்..எஸ்

# ஊருக்கு உபதேசம்!

" படையினரால் மீட்கப்பட்டுள்ள பகுதிகளைப் பார்வையிட வேண்டுமானால் எம்முடன் வாருங்கள். பத்திரிகைகளில் வெளியாவதைக் கொண்டு விமர்சிப்பதில் பலன் இல்லை. ஐ.தே.கவும், தமிழ்க் கட்சி உறுப்பினர்களும் இங்கு தெரிவிப்பதற்கு மாற்றமான நிலையை நேரில் சென்று பார்வையிடலாம். "

" நீர்ப்பாசன, மின் சக்தி, எரிபொருள்துறை அமைச்சரும், பிரதிப் பாதுகாப்பு அமைச்சருமான ஜெனரல் அனுருத்த றத்வத்த பேசிய போது தமிழ்க் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் மௌனம் சாதித்தார்கள். "

" பாராளுமன்றத்திலும், வெளியிலும் தமிழ் மக்கள் படும் துன்ப, துயரங்கள் சம்பந்தமாகக் காட்டமான அறிக்கை விடும் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் அரச தரப்பில் இருந்து வரும் உண்மைக்குப் புறம்பான தரவுகளுக்கு உண்மை நிலையினை, தமது சார்பு நியாயமான கருத்துக்களைத் தெரிவிக்கத் தயங்குவது ஏன்?"

'' அரசு தரப்பால் மீட்கப்பட்ட பகுதிகளில் தமிழ் மக்கள் முகம் கொடுக்கும் பிரச்சினைகள், தாம் - தமது கட்சியைச் சார்ந்தவர்கள் முகம் கொடுக்கும் மோசமான நிகழ்வுகளை அறிந்திருந்தும், சந்தர்ப்பங்களைப் பயன்படுத்திக் கொள்ளாமல் மௌனமாகத் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் அமர்ந்திருப்பது தமிழ் மக்களின் நம்பிக்கைக்குச் செய்யும் துரோகமாகும். "

" புரிந்து கொள்வார்களா ? " என்ற தலைப்பின் கீழ் உமா பாஸ்கரனை ஆசிரியராகக் கொண்டு கொழும்பில் இருந்து வெளிவரும் " தாய்மொழி " என்ற சஞ்சிகையின் 12.05.99 திகதிய மொழி (இதழ்) 03 இன் ஆசிரியர் தலையங்கமே இதுவாகும். ஆசிரியர் தலையங்கத்தில் கூறப்பட்டுள்ள எந்த விடயத்துடனும் எவருக்கும் முரண்பாடான கருத்துக்கள் எதுவும் இருக்க முடியாது. ஏனெனில் அவையனைத்துமே தமிழ் பேசும் மக்களைப் பொறுத்த வரையில் நிதர்சனமான உண்மைகள் ஆவதால். ஆனால் பிரச்சினை அதுவல்ல. மாறாக அதனை எழுதிய ஆசிரியர் யாரென்பது. மேற்படி பொன்மொழிகளை உதிர்த்தவர் வேறு யாருமல்லர், யாழ்ப்பாண மாவட்டத்திலிருச்து ஒரு சில வாக்குகளை மட்டும் பெற்றுப் பாராளுமன்றம் சென்று மாதாந்தம் தமழ் பேசும் மக்களுக்கு எதிராகப் பயன்னடுத்தப்படும் அவசரகாலச் சட்ட நீடிப்புக்கு ஆதரவாக வாக்களிக்கும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் தலைமைப் பீடத்தின் முக்கிய உறுப்பினாகள் ஒருசிலருள் ஒருவர்,

ஏந்கனவே அந்தக் கட்சியைச் சேர்ந்த ரமேஸ் எனப்படும் அந்புதராஜா நடராஜா நெய்துவரும் அந்புதங்கள் தினமுரசு ஊடாக வெளிவந்து கொண்டிருக்கின்நன. இப்போது தாய்மொழியும் சொல்கிநது. நான் எப்பெ இருக்கிநேன் என்நு பார்க்காதே நான் எழுதுவதைப் பார் என்று ஒருமுநை கூநினார். இவர்களும் அவர்களது வழியில் செயந்படுகிநார்கள் போலும்.

ஊருக்குத்தான் உபதேசம் உனக்கல்லடி கண்ணே !

-எஸ்..எஸ்

# யுத்தத்தினால் இடம் பெயர்ந்த வடபகுதிப் பெண்கள் !

-தர்மா மொஹொட்டால.

வட பகுதி இன்னும் அகதி முகாம்களால் நிறைந்து காணப்படுவதனால், யுத்தத்தினால் இடம்பெயர்ந்துள்ள இலங்கையர்களின் குடும்பங்கள் தொடர்பாக இதுவரை செய்யப்பட்ட ஆய்வுகள் எதுவுமே அவ்வளவு வெற்றிகரமான விளைவைத் தரவில்லை என்று தோன்றுகின்றது. யுத்தத்தினால் இடம்பெயர்ந்துள்ள அநேக குடும்ப அலகுகளில் முக்கியமாக, யுத்த அடக்குமுறைகளினாலான துன்புறுத்தல்களை அவற்றை அனுபவிப்பவர்கள் பெண்களும், குழந்தைகளுமேயாவர். அவர்களின் பாதுகாப்பின்மையானது, முறிவுற்ற குடும்ப அலகுகளைத் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டிநிற்கின்றது.

வட - கிழக்குப் பிரதேசங்களில் நடைபெறும் யுத்த நடவடிக்கைகளின் காரணமாகக் கொல்லப்படுபவர்கள், காயப்படுபவர்கள் மத்தியில் நிராயுதபாணிகளான பெண்களும், குழந்தைகளும் இலக்காக்கப்படுவது இங்குள்ள பெரும் கவலைக்குரிய விடயமாகும்.

தங்களுடைய இருப்பிடங்களை இழந்து இடம்பெயர்ந்து, அகதி முகாம்களைப் போலவே வேறு பிரதேசங்களுக்கு வந்து குவிந்துள்ள இவர்கள் பற்றித் தெளிவான வேலைத் திட்டங்கள் எதுவுமே இற்றைவரை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாகக் கூற முடியுமா ?

" சூரியக் கதிர் " நடவடிக்கையின் பின்பு யாழ்ப்பாணக் குடா நாட்டில் மட்டும் இரண்டு இலட்சத்து நாற்பதாயிரத்து இருநூறு பேரை மீளக் குடியமர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தாலும், இந்தப் பிரதேசங்களில் உள்ள சுற்றுப் புறச் சூழல் மாசடைதலைப் போலவே ஆபத்தான, அபாயகரமான சூழ்நிலைகளும் இடம்பெயர்ந்துள்ள குடும்ப அலகுகளை வெகுவாகப் பாதித்துள்ளதாகப் புனருத்தாரண அதிகார சபை கூறுகின்றது.

சுத்தமான குடிநீர் இல்லாமையைப் போலவே உணவு நஞ்சூட்டப்படுதலும்(Food Poisioning) இந்தப் பிரதேசங்களில் தெளிவாகவே காணக்கிடைக்கின்றன. பிள்ளைகளைப் போலவே பெண்களதும் சுகாதார நிலைமைகளுக்கு இந்தக் குறைபாடுகள் நேரடியான காரணங்களாக உள்ளன.

கணவர்களை இழந்த இவ்வாறான குடும்பங்களின் பொருளாதாரப் பாதுகாப்பைச் சாதாரணமாக எடுத்துக் கொள்ள முடியாது. அநேகமாகத் தம்மைப் பாதுகாத்த தமது கணவாமார் அல்லது மகன்மார் இவ்வாறான வீடுகளுக்கு இல்லாது போயுள்ளனர். அதனால்தான் நிலவும் சூழ்நிலைக்கு ஏற்றவிதத்தில் இசைவாக்கமடைந்து, பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பப் பெண்கள் முன்னே வரவேண்டி ஏற்பட்டுள்ளது.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் யுத்த அழுத்தங்களின் ஒருவித குரூர நிர்ப்பந்தமான பாலியல் வல்லுறவுக்கும் இந்தப் பெண்கள் வக்கிரமமான முறையில் முகங்கொடுக்கின்றனர். அநேகமாக நேரில் பார்த்த சாட்சியங்கள் இல்லாமை காரணமாக இவ்வாறான பெண்கள் பாலியல வல்லுறவு தொடர்பாக முறைப்பாடு செய்வது இருட்டடிப்புச் செய்யப்படுகின்றது என்பது தெரிகின்றது. ஆயுதப் படைகளுக்கோ அன்றிப் பொலிசுக்கோ எதிராகச் செல்லத் தம்முள் பலம் இல்லாதமையினாலே இவ்வாறான சம்பவங்களைச் சட்டத்தின் முன்னிலையில் கொண்டு வருவதற்கோ, அதற்காக நீண்ட காலமாக நீதிமன்றத்தில் தோற்றவோ வட - கிழக்குப் பிரதேசத்தின் பெண்களுக்கு ஆற்றல் இல்லாது உள்ளது. ஆயுதப் படைகளினால் மட்டுமன்றிப் பயங்கரவாதக் குழுக்கள் மத்தியில் இருந்தும் தமக்கு விடுக்கப்படும் இவ்வாறான துன்புறுத்தல்கள் தொடர்பாக எழுச்சி பெற அவர்களுக்குப் பலம் ஏதுமில்லை.

இராணுவத்திற்குச் சார்பானவர்கள் என்ற சந்தேகத்துக்குட்பட்ட சந்தர்ப்பங்களில் இந்த யுத்தமயச் சூழலினுள் சிக்குண்டுள்ள அவர்கள் தமது உயிர்களைத் துப்பாக்கித் தோட்டாக்களுக்குப் பலிகொடுத்த சந்தர்ப்பங்கள் ஏற்பட இடமுள்ளதாகத் தினசரிப் பத்திரிகை அறிக்கைகளில் இருந்து தெரிய வருகின்றது. எந்த விதத்திலாவது தமது குடும்பங்களை முன்பு போல பாதுகாப்பானதாகக் கொண்டு வருவதற்கு இவ்வாறு இடம் பெயர்ந்து வந்தவர்களுக்கு உள்ள வசதி, வாய்ப்புக்கள் மிகவும் குறைவானதே.



வட - கிழக்கு மாகாணங்களிலில் இடம்பெற்ற படுகொலைகள், பாலியல் வல்லுறவுகள், கடத்தல் தொடர்பான சில சம்பவங்கள் பொலிஸ் பதிவுகளிலிருந்து நீதிமன்றத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு விசாரிக்கப்பட்டு வரும் சந்தர்ப்பங்கள் இருந்தாலும் அவற்றைச் சுற்றிச் சட்டத்தரணிகளைப் போலவே அமைப்பாக்கப் பெற்ற மனித உரிமைகள், பெண்கள் அமைப்புக்களும் இருப்பதாகத் தெரிகின்றது. இதனால்தான் இந்தச் சம்பவங்களை இருட்டடிப்புச் செய்துபோட முடியாது போயுள்ளது. அண்மையில் விசாரணை செய்யப்பட்ட, பெரும் பரபரப்பை ஏற்படுத்திய தீர்ப்பைப் பெற்றுக் கொடுத்த

" கிருஸாந்தி குமாரசுவாமி வழக்கு " அதற்குச் சிறந்த நிதர்சனமாகும். ஆனாலும் மிகவும் அரிதான சம்பவங்களாக வெளிவரும் இவ்வாறான சந்தர்ப்பங்களைப் பிரித்தெடுத்துக் காட்டி இந்தவிதமான அனைத்துக் குற்றச் செயல்களும் வெளிப்படுத்தப்படுவதாக எம்மால் கூறமுடியாது. அனேகமாக வட - கிழக்குப் பிரதேசத்தில் நடைபெறும் பெண்கள் மீதான பாலியல் வல்லுறவு, படுகொலை, ஆட்கடத்தல் ஆகிய சம்பவங்கள் தொடர்பாகத் தமிழ்ப் பத்திரிகைகளில் மட்டுமே பிரதானமாகச் செய்திகள் வெளிவருகின்றன. அதனால்தானோ என்னவோ பரந்த மக்களின் அவதானத்தைப் பெற்றுக்கொள்ளவோ அன்றி நியாயமான தீர்வொன்றைப் பெற்றுக்கொள்வதற்காக சட்டத்தின் முன் வரும் ஆற்றலோ அங்கு வாழும் தமிழ் மக்களைப் போலவே சிங்கள மக்களுக்கும் இல்லாது போயுள்ளது.


இந்த யுத்தமய நிலைமைகளினுள் இடம்பெறும் சிவில் மரணங்கள், காயப்படுதல் சம்பவங்கள் தொடர்பாக முழுமையான அறிக்கைகளைப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்புக்கள் அரிதாகவே காணப்படுவது தெரிகின்றது. யுத்த நடவடிக்கைகளின் போது நடத்தப்படும் எறிகணைத் (Shell) தாக்குதலகள் அல்லது வேறு தாக்குதல்கள் காரணமாகக் கொல்லப்படும் நிராயுதபாணிகளான பொது மக்களின் உயிர் தொடர்பாக இதனையும்விட அதிகமாகக் கவனஞ் செலுத்தப்படவேண்டுமென்பதுடன், அவர்கள் கொலை செய்யப்படுவதைக் குறைப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் என்பதனைப் பொறுப்பு வாய்ந்தவர்களுக்கு நினைவூட்ட வேண்டும்.

நபர்களைக் கடத்துதல் தொடர்பாகவும் சம்பவங்கள் முறையான சட்டமய வேலைத் திட்டமொன்று இன்னும் நடைமுறையில் செயற்படும் என எம்மால் நம்பிக்கை வைக்க முடியாது. அதிகாரத்துடன் உள்ள ஆயதப் படைகளைப்போலவே பயங்கரவாதக் குழுக்களும் தமது தரப்பினருக்கு எதிராகச் செல்லும் எவரையாவது கடத்திச் சென்று தடுத்து வைப்பதற்கோ அல்லது விசாரணை செய்வதற்குப் பெரும் முயற்சியில் ஈடுபடுவதாக வட - கிழக்குப் பிரதேசங்களில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. எவ்வாறெனினும் இந்த அனைத்து விடயங்களினாலும் மிகுந்த அழுத்தங்களுக்கு உள்ளாகியிருப்பவர்கள் பெண்களும், குழந்தைகளுமேயாவர். இந்த யுத்தச் சூழலினுள் முக்கிய அல்லது பிரதான கைதிகளாக அவர்கள் தம்மை அடையாளம் அல்லது இனங் கண்டுள்ளனர்.

ஆயுதப் படைகளின் நடவடிக்கைகள் தொடர்ந்தும் நிலவும் அல்லது நடைபெறும் நிலைமையினுள் வட - கிழக்குப் பிரதேசங்களில் நடைபெறும் இடப்பெயர்வுகள் பிரதான பிரச்சினையாக, நீண்ட காலமாக நிலவுவதாகப் புலப்படுகின்றது. இடப்பெயர்வுகள், மீளக் குடியமர்த்தல்களினுள் ஏற்படும் கிளைப் பிரதிபலன் பெண்கள் மீது விசேடமான விதத்தில் பாதிப்புக்களை ஏற்படுத்தும் என்பது இரகசியமல்ல. ஜீவனோபாயம் இல்லாதுபோதல், பாதுகாப்பு நிலைமையுடன் செயற்படவேண்டி இருப்பது, மீளக் குடியேறும் இடம் தொடர்பாக ஏற்படும் பிரச்சினைகளைப் போலவே குடும்பத்தினதும், பிரஜைகளின் பொறுப்புத் தொடர்பாகப் பெண்களுக்குக் கஷ்டங்கள் ஏற்படக் கூடிய வாய்ப்புக்களும் இவற்றுள் பிரதானமானவையாகும்.

மீளக் குடியமர்த்தப்படுபவர்கள் மத்தியில் தனிமைப்படுத்தப்பட்ட பெண்களின் நூற்று வீதம் உயர்ந்துள்ளது. பெண்கள் பிரதானமாக இங்கு பொறுப்புடன் பிணைக்கப்பட்டுள்ளார்கள். இருப்பிடங்களைக் கண்டுபிடித்தல், உணவும், ஜீவனோபாயம் ஆகியனவற்றைக் கண்டுபிடிப்பதில் பெண்கள் மிகுந்த பாதகமான அல்லது பிரதிகூலமான நிலைமையினுள் இருப்பது என்பது மிகப் பெரிய உண்மையாகும்.

இந்த நிலைமை வட - கிழக்கு யுத்த வலயத்தினுள் முக்கிய பிரச்சினை என்பதால் இதனை ஆகக் குறைந்தளவாக்கல் (minimise) செய்வதற்கான இயன்ற அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பது குறித்து அரசாங்கத்தின் கவனம் குவிக்கப்பட வேண்டும் என்பதை நினைவூட்டி வைப்போம்.



நன்றி : லக்பிம - 19990530.
தமிழில் : சீ. செ. ராஜா
படங்கள் எம்.கே.எம்.ஷகீப்

## இந்திய–பாகிஸ்தான் போர்:

# சிக்கித் தவிக்கும் காஷ்மீர் மக்கள்!

மீண்டும் ஒரு காமீஸ்மீர் போர் ஆரம்பித்துவிட்டது. இந்தத் தடவை இந்தியத்தரப்பிற்கு ஒரே அதிர்ச்சி. தனது புலனாய்வு நிபுணர்களுக்கு எல்லாம் தண்ணிகாட்டி விட்டு காஸ்மீர் தீவிர வாதிகள் ஆயிரக்கணக்கில் இந்தியாவின் கட்டுப்பாட்டில் உள்ள திராஸ், கார்கில், பட்டலிக், முஸ்கோ பகுதிகளை கைப்பற்றி ஊடுருவியிருந்தார்கள். கட்டுப்பாட்டு எல்லைக் கோட்டிற்கு அருகில் இருக்கும் இப்பகுதி கடல் மட்டத்திலிருந்து 15 ஆயிரம் முதல் 18 ஆயிரம் வரையிலான உயரத்தினையுடையது. இப்பிரதேசத்தையும், இந்தியக் காஸ்மீரின் கோடைக்கால தலைநகரான சிறிநகரையும் இணைக்கும் தேசிய நெடுஞ்சாலையும் தீவிரவாதிகள் குண்டு வைத்து தகர்த்துள்ளனர்.

மலையின் உச்சியிலிருந்து தீவிரவாதிகள் தாக்கிக் கொண்டிருப்பதனால் இந்திய இராணுவத்தின் நிலை மிகக் கடினமாகியுள்ளது. மலை உச்சியை நோக்கிச் செல்லும் இந்தியப் படைகளை உச்சியிலிருந்து தாக்குவதினாலும், போக்குவரத்துப்பாதை தகர்க்கப்பட்டிருப்பதனாலும் தரைவழியாக விரைவில் செல்ல முடியாத நிலையில் அவர்கள் உள்ளனர். இதனால் விமானத் தாக்குதல்களையே அதிகளவில் நம்பியிருக்க வேண்டியுள்ளது. ஆனால் அதிலும் இரு பிரதான சங்கடங்கள் உள்ளன. ஒன்று தீவிரவாதிகள் ஸ்ரிஞ்சர் ஏவுகணை போன்ற விமான எதிர்ப்பு ஆயுதங்க்ளையும் வைத்திருக்கிறார்கள் என்பது. இதனால் மிக உயரமான இடத்தில் இருந்தே தாக்குதல்களை மேற்கொள்ள வேண்டி உள்ளது. இதனாலும் தீவிரவாதிகள் பாதுகாப்பான பங்கர்களை உருவாக்கி எதிர்த்தாக்குதல்களை மேற்கொள்வதாலும் விமானத் தாக்குதல்களும் கடினமாகி விடுகின்றது. தீவிரவாதிகளின் முகாம்களை துல்லியமாக அடையாளம் காண்பதில் மிகச் சிக்கலை எதிர் நோக்க வேண்டியுள்ளது.

இரண்டாவது இப்பிரதேசம் கட்டுப்பாட்டு எல்லைக் கோட்டிற்கு மிக அருகில் இருப்பதனால் விமானங்கள் பாகிஸ்தான் எல்லைக்குள்ளும் சில வேளைகளில் செல்ல வேண்டி ஏற்படுகின்றது. அப்போது பாகிஸ்தான் இராணுவத்தினரின் எதிர்ப்பையும் சந்திக்க வேண்டியுள்ளது. குண்டு வீச்சுக்கள் பலவும் இலக்குமாறி பாகிஸ்தான் எல்லைக்குள் உள்ள கிராமங்களையும் தாக்கியுள்ளன. இதனால் ஏற்படுகின்ற இழப்புக்களை பாகிஸ்தான் சர்வதேச ரீதியான பிரச்சாரமாக்கி விடுகின்றது. இதைவிட தன்னுடைய எல்லைக்குள் பிரவேசித்துள்ளது எனக் குற்றம் சாட்டி இரண்டு விமானங்களையும் சுட்டு வீழ்த்தியுள்ளது. தீவிரவாதிகள் ஒரு ஹெலிகொப்ரரை சுட்டு வீழ்த்தியுள்ளனர்.

தேர்தல் காலத்தில் இப்பிரச்சினைக்கு முகம் கொடுப்பது என்பது வாஜ்பாய் அரசுக்கு மிகப்பெரிய சவாலாக உள்ளது. தாங்கள் சுறுசுறுப்பாக இருக்கின்றோம் என்பதைக் காட்டுவதற்கு பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்ணான்டஸ் காஸ்மீரிலுள்ள சியாச்சின் மலை உச்சிக்குச் சென்று நிலமைகளை பார்வையிட்டார். பிரதமர் வாஜ்பாய் கடந்த மாதம் மூன்றாம் வாரம் நாள் முழுவதும் இராணுவத் தலைமையக நடவடிக்கை அறையில் இருந்தார். எதிர்க் கட்சியான காங்கிரஸ் பாரதீய ஜனதாவை ஒரு பிடி பிடிக்க இவ்வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றது.

### காஸ்மீர் பிரச்சினையின் வரலாறு

காஸ்மீர் பிரச்சினையை பிரித்தானியர் உருவாக்கி விட்ட பிரச்சினை என்றே கூறலாம். காஸ்மீர் பிரதேசம் சமஸ்தான அரசுக்கு உட்பட்ட பிரதேசமாகவே சுதந்திர காலத்தில் இருந்தது. அங்கு முஸ்லீம்கள் பெரும்பான்மையாக வாழ்ந்த போதும் "ஹரிசிங்" எனப்பெயர் கொண்ட இந்துவே மன்னராக இருந்தார். சுதந்திரத்தின் போது சமஸ்தான அரசுகள் தாம் விரும்பியவாறு செயற்படலாம் என பிரித்தானியா கூறியது. அதாவது இவ்வரசுகள் இந்தியாவுடனோ, பாகிஸ்தானுடனோ இணைந்து கொள்ளலாம் இரண்டுடனும் இணையவிரும்பாவிட்டால் தனியாராக செயற்படலாம் எனக் கூறியது. காஸ்மீர் மன்னர் தனியரசாக செயற்படவே விரும்பினார் அதற்கான முடிவையும் அறிவித்தார். பாகிஸ்தான் பிரிவினைக்கு மூன்று நாட்களுக்கு முன்னர் பொருளாதார போக்குவரத்துச் சேவைகளுக்கு காலனித்துவ காலத்தில் இருந்த நிலையைத் தொடர்ந்து பின்பற்றுவதற்கு இந்தியாவுடனும், பாகிஸ்தானுடனும் ஒப்பந்தங்கள் செய்து கொள்ள தயார் எனக் குறிப்பிட்டார்.




ஆனால் பாகிஸ்தானின் நிலைப்பாடு வேறாக இருந்தது. அது சுதந்திர காலத்தின் போது முன்வைத்த இரு தேசக் கோட்பாட்டினையே முன்வைத்தது. அதாவது இந்திய உபகண்டம் முஸ்லீம்களின் பிரதேசம், முஸ்லீம் அல்லாதவர்களின் பிரதேசம் என இரு பிரதேசங்களாக பிரிக்கப்பட வேண்டும். இவற்றில் முஸ்லீம்களின் பிரதேசம் பாகிஸ்தானுடனும், முஸ்லீம்கள் அல்லாத பிரதேசம் இந்தியாவுடனும் இணைக்கப்படல் வேண்டும். இந்த வகையில் காஸ்மீர் பிரதேசம் பாகிஸ்தானுடன் இணைக்கப்படல் வேண்டும் என்பதே பாகிஸ்தானின் கருத்தாக இருந்தது.


JKLF தலைவர் அமனுல்லாகான்

இவ்விரு தேசக் கோட்பாட்டின் அடிப்படையில் சுதந்திரம் கிடைத்து ஆறு மாதத்திற்கிடையில் காஸ்மீர் பழங்குடியினரின் ஆதரவுடன் காஸ்மீர் அரசுமீது படையெடுப்பை நடாத்தியது.

காஸ்மீர் மன்னர் "ஹரிசிங்" இந்தியாவின் உதவியை நாடினார். இந்தியப் பிரதமர் நேரு காஸ்மீரை இந்தியாவுடன் இணைக்கும் முடிவை எடுத்தாலன்றி உதவ முடியாது எனக் கூறினார். 1947 ஒக்டோபர் 23இல் மன்னர் ஹரிசிங் காஸ்மீரை இந்தியாவுடன் இணைக்க முடிவெடுத்தார். 1947 ஒக்டோபர் 26ம் திகதி அதற்கான ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டார்.

ஒப்பந்தம் முடிந்த கையோடு இந்திய இராணுவம் காஸ்மீரில் படையெடுப்பை நடாத்தியது. பாகிஸ்தான் இராணுவத்தை



ஊரி என்னும் இடம் வரை துரத்தி சிறீநகரை தனதாக்கியது. யுத்தத்தின் முடிவில் காஸ்மீரின் 2/3 பகுதி இந்தியாவின் ஆதிக்கத்திற்குள் வந்தது. 1/3 பகுதி பாகிஸ்தானின் ஆதிக்கத்தில் தொடர்ந்திருந்தது. இந்தியா தான் கைப்பற்றிய பிரதேசத்திற்கு ஜம்மு காஸ்மீர் எனப் பெயரிட்டு இந்தியாவின் ஒரு மாநிலமாக்கியது. பாகிஸ்தானின் ஆதிக்கத்திலிருந்த காஸ்மீருக்கு பாகிஸ்தான் ஆஸாத் காஸ்மீர் அதாவது சுதந்திர காஸ்மீர் எனப்பெயரிட்டு தன்னுடைய ஒரு பிரதேசமாக்கியது.

1948ம் ஆண்டு முதலே காஸ்மீர் பிரச்சினை ஐ.நா.பாதுகாப்புச் சபைக்குக் கொண்டு வரப்பட்டது. 1949 ஜனவரி 5இல் பாதுகாப்புச் சபை காஸ்மீர் நிலையினைத் தீர்மானிக்க காஸ்மீர் மக்களிடம் ஒரு சர்வஜன வாக்கெடுப்பு நடாத்தப்பட வேண்டும் எனக் கூறியது. ஆரம்பத்தில் இதனை ஏற்றுக் கொண்ட இந்தியா-பாகிஸ்தான் இராணுவம் காஸ்மீரின் ஒரு பகுதியில் இருக்கும் வரை இதனை நடாத்த முடியாது எனக் கூறிப் பின் வாங்கியது. இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஐ.நா.சபை பல தடவைகள் முயன்ற போதும் இருநாடுகளும் ஒரு உடன்பாட்டிற்கு வரவில்லை. 1957ம், 1962ம் ஆண்டுகளில் இவ்வாறான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. 1962 இல் ஐ.நா சபையில் காஸ்மீர் தொடர்பான விவாதம் நடைபெற்றது. இரு தரப்புப் பேச்சுவார்த்தை தொடங்கப்பட வேண்டும் என அயர்லாந்து தீர்மானம் கொண்டு வந்த போதும் சோவியத் யூனியனின் தனக்குள்ள மறுப்பாணை அதிகாரத்தினைப் பயன்படுத்தி நிராகரித்தது.

1965இல் காஸ்மீர் தொடர்பாக மீண்டும் ஒரு போரில் இந்தியாவும் பாகிஸ்தானும் ஈடுபட்டது. 1965 மார்ச் மாதத்தில் தொடங்கிய போர் 1965 செப்டம்பர் 23வரை தொடர்ந்தது. இறுதியில் ஐ.நா. சபையின் செயலாளர் ஊதாண்ட் இன் முயற்சியினால் போர் நிறுத்த ஒப்பந்தம் கைச் சாத்திடப்பட்டது.

போர் நிறுத்தம் ஏற்பாட்டாலும் பகைமை உணர்வுகள் முற்றுப் பெறாததினால் சோவியத் யூனியன் பிரதமர் சோவியத் நகரங்களில் ஒன்றன தாஷ்கண்ட் இல் இருநாட்டுத் தலைவர்களையும் சந்திக்கச் செய்தார். அங்கு வைத்து தாஸ்கண்ட் உடன்படிக்கை 1966 ஜனவரி 10இல் கைச்சாத்திடப்பட்டது. இந்தியா சார்பில் நேருவுக்கு பின் பிரதமரான லால்பகதுார் சாஸ்திரியும், பாகிஸ்தானின் சார்பில் ஜனாதிபதி அயூப்கானும் கையொப்பமிட்டனர். எனினும் ஒப்பந்தம் முடிந்து அடுத்த நாள் ஜனவரி 11இல் இந்தியப் பிரதமர் மாரடைப்பினால் மரணமானதால் ஒப்பந்தம் விரைவில் செயலற்றதாக மாறியது.

1971இல் பங்களாதேஷ் பிரச்சினை தொடர்பாக இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே போர் மூண்டது. போரில் இந்தியா வெற்றியீட்டியதைத் தொடர்ந்து 1972 யூலையில் இமாச்சல பிரதேசத்தின் தலைநகரான சிம்லாவில் சிம்லா உடன்படிக்கை கைச்சாதிடப்பட்டது. இவ்வுடன்படிக்கையின்டி பாகிஸ்தான் இந்தியாவுக்கு இடையிலான எல்லைக் கோடு உத்தரவாதப்படுத்தப்பட்டு இரு நாடுகளும் அவ் எல்லையை மதித்து நடக்க வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது.

இதே வேளை இந்தியா ஜம்மு-காஸ்மீரில் முஸ்லீம்களைக் கொண்டு ஷேக் அப்துல்லா தலைமையில் ஜம்மு காஸ்மீர் மாநாட்டுக் கட்சி என்ற பெயரில் ஒரு பொம்மைக் கட்சியையும் உருவாக்கியது. மாநில அரசாங்கம் இப்பொம்மைக் கட்சியிடம் கொடுக்கப்பட்டது. தீவிரவாதிகளின் தாக்குதலினால் இப்பொம்மை அரசாங்கம் நிலைக்குலைந்த போது ஆளுநர் ஆட்சி நீண்டகாலத்திற்கு நடைமுறையில் இருந்தது. தற்போது ஜம்முகாஸ்மீர் மாநாட்டுக் கட்சி மீண்டும் மாநில அரசாங்கத்தினைப் பொறுப்பேற்றுள்ளது. ஷேக் அப்துல்லாவின் மகன் பாருக் அப்துல்லா தற்போது அக்கட்சியின் தலைவராகவும் மாநில முதலமைச்சராகவும் விளங்குகின்றார்.

மறுபக்கத்தில் காஸ்மீர் மக்களுக்கு விடுதலை வேண்டும் எனக் கோரி காஸ்மீர் மக்கள் மத்தியில் இருந்து பல விடுதலை இயக்கங்கள் உருவாகின. அவற்றுள் பிரதானமானதும் காலத்தால் முந்தியதுமான விடுதலை இயக்கம் J.K.L.F என அழைக்கப்படும் ஜம்மு காஸ்மீர் விடுதலை முன்னணி யாகும். அமானுல்லாகான் என்பவர் அதன் தலைவராகவும் ஜாவித் மீர் என்பவர் இராணுவத் தளபதியாகவும் விளங்குகின்றனர்.

காஸ்மீர் இந்தியாவுடனோ, பாகிஸ்தானுடனோ சேரக் கூடாது அது சுதந்திரமான மத சார்பற்ற அரசாக இருக்க வேண்டும் என்பதே இவ் இயக்கத்தின் கொள்கையாகும். இக்கொள்கை பாகிஸ்தானின் விரிந்த முஸ்லீம் அரசு என்ற கோட்பாட்டிற்கு எதிராக இருந்த போதும் பாகிஸ்தான் இந்தியாவை எதிர்ப்பதற்கு ஒரு கருவி என்ற வகையில் அதனை ஆதரித்து வந்தது. ஆனால் காலப்போக்கில் இவர்களது போக்கு தனது நலனுக்கு சரிவராது என்று கருதவே இவர்களைக் கை விட்டு தனக்குச் சார்பாக புதிய இயக்கங்கள் உருவாக்கி வளர்க்கத் தொடங்கியது. 1992 பெப்ரவரி 12இல் JKLF கட்டுப்பாட்டுக் கோட்டை உடைத்துக்கொண்டு இந்திய காஷ்மீருக்குள் வருவதற்கு ஆர்பாட்டம் நடாத்திய போது பாகிஸ்தான் இராணுவம் அவ்வார்ப்பாட்டக்காரர்களை கொடுமையாக நசுக்கியது. 12 JKLF உறுப்பினர்கள் கொல்லப்பட்டார்கள். நூற்றுக் கணக்கானவர்கள் காயப்பட்டார்கள். தலைவர் அமானுல்லாகான் உட்பட பல முக்கியஸ்தர்கள் பாகிஸ்தான் இராணுவத்தால் கைது செய்யப்பட்டார்கள். கண்ணீர்ப் புகைக் குண்டுகளும் வீசப்பட்டன. இம்மோதலின் ஆது KIF ஆதரவாளர்கள் இந்தியாவிற்கு எதிரானதைவிட பாகிஸ்தானுக்கு எதிராக அதிகளவிலான கோஷங்களை எழுப்பினர். அவற்றில் ஒன்று நவாஸ்ஷெரீப் நரசிம்மராவின் ஜால்ரா என்பதாகும்.

நாங்கள் சுதந்திரம் பெறுவதை பாகிஸ்தான் தடுக்க முயன்றால் நாங்கள் அவர்களையும் எதிர்த்து போராட நேரிடும் என்று JKLF துணைப் பொதுச் செயலர் S.A ஆந்தரவி கூறினார். இப்போது எங்களைப் பொறுத்தவரை இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் வித்தியாசமில்லை என்றார் JKLF இராணுவத் தளபதி ஜாவீத்மீர். அவர்கள் உயிரோடு என்னைக் கைது செய்ததற்குப் பதில் என்னைப் பிணமாக எடுத்துச் சென்றிருக்கலாம் என்றார் JKLF தலைவர் அமானுல்லாகான்.

1989க்கு பின்னர் புதிய இயக்கங்கள் பல வளரத் தொடங்கி இன்று சுமார் 12 இயக்கங்கள் நடைமுறையில் செயற்படுகின்றன. இவற்றுள் "ஹிஸ்புல் முஜாஹிதீன், தாரிகுல் முஜாஹிதீன், தாரிக் ஏ.ஜிஹாத், லங்கர் இ.தைபா, அல்பதர் அல்உமர், ஹர்கத் உல் அன்சார், முஸ்லீம் ஜன்பார்ஸ் போர்ஸ் என்பன முக்கியமானவையாகும். இவற்றுள் ஹர்கத் உல் அன்சார், லங்கர்.இ.தைபா, ஹில்புல் முஜாஹிதீன் போன்ற இயக்கங்களில், பாகிஸ்தானியர்களும் அங்கம் வகிப்பதாகக் கூறப்படுகின்றது.

இவ் இயக்கங்களில் அனேகமானவை விரிந்த முஸ்லீம் அரசு என்ற கோட்பாட்டையே கொண்டுள்ளன. காஸ்மீர் பாகிஸ்தானுடன் இணைக்கப்பட வேண்டும் என்பதையே இவை ஆதரிக்கின்றன.

தற்போது இப்பாகிஸ்தான் சார்புக் குழுக்களைச் சேர்ந்தவர்களே பாகிஸ்தானின் கட்டுப்பாட்டிலுள்ள காஸ்மீரிலிருந்து ஆயிரக்கணக்கில் ஊடுருவியிருப்பதாக கூறப்படுகின்றது.

பாகிஸ்தான் இப்போரின் மூலம் எவ்வாறாயினும் விரிந்த பாகிஸ்தான் என்ற தனது கொள்கையை செயற்படுத்தவே, முனைகின்றது. இந்தியா மறுபக்கத்தில் இதனை காஸ்மீர் பிரச்சினையாக்குவதை விட இந்தியா-பாகிஸ்தான் தகராறகாகவே சித்திரிக்க முனைகின்றது பாகிஸ்தான் வெளிநாட்டு கூலிப்பட்டாளங்களைக் கொண்டு இந்தியாவை ஆக்கிரமிக்க முனைகின்றது. என்றே பிரச்சாரம் செய்கின்றது. இந்திய அரசியல்வாதிகள் வலதுசாரிகள் தொடக்கம் மாநிலக் கட்சிகள் ஊடாக இடதுசாரிகள் வரை இவ்வாறான பிரச்சாரத்தையே மேற்கொள்கின்றனர்.

இத்தனைக்கும் மத்தியில் காஸ்மீர் மக்களும் அவர்களின் சுய நிர்ணய உரிமையும் பின்தள்ளப்பட்டது தான் மிகப் பெரிய கோசம்.

இந்திய நலன்களுக்கும், பாகிஸ்தான் நலன்களுக்ளும் இடையில் காஸ்மீர் மக்கள் பந்தாடப்படுகின்றனரே ஒழிய அவர்களின் நலன்களைப் பற்றி கவலைப்படுவர் யாருமில்லை.

தமது சொந்தப் பலத்தில் நிற்க முனையாத விடுதலை இயக்கங்களுக்கு எல்லாம் இது நல்ல பாடமாக அமையட்டும்.

இரவல் படைமூலம் நடைபெறும் புரட்சி ஒரு போதும் விடுதலையைப் பெற்றுத் தராது என்பதற்கு காஸ்மீர் ஒரு நல்ல எடுத்துக்காட்டு.

**-சி. அ. யோதிலிங்கம்-**



# சிறைக்கூடங்களில் சித்திரவதைகள்!

'இலங்கையின் மனித உரிமை மீறல்களில் சித்திரவதை ஒரு பொதுவான விடயமாக நீண்ட காலமாக இருந்து வருகிறது. இன்று நடந்து கொண்டிருக்கும் இலங்கை அரசுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையிலான யுத்தத்தின் மத்தியில், அனேகமாக ஒவ்வொரு நாளும் சித்திரவதை தொடர்பான தகவல்கள் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கின்றன.'

- சர்வதேச மன்னிப்புச் சபையினர் 'இலங்கை - தடுப்புக் காவலில் சித்திரவதை' (Sri Lnaka Toture in Custody) என்ற தலைப்பில் இம்மாதம் வெளியிட்டுள்ள 38 பக்க அறிக்கை ஒன்று அரச படைகள், முன்னாள் தமிழ் விடுதலை இயக்கங்கள், புலிகள், சிறையதிகாரிகள் ஆகியோரால் கைதிகள் மீது நடாத்தப்பட்டுவரும் பலவிதமான சித்திரவதைகளைப்பற்றி விரிவாக ஆராய்கின்றது. அரசியல் கைதிகள், பெண்கள், சிறுவர்கள், குற்றவாளி சந்தேக நபர்கள், தனிப்பட்ட காரணங்களுக்காக பொலிசாரால் நடாத்தப்படும் சித்திரவதைகள், யுத்தப்பிரதேசத்து பாலியல் வல்லுறவு போன்ற பல தலைப்புகளில் சித்திரவதைகள் பற்றி இந்த அறிக்கை ஆராய்கிறது. அவற்றிலிருந்து சில பகுதிகளை இங்கு தமிழாக்கித் தருகிறோம். நாட்டின் அரசியல் அதிகாரத்தை கையில் வைத்துள்ள அரச படைகளோ, இயக்கங்களோ யாரும் சித்திரவதை செய்வதில் ஒருவருக்கு ஒருவர் சளைத்தவர்கள் அல்ல என்பதை இந்த அறிக்கை காட்டுகிறது.

மக்களுக்கு வேதனைப்படுவதும், ஆளுவோருக்கு வேதனைப்படுத்துவதும் தான் நியதி என்றாகிப் போன ஒரு துரதிருஷ்டமான காலத்தில் நாம் வாழ்கிறோம் என்பதை இந்தக் குறிப்புகள் தெளிவாகக் காட்டுகின்றன.

ஆ-ர்

❑ கோபாலரத்தினம் தனஞ்சயனுக்கு வயது முப்பது யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இவர் 1989ம் ஆண்டிலிருந்து கொட்டாஞ்சேனையிலுள்ள புளுமென்டல் தொடா மாடியில் வசித்து வந்தார். 1998 ஒகஸ்ட் மாதம் 22ம் திகதி ஐந்தரை மணியளவில் பேலியகொட பொலிசாரால் இவர் கைது செய்யப்பட்டார். பேலியகொடை பொலிஸ் நிலயத்தில் அவர் முதலாம் மாடியிலுள்ள ஒரு அறைக்கு கொண்டு செல்லப்பட்டு நான்கு மணிநேரமாக சித்திரவதை செய்யப்பட்டார். மேசை ஒன்றின் மீது படுக்க வைக்கப்பட்டு உடல் முழுவதும் அடிக்கப்பட்டார் அவரது கைகளை கால்களுக்குப் பின்னால் கட்டி அவரது முழந்தாள்களுக்கூடாக செலுத்தப் பட்ட ஒரு குழாயில் தொங்கவிடப்பட்டார். தொங்கிக் கொண்டிருந்த அவரது உள்ளங்கால்கள் முதுகு, கால்கள் எல்லாவற்றின் மீதும் தாக்கப்பட்டார். அவரை பெருவிரலில் கட்டி தலைகீழாகவும் தொங்க விட்டார்கள். இந்தச் சித்திர வதைகளால் அவர் திரும்பத் திரும்ப வாந்தி எடுத்தார். இதன் பிறகு இவரை, பொலிஸ் நிலைய கூட்டினுள் அடைத்து வைத்தார்கள். பிற்பகல் 7மணியளவில், இவர் ஒரு பிரதிப் பொலிஸ் அத்தியட்சகரிடம் கொண்டு செல்லப் பட்டார். அந்தப் பொலிஸ் அதிகாரியின் முன் நிலையிலும் அவர் வாந்தி எடுத்தார். இதனால் அந்தப் பொலிஸ் அதிகாரி அவரை வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லுமாறு உத்தரவிட்டார். கொழும்பு பெரியாஸ்பத்திரியில் அவருக்கு மருத்துவம் செய்யப்பட்டது. அவரது உடல் முழுவதிலும் அடிபட்டதற்கான வடுக்கள் காணப்படுகின்றன. அவரது கைகளிலும் கால்களிலும் இன்னமும் நோ இருப்பதாக அவர் முறைப்பாடு செய்திருக்கிறார். பின்னர் 1999 ஜனவரி மாதம் இந்த அறிக்கை எழுதப்படும் வரை அவர் மீதான குற்றச்சாட்டுகள் பொலிசாரால் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்காக அவர் காத்திருக்கிறார்.

❑ குமார் செல்வரத்தினம் 48 வயதான ஒரு போதனாசிரியர். இவர் 1997 மார்ச் மாதம் புலிகளுடன் தொடர்பு கொண்டிருந்தார் என்ற சந்தேகத்தின் பேரில், வேலையிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டார். கொம்பனி வீதி பொலிஸ் நிலயத்தில் வைத்து, அவர் தடுத்து வைக்கப்பட்டிருந்த முதல் எட்டு நாட்களும் துடைப்பக் கட்டையால் தாக்கப்பட்டார். அவர் உதைக்கப்பட்டும், அடிக்கப்பட்டும் சித்திரவதை செய்யப்பட்டதால் அவரது விதைப்பை வீக்கம் கண்டது. இதன் காரணமாக அது சத்திர சிகிச்சை மூலம் அகற்றப்பட வேண்டியிருந்தது. 1998 யூலை மாதம் கொழும்பு உயர்நீதிமன்றம் அவருக்கு ஒரு லட்சம் ரூபா நஷ்டஈடு வழங்குமாறு உத்தரவிட்டது.

❑ சுப்பு உதயகுமார் மலையகத்தைச் சேர்ந்த இவர் சோசலிச சமத்துவம் கட்சியின் உறுப்பினர். ஹற்றன் பொலிசாரால் 1998 யூன் 12ம் திகதி கைது செய்யப்பட்டு கண்டி பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டார். ஒரு சார்ஜனும் இரண்டு சப்-இன்ஸ்பெக்டர்களுமாக மூன்று அதிகாரிகள் அவரை தலைகீழாகக் கட்டித் தொங்கவிட்டு அவரது உடல் முழுவதும் தாக்கினார்கள். அவரை பொலிஸ் அத்தியட்சகரது அலுவலகத்திற்கு வீதிக்கு குறுக்காக இழுத்துச் சென்று, அங்கிருந்த மேசை லாச்சி ஒன்றினுள் அவரது விதைப்பையை வைத்து அழுத்தி மூடினார் அந்த சார்ஜன். இது அவருக்கு தாங்க முடியாத வேதனையைக் கொடுத்தது. இதன் பிறகு இவர் கொழும்பு மலலசேகர மாவத்தையில் உள்ள பாதுகாப்பு தொடர்புப் பிரிவுக்கு (Security Coordination Division)மாற்றப்பட்ட அவர் சட்டவைத்திய அதிகாரியினால் பரிசோதிக்கப்பட்டார். ஆயினும் அவர் தொடர்ந்தும் பாதுகாப்பு தொடர்புப் பிரிவில் வைத்து சித்திரவதைக் குள்ளாக்கப்பட்டார். யூலை 9ம் திகதி அவர் நடக்க முடியாத நிலைக்கு வந்தமையால் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். அவர் தலையில் கடுமையான வலி ஏற்பட்டிருந்தது. சித்திரவதையின் காரணமாக அவர் ஆண்மை இழந்தவராக, தொடர்ச்சியான வலியும், இடது கை உணர்ச்சியற்றதாகிவிட்ட நிலையில் இடுப்பு நோ என்பவற்றைக் கொண்டவராக அவதியுடன் வாழ்ந்து வருகிறார். இவரது அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டதற்கு நஷ்டஈடு கோரி உயர்நீதி மன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

❑ முத்துத்தம்பி வனிதா, மீசாலையைச் சேர்ந்தவர். கொட்டாஞ்சேனை பொலிசாரால் 1998 நவம்பரில் கைது செய்யப்பட்ட போது இவர் ஒரு விடுதியில் தங்கியிருந்தார். முதலில் 20 வயதான இவர் பிரான்ஸில் அரசியல் தஞ்சம் மறுக்கப்பட்டு திருப்பி அனுப்பப்பட்ட பின் ஒருவாரம் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்தார். அதன்பின் அவர் கொழும்பிலுள்ள ஒரு விடுதியில் அறை எடுத்துத் தங்கியிருந்தார். மீண்டும் இலங்கையை விட்டு வெளியேறுவது அவரது நோக்கமாக இருந்தது. கொட்டாஞ்சேனை பொலிஸ் நிலையத்தில் அவரைச் சந்திக்க வந்த போது அவர் தனக்கு இரும்புக் குழாய்களால் வயிற்றில் அடித்தார்கள் என்றும், மலசலம் கழிக்கவும அனுமதிக்கப்படவில்லை என்றும் தெரிவித்தார். இதனால் அவரது கால்கள் வீங்கியிருந்தன. தாயார் ஒரு சட்டத்தரணியுடன் பொலிஸ் நிலையம் சென்ற போது அவருக்கு எந்தச் சித்திரவதையும் செய்யப்படவில்லை என்று பொலிசார் தெரிவித்தனர். சட்டத்தரணிக்கு வனிதாவை பார்வையிட அனுமதி கிடைத்தது. சட்டத்தரணி பொலிஸ் நிலயத்தை விட்டு வெளியேறியதும் வனிதா முகத்திலும் உடல் முழுவதும் இரும்புக் கம்பிகளால் தாக்கப்பட்டார். மேலும் முறைப்பாடுகள் செய்தால் நிர்வாணமாக தலைகீழாக தொங்கவிடப்பட்டு சித்திரவதை செய்யப்படுவார் என்று அவர் மிரட்டப் பட்டார். சட்டத்தரணியின் முறைப்பாட்டின் பேரில் அவரைப் பரிசோதித்த சட்ட வைத்திய அதிகாரி சித்திரவதை செய்யப்பட்டதற்கான தடயங்கள் அவர் உடலில் இருப்பதாகத் தெரிவித்தார். அவர் இப்போது வெலிக்கடை சிறையில் இருந்தபடியே சிகிச்சை பெற்று வருகிறார். ஆயினும் சித்திரவதையின் தாக்கம் அவருக்கு இன்னமும் வேதனை அளிப்பதமாகவே உள்ளது.

15 வயதான சின்னராசா அந்தோனியம்மா என்ற சிறுமி 1995 ஜூலை மாதம் கடற்படையினரால் கைது செயப்பட்டார். 1997 ஒக்டோபர் மாதம் அவர் சட்ட வைத்திய அதிகாரியால் பரிசோதிக்கப்பட்ட போது அவரது உடலில் 46 வடுக்கள் காணப்பட்டன. காங்கேசன்துறை கடற்படை முகாமில் தான் தடுத்து வைக்கப்பட்டிருந்த காலம் முழுவதும் ஒரு நாளைக்கு மூன்று தடவை விசாரணை செய்வதற்காக தான் எவ்வாறு நிர்வாணமாக்கப்பட்டு துன்புறுத்தப்பட்டேன் என்று அவர் விவரித்தார். அவர் தலை கீழாகத் தொங்க விடப்பட்டு கால்கள் மீது தாக்கப்பட்டார் சிகரட்டினால் சுடப்பட்டும் மின்சார அதிர்ச்சி ஏற்படுத்தியும் சூடாக்கப்பட்ட இரும்புக் கம்பியினால் சுட்டும் தான் சித்திரவதை செய்யப்பட்டதாக அவர் சொன்னார். அவர் கொழும்பிலுள்ள ரகசிய பொலிசாரிடம் மாற்றப்பட்ட பின்பும் கூட, கழுத்தில் பின்புறத்தில் வெட்டப்பட்டும் வாயிலும், கால்களிலும் மரக்கட்டையால் அடிக்கப் பட்டும் சித்திரவதை செய்யப்பட்டுள்ளார், சட்ட வைத்திய அதிகாரி நவம்பர் 1997இல் மேல் நீதிமன்றத்திற்கு வழங்கிய அறிக்கையில் 'எல்லாக் காயங்களும் ஆறு மாதகாலங்கள் பழைமைவாய்ந்தவையென்றும், 1995இல் ஏற்பட்டு மாறிய காயங்களுடன் ஒத்தவையாக அவை இருக்கின்றன.' என்றும் தெரிவித்துள்ளார்.

1998 ஜனவரி 15ம் திகதி கொழும்பு உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பொன்றில் 15வயதான ஏகாம்பரம் தமயந்தி என்ற சிறுமிக்கு இலங்கையின் வரலாற்றிலேயே முன்னெப்போதும் இல்லாதளவு அதிகளவு நஷ்ட ஈட்டை வழங்குமாறு பணித்தது. சித்திரவதை மற்றும் பாலியல் வன்முறைகட்கு மட்டக்களப்பு பற்பொடிமுகாம் படையினரால் உள்ளாக்கப்பட்ட இச்சிறுமி மீது செய்த சித்திரவதைகளில் சில அடி, கைவிலங்குகளால் இடித்தல், முகத்தில் பெற்றோல் ஊற்றுதல், தண்ணீருக்குள் அமிழ்த்தி வைத்திருத்தல் என்பனவாகும். படையினர் அவரது பிட்டத்தில் அடித்தும் அவரது மார்பகங்களைப் பிடித்தும், அவரிடம் கௌரவக் குறைவான கேள்விகளைக் கேட்டும் துன்புறுத்தியுள்ளனர். 1998 நவம்பரில் அவர் விடுதலை செய்யப்பட்டார்.



❑ வவுனியா கோவில் குளம் புளொட் முகாமில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவர் தாம் எவ்வாறு அவர்களால் சித்திரவதை செய்யப்பட்டார் என்று விபரிக்கிறார். இம்முகாமில் 1998இன் ஆரம்ப மாதங்களில் யுத்தம் காரணமாக யாழ்ப்பாணத்திலிருந்து இடம் பெயர்ந்த இவர் இவ்வருட நடுப்பகுதியில் மூன்று மாதங்களாக இம் முகாமில் புளொட்டினரால் தடுத்து வைக்கப்பட்டார். புளொட்டின் விசாரணைக்குப் பொறுப்பானவர் தன் கண்களைக் கட்டி, வாயிலும் ஒரு துணியை அடைத்துவிட்டு நிலத்தில் வீழ்த்தி உள்ளங்காலில் அடித்ததாக அவர் மன்னிப்புச் சபைக்குத் தெரிவித்தார். அவரது குதிகாலில் ஒரு ஆணி ஏற்றப்பட்டது. ஒரு சந்தர்ப்பத்தில் ஒரு நாய் வரவழைக்கப்பட்டு அவரது அந்தரங்க உறுப்புக்களைக் கடிக்க விடப்பட்டது. போவில் குளம் முகாமில் தடுத்து வைக்கப்பட்டவர்களில் அனேக நபர்களின் நிலை இது தான். புளொட் னால் நடாத்தப்படும் பல்வேறு தடுப்பு முகாம்களில் 1999இன் நடுப்பகுதியில் 20 பேருக்கு மேல் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். புளொட் தடுப்புக்காவலில் இருந்த ராஜரட்ணம்

→

ராஜேஸ்வரன் என்ற பெயருடைய இளைஞர் நெல்லியடி புளொட் முகாமில் வைத்துக் கொல்லப்பட்டார்.

❑ கோவில் குளம் முகாமில் சிறை வைக்கப்பட்டிருந்த இன்னொருவரை சர்வதேச மன்னிப்பு சபையினர் பேட்டி கண்ட போது, தான் சிறையிலிருந்த காலங்களில் அந்த முகாமில் பிற பகுதிகளில் இருந்தும் வேறு பலர் சித்திரவதை செய்யப்படும் போது அவர்கள் குழறியதைத் தான் கேட்டதாகக் கூறினார். சித்திரவதை செய்தவர்கள் பலமாக இசை நாடாக்களை இசைக்க விட்டே இவற்றைச் செய்வார்கள். நோவினால் அலறுபவர்களது குரல் வெளியே கேட்காமல் இருக்கவே இந்த ஏற்பாடு. பலத்த சத்தத்துடன் இசை நாடாக்கள் ஒலிப்பதால் தான் இந்த நேரங்களில் தான் விழித்திருப்பதுண்டு என்றும் அவர் சொன்னார். தான் விடுதலை செய்யப்படுவதற்கு சில நாட்களுக்கு முன் ஒரு நாள், கழிவுப் பொருட்களை கொட்டுவதற்காக முகாமின் பின்புறம் சென்ற போது, மலசலகூடப் பகுதியில் மனித உடல்களின் பகுதிகள் ஒரு கிடங்கினுள் கிடந்ததைக் கண்டதாக அவர் கூறினார். அதற்கு முதல் நாள் இரவு மரமும், பெற்றோலும் எரியும் நாற்றம் இருந்ததாகவும் அவர் கூறினார்.

இராணுவ பொலிஸ் படையினர் இரவு நேரங்களில் கோவில் குளம் முகாமுக்கு வருவதுண்டு. முகாமுக்குள் இருந்த கொட்டகையில் இவர்களை புளொட் இயக்கத்தின் விசாரணைகட்கு பொறுப்பானவர் வரவேற்று உபசரிப்பாராம். மேற்கூறிய கைதி சிறையிலிருந்த கால விசாரணைகள் எதிலும் பொலிஸ் உத்தியோகத்தர்களோ இராணுவ அதிகாரிகளோ கலந்து கொண்டதில்லை. அதேவேளை நடக்கும் சித்திரவதைகளை நிறுத்த அவர்கள் முயன்றதும் இல்லை. EPRLF, PLOTE, TELO இயக்கங்களின் வதை முகாம்கள் பல வவுனியாவில் இருக்கின்றன. ஆனால், இவை பற்றிய தகவல்கள் இராணுவ, பொலிஸ் அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் மறைக்கப்பட்டு வருகின்றன.

❑ 1997 ஜுன் மாதம் 8ம் திகதி மட்டக்களப்பைச் சேர்ந்த பெரியதம்பி சுப்பிரமணியம் ராசிக் குறூப்பினரால் கைது செய்யப்பட்டு அவர்களது முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டார். 1998 செப்டம்பர் மாதம் உயர் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட சட்டவைத்திய அதிகாரியின் அறிக்கையில் ராசிக் குறூப்பினால் செய்யப்பட்ட சித்திரவதைகளுடன் ஒத்துப் போவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. மரக்கட்டையால் அடித்து, ஆணுறுப்பை சிகரட்டால் சுட்டது, மிளகாய் தூளும் பெற்றோலும் கொண்ட சொப்பிங் பைக்குள் முகத்தைத் திணித்தது, ஊசிகளால் குத்துவது, தோளில் கத்தியால் குத்துவது என்று பல சித்திரவதைகள் இவர்களால் செய்யப்பட்டுள்ளன. இந்தப் பற்பொடி முகாமில், பிற சித்திரவதைகளுடன், உருவாக்கப்பட்ட பொலித்தீன் ஊற்றுவது, விரல் நகத்தை குறட்டினால் பிடுங்குவது என்பன போன்ற சித்திரவதைகள் சிலருக்குச் செய்யப்பட்டிருந்தன. இவருடைய மனித உரிமை மீறல் வழக்கு மேல் நீதிமன்றத்தில் காத்துக்கிடக்கும் அதேவேளை மட்டக்களப்பு நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்காக இவர் காத்துக் கிடக்கிறார்.

❑ 1997 ஜனவரி 2ம் திகதி மானிப்பாய் இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவத்தினர் சுற்றிவளைப்பின்போது 35 இளம் பெண்களும், ஆண்களும் கைது செய்யப்பட்டனர். அவர்கள் தாவடியிலுள்ள சிறிய இராணுவ முகாமொன்றினுள் விசாரணைக்காகத் தடுத்து வைக்கப்பட்டனர். மூன்றாம் நாள் இணுவிலுக்கு அருகில் நடந்த புலிகளின் தாக்குதல் ஒன்றில் கொல்லப்பட்ட மூன்று இராணுவத்தினரின் உடல்கள் அங்கு கொண்டு வரப்பட்டன. அங்கு தடுத்து வைக்கப்பட்ட ஒருவரின் வாக்குமூலப்படி இராணுவத்தினர் திடீரென்று தடிகள், கிறிக்கெற் துடுப்பு, வயர் போன்றவற்றால் தாக்கத் தொடங்கினர். எட்டோ ஒன்பது பெண்கள் கண்களும், கைகளும் கட்டப்பட்ட நிலையில் துன்புறுத்தப்பட்டனர். அவர்களது மார்பகங்களின் காம்புகள் குறடுகளினால் முறுக்கப்பட்டன. இதே குறடுகள் ஆண் கைதிகளின் ஜனன உறுப்புக்களை நசுக்கப் பயன்படுத்தப்பட்டன. பெற்றோல் நிரப்பிய பிளாஸ்டிக் பைகளில் எறும்புகளையிட்டு ஆண் கைதிகளில் தலைகளில் கொட்டப் பட்டது. பெண்களுக்கும் அதே செயல் செய்யப்பட்டது. - ஒரு வித்தியாசம் அவர்கள் மீது ஊற்றப்பட்ட பெற்றோலில் எறும்புகள் போடப்பட்டிருக்கவில்லை.



புலிகளின் சித்திரவதைகளுக்குள்ளான கோவிந்தன் மயில்வாகனம்

நான்காவது நாள், தடுத்துவைக்கப்பட்டவர்கள் மானிப்பாய் இராணுவ முகாமுக்கு மாற்றப் பட்டார்கள். அவர்களில் ஒரு சிலர் தமக்கு நடந்த சித்திரவதைபற்றி கொமாண்டரிடம் முறையிட்டார்கள். அன்று இரவு படையினர் அவர்களுக்கு மீண்டும்



மானிப்பாய் இராணுவ முகாமில் கையில் ஆணி ஏற்றப்பட்டு சித்திரவதைக்குள்ளான ஒருவர்

அடித்தார்கள். தாவடியிலுள்ளது போலவே மானிப்பாயிலுள்ள இராணுவ முகாமும் ஒரு அங்கீகரிக்கப்படாத இராணுவ முகாமாகும். இந்த முகாமில் இருந்த ஏனைய தடுப்புக் காவல் கைதிகளுடன் சேர்ந்து இந்த முப்பந்தைந்து கைதிகளும் ஆண்கள் வேறு பெண்கள் வேறாகப் பிரிக்கப்பட்டு சிறை வைக்கப்பட்டனர்.

தான் எவ்வாறு தனது பெருவிரலில் கட்டப்பட்ட நிலையில் தலைகீழாகத் தொங்க விடப்பட்டுத் தலைக்குக் கீழ் எரிக்கப்பட்ட மிளகாய்த் தூள்ப் புகையை சுவாசிக்க நிர்பந்திக்கப் பட்டேன் என்பதை ஒரு கைதி சர்வதேச மன்னிப்புச் சபையிடம் விவரித்தார். 16 கைதிகள் ஒரே நேரத்தில் நைலோன் கயிறுகளால் கட்டப்பட்டு தலைகீழாகத் தொங்கவிடப்பட்டார்கள் என்று அவர் தெரிவித்தார். அவர்கள் அனைவரும் எஸ்லோன் (பிவிசி) பைப்புகளாலும், வயர்களாலும் அடிக்கப்பட்டார்கள். ஒரு கார் அல்லது மோட்டார் சைக்கிள் டைனோமோவிலிருந்து மின்சாரம் எடுக்கப்பட்டு மின்னதிர்ச்சி கொடுக்கப்பட்டது என்றும், இந்தச் செயல் ஒரு மணி நேரத்திற்கு மேலாக செய்யப்பட்டது என்றும் சொன்னார். ஆயினும் தான் மயங்கிவிட்டதால் இந்த நேரம் எவ்வளவு என்பதை சரியாகச் சொல்ல முடியாது என்றும் தெரிவித்தார். அதற்குப் பின் கயிறால் தனது பெருவிரலில் செடில்காவடிககுப போடும் ஊசியால் கொழுவிக் கட்டித் தலைகீழாக அங்கிருந்த கிணறு ஒன்றினுள் தாழ்த்தி அமிழ்த்தினார்கள். தான் திரும்பவும் மயங்கிவிட்டதாக அவர் கூறினார். அவருக்கு உணர்வு இருக்கிறதா என்று பார்க்க படையினர் அவரது கையில் பிளேட்டினால் வெட்டிப் பார்த்தார்கள்.

மறுநாள் காலை உடல்முழுவதும் அவருக்கு நோவாக இருந்ததாலும் காலில் புண் இருந்ததாலும் எழுந்திருக்க முடியவில்லை. ஒரு படையினன் வந்து ஆணி அடிக்கப்பட்ட பலகைக் கட்டை ஒன்றால் அவரது காலில் அடித்தான். பிறகு அவரது கைவிலங்குகளை கழற்றிவிட்டு கைகளை நிலத்தில் வைக்குமாறு கட்டளையிட்டான். இரண்டாவது படையினன் ஒருவன் இவரது கையைப் பிடிக்க, முதலாவது படையினன் பலகையை இவரது வலக்கையில் வைத்து ஒரு உலக்கையின் உதவியுடன் ஆணியால் அறைந்தான். ஆணி முறிந்து தனது தடுப்புக்காவல் காலம் முடியும் வரை கையில் இருந்ததாக அந்தக் கைதி தெரிவித்தார். இவ்வாறு ஆகக் குறைந்தது இன்றும் மூவர் ஆணியறையப்பட்டிருக்கிறார்கள் என்று அவர் தெரிவித்தார். அத்துடன் கிட்டத்தட்ட பத்துப் பேருக்காவது சூடாக்கப்பட்ட இரும்பினால் முதுகில் சூடுகள் இடப்பட்டிருந்ததைத் தான் கண்டதாகவும் தெரிவித்தார்.

1998 செப்டெம்பரில் சர்வதேச மன்னிப்புச்சபை பேட்டி கண்டபோது இந்த இளைஞன் தலையிடியாலும், பயங்கரக் கனவுகளாலும் குதிக்கால் கடும் வலியாலும் அவதிப்பட்டுக் கொண்டிருந்தார். அவரது வலது கையில் இரண்டு விரல்கள் பாவிக்கப்பட முடியாதளவுக்கு செயலற்றிருந்தன. அவரது கண் பார்வையும் மோசமடைந்திருந்தது. ஓகஸ்ட் 1998இல் அவரது வலக்கையிலிருந்த முறிந்த ஆணி அகற்றப்பட்டது - அவர் விடுதலை செய்யப்பட்டு கிட்டதட்ட ஒரு வருடத்திற்குப்பிறகு பயத்தின் காரணமாக அந்த ஆணி ஒரு விபத்தின்போது ஏறியது என்று அவர் வைத்தியரிடம் தெரிவித்திருந்த போதிலும், அவ்ரது உடல் காயங்களும் பிறவும் அது சித்திரவதையின் போது அடிக்கப்பட்ட ஆணியே என்று சர்வதேச மன்னிப்புச்சபை உறுதியாக நம்ப போதிய ஆதாரங்களாக உள்ளன.

❑ கொழும்பில் உள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயத்தின் பின்னாலுள்ள உயர்ந்த கோபுரம் இராணுவத்தினரின் 'பாதுகாப்பு வீடு' என்று பலகாலமாக அறியப்பட்டு வந்த ஒன்றாகும். நகரின் மையப்பகுதியில் நிலைகொண்டுள்ள இந்தக் கோபுரம் 1994க்கு முன் இரகசிய தடை முகாமாக செயற்பட்டு வந்ததை சர்வதேச மன்னிப்புச் சபை அறிந்திருந்தது. 1996 டிசம்பர் 20ம் திகதிய உயர் நீதிமன்றம், விஜயம் விமலேந்திரன் என்பவர் 1993-லிருந்து இங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்தார் என்பதை சாட்சியங்களின் அடிப்படையில் ஏற்றுக் கொண்டது. ஆயினும், இந்தக் கோபுரம் தடைமுகாமாக பயன்படுத்தப்படுவதை நிறுத்த எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.' 1997இல் ஆகக் குறைந்தது மூவர் இங்கு பல நாட்களாக தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்ட பின்னரே குற்றவியல் புலனாய்வுப் பிரிவுக்கு ஒப்படைக்கப்பட்டார்கள் என்பதற்கு சர்வதேச மன்னிப்புச் சபைக்கு ஆதாரங்கள் கிடைத்துள்ளன.

❑ கணபதிப்பிள்ளை சசிகுமார் அவர்களில் ஒருவர். மட்டக்களப்பு வாழைச்சேனையைச் சேர்ந்த இவர் தான் 1997 ஏப்ரல் 3ம் திகதியிலிருந்து 5ம் திகதிவரை அங்கு தடுத்துவைக்கப்பட்டிருந்ததாகவும், தான் நிர்வாணமாக்கப்பட்டு, பெற்றோலும், மிளகாய்த்தூளும் கொண்ட ஷொபிங் பை ஒன்றினால் தலையை மூடி கழுத்தில் கட்டப்பட்டதாகவும், கொங்கிறீற் நிரப்பப்பட்ட பி.வி.சி. பைப்பகளாலும் உடைந்த கதிரைகளாலும் தாக்கப்பட்டதாகவும் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள அடிப்படை மனித உரிமை மீறல் வழக்கு மனுவொன்றில் தெரிவித்துள்ளார். தான் ஒரு புலி உறுப்பினர் என்று ஒப்புக் கொள்ள மறுத்ததனால் தனது கைகள் முதுக்குப் பின்பாக கட்டப்பட்ட நிலையில் பெருவிரல்களில் கொழுக்கியில் தொங்க விடப்பட்டதாகவும், தனது கண்கள் கட்டப்பட்ட நிலையில் மின்சாரம் பாய்ச்சப்பட்டதாகவும், தனது குதிக்கால் ஒன்றில் ஒரு துளையிடும் கருவியால் துளையிட்டதாகவும், அந்த வழக்கு மனுவில் தெரிவித்துள்ளார். அத்துடன் தான் சிகரட்டினால் சுடப்பட்டதாகவும், தனது பிட்டப்பகுதியில் கத்திகளினால் வெட்டப்பட்டதாகவும் தெரிவித்தார். இன்னொரு சந்தர்ப்பத்தில் தான் சுவருடன் தள்ளி மோதப்பட்டதாகவும், இதன் காரணமாகவும் தனது முறவாய் பல்லொன்றை இழந்ததாகவும் தெரிவித்தார். நாகொட வைத்தியசாலை வைத்தியர் அவரது ஆண்குறியில் சத்திர சிகிச்சை ஒன்று மேற்கொள்ளப்படவேண்டும் என்று பரிந்துரை செய்திருந்தும், அவர் தடுத்துவைக்கப்பட்டிருந்த களுத்துறை சிறைச்சாலை அதிகாரிகள் 1998 ஒக்டோபரில் அவர் வழக்கு தாக்கல் செய்யும் வரை இதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

❑ 24 வயதுள்ள ஒரு மாணவி. உடுவிலைச் சேர்ந்தவர். 1998 ஏப்ரலில் இவர் இராணுவத்தினரால் இவரது சகோதரி புலிகளுடன் தொடர்புள்ளவர் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்டிருக்கிறார். முதல் ஓரிரு நாட்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்தபோது இவருக்கு ஏதும் நடக்கவில்லை. கையில் விலங்கிடப்பட்டிருந்தாலும் விசாரிக்கப்படவோ, சித்திரவதை செய்யப்படவோ இல்லை. ஏழு நாட்களின் பின் பெண் படையினர் குழு ஒன்று அவர் தடுத்து வைக்கப்பட்டிருந்த அறைக்கு வந்து அவரைத் தலை கீழாகத் தொங்கவிட்டது. உண்மையைச் சொல்லாவிடில் நாளுக்கு நாள் தண்டனை கடுமையாகும் என்று அது எச்சரித்தது. மறுநாள் இரண்டு படையினர் வந்து இம் மாணவியின் வலது கைகளை சிகரட்டினால் சுட்டார்கள். அதற்கு மறுநாள் அவர்கள் வந்து அவரை பாலியல் ரீதியாக துன்புறுத்தலுக்குள்ளாக்கினார்கள். அவரது மார்பகம், தொடை என்பவற்றை கிள்ளுவதுடன், அவரது உள்ளாடைக்குள் கைகளை நுழைப்பது போன்ற சேட்டைகளை அவர்கள் புரிந்தனர். இரண்டு நாட்களின் பின் ஒரு படையினர் வந்து அவருக்கும் இன்னொரு கைதிப் பெண்ணுக்கும் தான் தப்பி ஓட உதவுவதாகக் கூறி அவர்களை இரவு நேரம் முகாமின் பின்புறமுள்ள ஒரு ஒதுக்குப் புறமான இடத்துக்கு அழைத்துச் சென்றார். அங்கே இன்னொரு படையினன் காத்திருந்தான். சர்வதேச மன்னிப்புச் சபையிடம் அவர் பின் என்ன நடந்தது என்பதை இவ்வாறு கூறினார்.

"எங்களை கூட்டிவந்தவன் என்னை நோக்கி வந்தான் மற்றவன் மற்றப் பெண்ணை நோக்கிச் சென்றான். அப்போது தான் நாம் அவர்களால் ஆபத்தில் இருக்கிறோம் என்று புரிந்து கொண்டோம். நாம் கத்த ஆரம்பித்தோம். என்னை நோக்கி வந்தவன் ஒரு கைக்குட்டையை எனது வாய்க்குள் திணித்துவிட்டு என்னைக் கொஞ்சவும், தழுவவும் ஆரம்பித்தான். எனது மார்பகங்களைப் பிடித்துப் பிசைந்தான் எனது கன்னத்தை உறிஞ்சினான். நாங்கள் ஒரு பற்றைக்குப் பின்னால் இருந்தோம் நான் அவனைத் தள்ள முயற்சித்தேன். ஆனால், அவன் என்னை இழுத்து எனது மேற்சட்டையைக் கிழித்தான். எனது மார்புக்கச்சையைப் பிடுங்கினான் தனது காற்சட்டையைக் கழற்றினான். எனது உள்ளாடையை நீக்கினான் அவன் நிர்வாணமாக நின்றபடி என்ன செய்ய வேண்டுமோ அவ்வளவையும் செய்தான். அது மிகவும் வேதனை தருவதாக இருந்தது எனக்கு. அவன் என்மீது வல்லுறவு கொண்டான். கிட்டத்தட்ட அரை மணி நேரமாக இது நடந்தது..."

❑ பொலிகண்டியைச் சேர்ந்த மிக்கேல்பிள்ளை றொபேட் வெலிங்டன் என்ற மீனவர் ஒருவர் பருத்தித்துறை இராணுவ முகாமைச் சேர்ந்தோரால் 1998 ஜுலை 20 திகதி கைது செய்யப்பட்டார். அவர் கைது செய்யப்பட்டபோது பலவந்தமாகத் தாக்கப்பட்டதை பலர் கண்ணால் கண்டதாக தெரிவிக்கின்றனர். அதன் பின் அவர் அருகிலுள்ள இராணுவ முகாமுக்கு நான்கு அல்லது ஐந்து இராணுவத்தினரால் இழுத்துச் செல்லப்பட்டார். மறுநாள் அவரது பெற்றோர்களிடம் சென்ற பொலிஸ் மகனது உடலை அடையாளம் காட்டுமாறு கேட்டுள்ளனர். ஆஸ்பத்திரியில் அவரை உறவினர்கள் அவரது உடலை அடையாளம் காட்டிய போது அவரது உடல் நிர்வாணமாக இருந்தது. அவரது கை முறிந்திருந்ததையும், அவரது உடல் முழுவதும் கத்தி வெட்டுக்காயங்கள் இருந்ததையும் உறவினர்கள் அவதானித்துள்ளனர். உடலில் ஐந்தோ ஆறு துப்பாக்கிச் சூட்டுக் காயங்களும் இருந்தன. இவை அவர் சித்திரவதை காரணமாக செத்தபின் சுடப்பட்டிருக்கலாம் என்று உறவினர்கள் சந்தேகிக்கின்றனர். இராணுவத்தினரோ அவர் தப்பி ஓடும் போது சுடப்பட்டதாக கூறுகின்றனர். பொலிசார் அவரது ஈமக்கிரிகைகள் அன்றே செய்யப்படவேண்டும் என்ற உத்தரவுடன் உடலைக் கையளித்தனர். அவரது உடல் அவ்வாறே அடக்கம் செய்யப்பட்டது.

❑ பதிரதன் தாமோதரன் கிழக்குப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 24 வயது மாணவன். புலிகளால் நான்கு மாதங்களுக்கு மேலாக விசாரணைக்காக கொக்கட்டிச்சோலையிலுள்ள அவர்களது முகாமொன்றில் தடுத்து வைக்கப்பட்டபின் 1998 பெப்ரவரியில் கொல்லப்பட்டார். அவர்களுடன் ஒத்துழைக்க மறுத்ததற்காக 1997 ஒக்டோபரில் இவர் புலிகளால் கைது செய்யப்பட்டார். பிற இயக்கங்கள் தொடர்பாக தகவல் தர மறுத்ததே இவரது கைதுக்கும், கொலைக்கும் காரணம் என்று நம்பப்படுகிறது. பதிரதன் தாமோதரன் எவ்வாறு உடல் முழுவதும் மோசமாக சீழ்பிடித்த காயங்களுடன் இருந்தார் என்பதை, அதேவேளை புலிகளின் சிறையிலிருந்த இன்னொருவர் தெரிவித்தார். அவரது முழங்காலில் இருந்த காயங்களுக்கு காரணம் அவர் முழங்காலில் இருக்கவும், தவழவும் நிர்ப்பந்திக்கப்பட்டதாக இருக்கலாம் என்று அவர் அபிப்பிராயப்பட்டார். புலிகளுடன் அவரது குடும்பத்தினர் ஒத்துழைத்தால் அவர் விடுவிக்கப்படுவார் என புலிகளின் அப்பிரதேச உறுப்பினர்கள் தெரிவித்திருந்தனர். 1998 பெப்ரவரி மாதம் 21ம் திகதி அவர் கிராமத்துக்குக் கொண்டு வரப்பட்டு சுட்டுக் கொல்லப் பட்டதுடன், அவர் ஒரு உளவாளி என்பதால் மரண தண்டனை வழங்கப்பட்டதாக பகிரங்கமாக அறிவிக்கப்பட்டது.

தமிழில்............ அருணன்

# மலையகமும் மயிலும்

-கீதபொன்கலன்

நடந்து முடிந்த மாகாண சபைத் தேர்தல் பலருக்கும் பலவிதமான அரசியல் பாடங்களை கற்றுத் தந்துள்ளது. "தென்னிலங்கை வாழ் தமிழ் மக்கள் தன்மானத்துடனும், தனித்துவத்துடனும் வாழவேண்டும் என்பதற்காகவே ஓரணியில் திரண்டுள்ளோம்" என தோகை விரித்த மயில் கற்ற பாடம் தான் என்ன? எதிர்காலத்தில் எப்படித் தன்னை மறுசீரமைத்துக் கொள்ளப்போகின்றது? இந்த நோக்கில் எமது கண்ணோட்டத்தை இங்கே முன் வைக்கின்றோம்.

கடந்த ஓகஸ்ட் 28ம் திகதி மாகாண சபைத் தேர்தல் நடைபெறுவதாக இருந்ததை அறிந்ததுமே இ.தொ.கா. ஒரு மாற்று வழியை நாடும் நிலைக்குத் தள்ளப்பட்டது.


- ஐ.தே.கவுடனான பிளவின் காரணமாக தேர்தலுக்காக அவர்களுடன் இணைய முடியாத நிலை.
- பொ.ஐ.முவுக்கு மலையக மக்களின் பூரண ஆதரவு கிடைக்குமா என்ற சந்தேகத்தின் மீது அதனுடன் இணைவதில் ஏற்பட்ட தயக்கம்.
- தனித்து போட்டியிடுவதென்றால் அது ஒரு விஷப்பரீட்சையாகி விடாதா என்ற சலனம்.

இந்த மாற்று வழி தான் 'பேரணி'. இ.தொ.காவின் முக்கியமான ஒரு நபரே பேரணியின் பிறப்புக்கு காரணமாவார். இதற்கு முன்பு தேர்தலின் போது பல தொழிற் சங்கங்கள் இ.தொ.காவை சந்தித்து ஒரு கூட்டுக் கட்சியை அமைக்க முயற்சித்த போது உடன்பட மறுத்த அதே இ.தொ.கா தான் இந்தப் பேரணிக்குள் தன்னை அடக்கிக் கொண்டது. இந்தப் பேரணி நடத்திய முதற் கூட்டத்தில் 16 தொழிற் சங்கங்களும் இரண்டு அமைப்புகளும் கலந்து கொண்டன. பொதுவானதொரு செயற்திட்டத்தை இக்கட்டத்தில் முன்வைக்கத் தவறியமையால் பல தொழிற் சங்கங்கள் இதிலிருந்து விலகிக் கொண்டன. அக்கூட்டத்திற்கு சமூகமளிக்காத ஏனைய தொழிற் சங்கங்களின் ஆதரவைத் தேடியபோது அவை மறுதலித்தன. நாமறிந்த வரையில் இப்பேரணியின் அங்கத்தவர்கள் வருமாறு, இ.தொ.கா., செங்கொடிச் சங்கம், தொ.தே.ச., ஐ.தொ.கா., வ.பொ.சே.ச., அ.இ.ஐ.தொ.கா., ஊ.கொ.உ.நி., கி.தொ.சகோ. (பதுளை அட்டன்), அ.இ.ஐ.தொ.காவின் தலைவர் யுனிவெலோ என்ற ஒரு அரச சார்பற்ற நிறுவனத்தையும் நடத்தி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. இவற்றைத் தவிர பதிவு செய்யப்பட்ட எந்தவொரு தொழிற்சங்கமோ அரச சார்பற்ற நிறுவனமோ இந்தப் பேரணியில் அங்கம் வகிக்கவில்லை. இந்த அமைப்புகளின் 'கிங் மேக்கர்' இ.தொ.கா. தான் என்பது வெள்ளிடை மலை. இவர்கள் உருவாக்கிய இந்த "இந்திய வம்சாவளி மக்கள் பேரணி" என்ற பெயர் பலதரப்பட்ட விமர்சனங்களுக்கு உள்ளானது.

இயக்கர், நாகர் போன்ற பூர்வீகக் குடிகளைத் தவிர்ந்த ஏனையோர் அனைவரும் இந்தியாவிலிருந்து வந்தவர்களே. அதனால் தான் 1948இல் எழுதப்பட்ட யாப்பில் மலையகத் தமிழரை "அண்மைக்கால இந்திய வம்சாவளி மக்கள்" எனக்குறிப்பிடப்பட்டுள்ளது. மலையகத்தில் வாழுகின்ற தமிழர்கள் இலங்கை நாட்டைச் சேர்ந்தவர்கள் என்ற எண்ணக்கருவை வளர்க்கவே பல வருடங்களாயின. தோட்டத் தமிழர் என்ற பெயர் மருவி மலையகத் தமிழர் என்ற சொற்பதம் 1970 - 1980 காலப்பகுதியில் தலை தூக்கலாயிற்று. இவர்கள் எப்படி அழைக்கப்பட வேண்டும் என்பது குறித்த பல்வேறுபட்ட கருத்துக்கள் அண்மைக் காலங்களில் கூட பத்திரிகைகளில் பிரசுரமாயின. எது எவ்வாறாயினும் 'மலையகத் தமிழர்' என்ற பதமே அதிக ஆதரவைப் பெற்றுள்ளது. 'இந்திய வம்சாவளி' என்ற பெயரில் தீவிர பற்றுக் கொண்ட சில தொழிற் சங்கவாதிகளையும், புத்திஜீவிகளையும் ஊன்றிப் பார்ப் போமானால் அவர்களது முழுமை யான ஈடுபாடு இந்தியாவிலேயே நிலை கொண்டுள்ளதைக் காணலாம் (குடும்பம், பிள்ளைகளின் கல்வி, பொருள், வளம்...) எனவே இவர்கள் அடிக்கடி இந்தியப் பிரயாணத்தை மேற்கொள்பவர்களாக் இருக்கின்றனர். மலையகத்தில் வாழுகின்ற 95வீதமானவர்கள் குறிப்பாக இளைஞர்கள் இந்திய மண்ணை மிதித்தவர்கள் அல்ல என்பதோடு 'இந்திய வம்சாவளி' என்ற அடைமொழியிலும் கூட நாட்டமில்லாதவர்கள். குறிஞ்சி மண்ணில் மலர்ந்த இவர்கள் அதன் பெயராலேயே தங்களை ஒரு 'தேசிய இனமாக' அங்கீகரிக்க வேண்டும் என்றே குரலெழுப்புவார்கள்.

இந்தப் பேரணியின் பெயர் உருவாக்கத்தில் தொடர்புடைய சிலரிடம் பகிரங்கமாக இது பற்றி கேள்விகள் எழுப்பப்பட்டபோது கிடைத்த பதிலை குறிப்பிடுவது இந்த இடத்தில் பொருத்தமாக இருக்கும். ஆரம் பத்தில் இலங்கை - இந்திய காங்கிரசாக இருந்து பெயர் மாற்றம் பெற்ற இ.தொ.காவை போன்றே தேவை ஏற்படின் பேரணி யின் பெயரையும் காலப் போக்கில் மாற்றிக் கொள்ளலாம் என்பதே கிடைத்த பதிலாகும்.

இவர்கள் துார நோக்குடன் இப்பெயரை உருவாக்க வில்லை என்பதையே இது குறிக்கின்றது. மேலும் தேர்தலுக் கென்றே அவசரமாக உருவாக் கப்பட்ட பெயர் என்பதையும் தெளிவுபடுத்துகின்றது. இந்தப் பெயரானது இலங்கையின் எந்தச் சட்டத்தின் கீழும் பதிவுசெய்யப்படவில்லை. இதற்கென பிரத்தியேகமான ஒரு சின்னமும் குறிக்கப்படவில்லை. அதன் கொள்கை என்ன என்பதும் மக்களுக்குப் புரியவில்லை. ஆனால், எப்படியாவது தேர்தல் களத்தில் குதித்தேயாக வேண்டும் என்ற நிலை. இதனால், கொள்கை அடிப்படையில் வெள்ளையன் உருவாக்கிய தொழிற் சங்கத்தின் பெயரையும், சின்னத்தையும் இரவலாகப் பெற்றுக் கொண்டது.



மாகாண சபைத் தேர்தல்கள் நடந்த 12 மாவட்டங்களுள் 9 மாவட்டங்களில் மாத்திரமே 'மயில்' சின்னம் போட்டியிட்டது. பேரணி இந்த மாவட்டங்களில் 40 வீதமான மக்களைக் கூட கொண்டிருக்கவில்லை. மலையகத்தில் 68க்கும் மேற்பட்ட தொழிற் சங்கங்கள் இருந்தும் பல முக்கியமான தொழிற்சங்கங்கள் 'பேரணியில்' இணையாததே இதற்குக் காரணமாகும். எடுத்துக்காட்டாக கூறுவதாயின் பதுளை மாவட்டத்தில் விவசாய தோட்டத் தொழிலாளர் சங்கம் பேரணியில் சேரவில்லை. நுவரெலியா மாவட்டத்தில் மலையக மக்கள் முன்னணியும் இதில் இணையவில்லை. பேரணியில் அங்கத்துவம் பெற்ற 3 தொழிற்சங்கங்களின் முக்கியஸ்தர்கள் அந்தந்தப் பகுதிகளில் அவரவர் பெயர்களை முன்கூட்டியே பதிவு செய்து கொண்டு குழு எண்ணிக்கையை முழுமைப்படுத்துவதற்கென்றே நபர்களை சேர்த்துக் கொண்டுள்ளார்கள்.

## அரச சார்பற்ற நிறுவனங்கள்

இந்தப் பேரணியில் போட்டியிட்ட அரச சார்பற்ற நிறுவனங்களைச் சேர்ந்த நால்வரும் வெற்றிபெறவில்லை. அரச சார்பற்ற நிறுவனங்களின் அரசியல் பிரவேசத்தைப் பற்றிய சர்ச்சைகளை பத்திரிகைகள் வெளியிட்டு வந்தன. இந்தக் கண்டனங்களை எல்லாம் பொருட்படுத்தாது அவற்றின் தலைவர்கள் நேரடியாக அரசியலில் ஈடுபட்டமையானது ஏனைய அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும் அபகீர்த்தியை ஏற்படுத்தி உள்ளது என்பதை ஏற்றுக்கொண்டாகத்தான் வேண்டும்.

கடந்த ஆண்டு மாகாண சபைத் தேர்தலைப் பற்றிய அறிவிப்பு வெளியானதும் சில அனுபவம் மிக்க உறுப்பினர்கள் இது நடக்கக்கூடிய காரியமல்ல என வாளாவிருந்தனர். ஆனால், இந்த அரச சார்பற்ற நிறுவனங்களின் உறுப்பினர்களோ தேர்தல் பின் போடக்கூடுமா என்பதைப் பற்றியெல்லாம் யோசியாது உடனடியாக சுவரொட்டிகளை அச்சடித்து விட்டனர்.

நாட்டின் எந்தவொரு பிரஜைக்கும் தேர்தலில் போட்டியிடுவதற்கான உரிமையுண்டு என்பதில் ஐயமில்லை. அதைத் தடுப்பதற்கான அதிகாரமும் எவருக்கும் இல்லை. அரச சார்பற்ற நிறுவனங்களில் தாம் வகித்த பதவிகளைத் துறந்து அடுத்தவரிடம் அந்தப் பொறுப்பைக் கையளித்துவிட்டு இவர்கள் தேர்தலில் போட்டியிட்டிருந்தால் அது வரவேற்பைப் பெற்றிருக்கும். மக்கள் அரசியல் அறிவைப் பெற வேண்டும் என்பது அரச சார்பற்ற நிறுவனங்களின் கொள்கையாக இருக்க வேண்டுமேயன்றி அரசியலாகி விடுவது சிறப்பல்ல. மக்கள் தமது உரிமைகளைப் பெறுவதற்கு ஏதுவாக அரசியல்வாதிகளை நெருக்கடிக்கு உள்ளாக்குவது இவர்களது ஒரு சமூகக் கடமையாகக் கருதப்படும். மக்களுக்காக பெற்ற வளங்கள் சுயநலன்களுக்காக அழிந்திருப்பது கண்கூடு.

## தொழிற்சங்கங்கள்

தொழிற்சங்கங்களைப் பொறுத்தமட்டில் அவர்களது அங்கத்தவர்களே முழுமையாக பேரணிக்கு ஆதரவளிக்கவில்லையென்பதைத் தேர்தல் முடிவுகள் நிரூபித்துள்ளன.

காரணங்கள் பல -

யானைக்கு மக்களைப் பழக்கப்படுத்திய இவர்களே திடீரென மயிலை மக்கள் முன் நிறுத்தியமை.

பேரணியைப் பற்றிய போதுமான விளக்கத்தை மக்களுக்கு கொடுக்காதது.

பேரணியின் தலைவர் தேர்தல் சமயங்களில் அளிக்கும் வாக்குறுதிகள் நடைபெறாதவை என்பதை மக்கள் புரிந்து கொண்டுள்ளமை (உதாரணம்) கிராம சேவகர் நியமனம்.

பெப்ரவரி 13ம் திகதி நுவரெலியா, பதுளை மாவட்டங்களில் நடைபெற்ற தமிழ் கிராம சேவகர்களுக்கான போட்டிப்பரீட்சை தொடர்பாகவும் மக்கள் மிகுந்த அதிருப்தியைக் கொண்டுள்ளனர். இந்தப் போட்டிப் பரீட்சைக்கு தோற்றியவர்களுள் தமது அங்கத்தவர்களுக்காக மட்டுமே ஒரு தொழிற் சங்கம் ஆயத்தப் பயிற்சி பாசறை ஒன்றை நடத்தியிருந்ததும் மக்களை நம்பிக்கை இழக்கச் செய்திருந்தது.

கூறப்போனால் தேசிய பரீட்சைத் திணைக்களம் தான் இந்தப் பரீட்சையை நடத்த வேண்டும். ஏனெனில், கிராம சேவகர் நியமனம் மத்திய அரசால் வழங்கப்படுகிறதேயன்றி மாகாண சபையால் அல்ல. ஆக, இது வெறும் தேர்தல் புரட்டு என்பதை பாமரர்கள் கூட சரியாக புரிந்து கொண்டிருப்பதை அறியக் கூடியதாக இருந்தது. பத்து வருட காலமாக இந்த நியமனம் வழங்கப்படாது இருப்பதற்கான காரணங்களில் ஒன்று தொழிற் சங்கங்களுக்கிடையேயான பலப் பரீட்சை தான்.

தேர்தலுக்கு முன்பே பேரணியின் முக்கிய தலைவர்கள் பொ.ஐ.முவுடன் இணைந்து விட்டனர் என்ற கருத்து பரவியமை கூட பேரணியின் பின்னடைவுக்குக் காரணமாகி யுள்ளது. ஐ.தே.கவை தோற்கடிக்க வேண்டும் என்று குறியாக இருந்த பொ.ஐ.முவுக்கு இது ஓரளவு வெற்றி என்றாலும் பேரணிக்கு இது ஒரு இழப்பே.

பேரணி வெற்றி பெறாவிட்டால் எமது மக்களுக்கு அவமானம் எனக்கூறிய பேரணித் தலைவர் தேர்தலுக்குப் பின் கொழும்பு மாவட்டத்தில் பேரினவாத சக்திகளையே தமிழ் மக்கள் ஆதரித்துள்ளனர் எனக் குற்றம் சாட்டுகிறார். குறைகளை தம் பக்கத்தில் வைத்துக்கொண்டு மக்களைக் குறை கூறுவதில் அர்த்தமில்லை.

அந்தந்த மாவட்டங்களில் பதிவு செய்யப்பட்ட தமிழ் வாக்காளர் தொகையை இவர்கள் அறியாது இருந்திருக்க மாட்டார்கள். அந்த அடிப்படையில் எத்தனை உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்படும் வாய்ப்பு உள்ளது என்பதைக் கணித்திருக்க முடியும். அதற்கேற்ப பேரணியின் மத்திய குழு உறுப்பினர்களை தெரிவுசெய்து குழுவின் அனைத்து அங்கத்தவர்களுக்கும் அது தொடர்பான சரியான விளக்கங்களை அளித்து அவர்களை கூட்டாக இயங்கச் செய்திருந்தால் சின்னத்துக்கான ஆதரவை நிச்சயம் திரட்டியிருக்க முடியும். மாகாண சபைத் தேர்தல் முறை சிறிய கட்சிகளுக்கும் வாய்ப்பளிக்கின்றது. ஆனால், கூட்டு மனப்பான்மை இவைகளிடம் இல்லாவிட்டால் வெற்றி பெறுவது கடினம்.

பொ.ஐ.முவோ அல்லது ஐ.தே.கவோ சிறு கட்சிகளின் ஆதரவு இன்றி ஆட்சி செய்யும் நிலையை இந்தத் தேர்தல் முடிவுகள் தந்திருந்தால் 'மயில்' சின்னத்தில் தெரிவான 9 உறுப்பினர்களும் எதிர்க்கட்சியில் அமரும் நிலை ஏற்பட்டிருக்கும். ஆனால், இப்போது அவர்களுக்கு அமைச்சர் பதவிகள் கிடைக்கலாம் என நம்பப்பட்டாலும் இது எப்போது நடக்கும் என்பது தெரியவில்லை.

மேலே கூறிய எந்தக் கருத்தும் தனிப்பட்ட நபர்களையோ, கட்சிகளையோ தாக்கவேண்டும் என்பதற்காக முன் வைக்கப்படவில்லை. மலையகத்தில் வாழுகின்ற மக்களுக்கு வலுவானதொரு அரசியல் கட்சி தேவை என்பதை அவர்கள் உணர்ந்துள்ளார்கள். தொழிற் சங்கங்கள், நலன் விரும்பிகள், புத்திஜீவிகள் அனைவரும் பேதங்களைக் கடந்து அதனை உருவாக்க முன்வரவேண்டும். தேர்தலுக்காக மட்டும் அமைக்காது மலையக மக்களின் அடிப்படை உரிமைகளை மீட்டெடுக்கும் ஒரே குறிக்கோளுடன் இது அமைக்கப்பட வேண்டும். புதிய பெயரும் சின்னமும் கொடுக்கப்படவேண்டும்.

அரசியலில் நேரிடையாக ஈடுபடாத சமூகப்பற்றுள்ள, தூர நோக்குள்ள நபர்களை உள்ளடக்கிய ஒரு குழு அமைக்கப்படுவது அவசியம். மலையகத் தமிழர்களுக்கென உருவாக்கும் பிரத்தியேக கட்சியை நெறிப்படுத்துவதே இக்குழுவின் பணியாக இருக்க வேண்டும். ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒரு பொதுவான செயற்திட்டத்தை முன்வைத்து ஏனைய சிறுபான்மையினத்தவரையும் இதில் இணைத்துக் கொள்ள வேண்டும். முதலாளித்துவ கொள்கையின் கீழ் நசுக்கப்படும் அனைத்து தொழிலாளரும் சிறுபான்மையினர் தான். அந்த அடிப்படையில் ஒடுக்கப்பட்ட சிங்கள, தமிழ், முஸ்லிம் தொழிலாளரையும் இணைத்துக் கொண்டு சுயலாபம் கருதாது உழைக்க வேண்டியது இன்றைய கால கட்டத்தில் மலையக மக்களுக்கு அத்தியாவசியமானதாகும்.

# தலித் பெண்ணியம் : எல்லோரும் ஒன்று என்பது சுத்த அபத்தம்!

— ரூத் மனோரமா

நேர்காணல் : என்சரவணன்

சர்வதேச மனித உரிமைகள் சாசனம் 50 வருடங்களாக உலக மனித உரிமைகளைப் பேணி வருகிறதாம். இந்தியா அந்நியர்களிடமிருந்து சுதந்திரம் பெற்று 50 வருடங்களையும் அடைந்து விட்டதாம். ஒவ்வொரு மணித்தியாலமும் இரண்டு தலித்துகள் தாக்குதலுக்கு உள்ளாக்கப்படுகின்றனர். ஒவ்வொரு தினமும் 3 தலித் பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்படுகின்றனர். தினந்தோறும் 2 தலித்துகள் கொல்லப்படுகின்றனர். ஒவ்வொரு தினமும் இரண்டு தலித் வீடுகள் அழிக்கப்படுகின்றன.

தலித்தியப் போராட்டமானது இன்றைய சூழலில் தவிர்க்க இயலாததும், காட்டமானதுமாக பரிணமித்துவிட்டிருக்கிற நிலையில் இந்தியாவில் பல்வேறு மாநிலங்களிலும் செயற்பட்டுவரும் பல்வேறு தலித் இயக்கங்களும் ஒன்று சேர்ந்து 1998 10-11 ஆகிய தினங்களில் கூடி தலித் மக்களின் மனித உரிமைகளுக்கான தேசிய செயற்திட்டம் ஒன்றை வரைந்தன. அதனை சென்ற வருடம் (ஐ.நா. மனித உரிமைகள் பிரகடனத்தின் 50வது வருட பூர்த்தி தினமான) டிசம்பர் 10 அன்று தொடக்கம் (அம்பேத்கார் பிறந்த தினமான) 14 ஏப்ரல் 1999 வரையான காலத்திற்குள் உலக அளவில் தலித் மக்களின் பிரச்சினைகளின் பால் கவனத்தை ஈர்ப்பதற்கும், தலித் மக்களின் அவலங்களையும் உரிமைகளையும் பற்றி பிரசாரப்படுத்தும் காலமாகப் பிரகடனப்படுத்தி செயற்பட்டனர். தலித் விஞ்ஞாபனம், தலித்களின் உரிமைகளும் மனித உரிமைகளே எனக்கூறும் தலித் மனித உரிமைகள் சாசனம், துண்டுப்பிரசுரங்கள், சுவரொட்டிகள், கையெழுத்து சேகரிப்பு, இந்திய அரச தரப்பினருக்கு விதந்துரைக்கவென கோரிக்கைகள் என பல்வேறு ஆவணங்களை உள்ளடக்கிய ஒரு கோவையையும் விநியோகித்து வருகின்றனர். ஐநாவிடம் விடுக்கப்பட்டுள்ள கோரிக்கையில் "மனிதத்துவத்துக்கு எதிரான குற்றங்களாகக் கருதி" தலித் மக்களின் பிரச்சினைகளை ஐ.நாவில் பிரதிநிதித்துவப்படுத்த வாய்ப்பு ஏற்படுத்தித் தரும்படியும், இப்பிரச்சினைகளுக்கென விசேட ஐ.நா அறிக்கையாளர் (Special Rapporteur) ஒருவரை நியமிக்கும்படியும் கோரியுள்ளனர். இப்பிரச்சாரத் திட்டத்தின் ஒரு பகுதியாக இலங்கைக்கு வந்து ஒரு கூட்டத்தையும் ஒழுங்கு செய்திருந்தனர். இலங்கையில் இனத்துவ கற்கைக்கான சர்வதேச நிலையத்தினர் இதனை ஒழுங்கு செய்திருந்த போதும் இது ஒரு சில "புத்திசீவிகள்" மட்டுமே கலந்து கொண்ட நிகழ்ச்சியாக குறுகிப்போனது வேறுவிடயம்.

தலித் மக்களின் பிரச்சினைகளையும் அப்போராட்டங்களை ஒன்றிணைக்கும் பணியாகவும், மேற்கொள்ளப்படுகின்ற இந்த முயற்சியில் சகலரையும் இணைக்கும் வகையில் வெப் தளம் ஒன்றும் இவ்வமைப்பினரால் உருவாக்கப்பட்டுள்ளது. இத்தளத்தில் தலித் மக்கள் பற்றிய பல்வேறு விபரங்கள், ஆய்வுகள், விவாதங்கள், செய்திகள், கட்டுரைகள் என்பன உள்ளடக்கப்பட்டிருப்பதுடன், இதிலிருந்து இன்னும் பல தலித், மற்றும் மனித உரிமைகள் பற்றிய வெப் தளங்களும் இணைக்கப்பட்டுள்ளன.

வெப் தளம் www.dalits.org

சமீபத்தில் இலங்கை வந்திருந்த இவ்வியக்கத்தின் கர்நாடக மாநிலத்தில் இயங்கிவரும் தலித் அமைப்பைச் சேர்ந்த முக்கிய செயற்பாட்டாளரான திருமதி. ரூத் மனோரமாவுடனான நேர்காணல் இங்கு பிரசுரமாகிறது. தலித் பெண்ணிய செயற்பாட்டாளரான இவர் பெண்கள் மீதான அனைத்து ஓரங்கட்டல்களையும் கண்காணிப்பதற்கான இரண்டாவது தென்னாசிய பெண்கள் மாநாடு கடந்த மே மாதம் இலங்கையில் நடந்தபோது அவர் தலைமை வகிக்கும் "பெண்களின் குரல்" (Women's voice) இயக்கத்தின் சார்பில் அதில் கலந்துகொண்டிருந்தார். அப்போது பெறப்பட்டது இந்த நேர்காணல்.

**தலித் அரசியலின் சமகால வடிவத்தைப் பற்றி கூறுங்களேன்.**

முன்னர் போலல்லாது இன்று பல்வேறு அரசியல் தலைமைகள் தலித் மக்களின் பிரச்சினைகள் குறித்து செயலளவில் இல்லையென்றாலும் பேசத் தள்ளப்பட்டுள்ளனர். ஏலவே இருக்கின்ற கூலி விவசாயிகளின் இயக்கங்கள், தொழிற்சங்க இயக்கங்கள் ஏன் சில இடங்களில் மாக்சிய இயக்கங்களையும் விட பலமாக வந்து கொண்டிருக்கிறது தலித் இயக்கம். இதற்கான காரணம் தலித் அரசியலானது வெறுமனே சாதிய அடக்குமுறைகளுக்கு எதிரான இயக்கமாக செயற்படவில்லை. விதிவிலக்கானவற்றைத் தவிர பெருமளவில் சகல அடக்குமுறைகளையும் எதிர்த்துத்தான் தலித் அரசியல் நிறுவப்பட்டு வருகிறது.

**இப்படிப்பட்ட சூழலில் தலித் பெண்ணியம் பற்றி பேச நிர்ப்பந்தித்த காரணிகள் என்ன?**

தலித்துகளில் அலைவாசிப்பேரான பெண்களின் பிரச்சினைகள் குறித்த விசேட கவனம் கொள்ளப்பட்டு வருவது கடந்த பத்தாண்டு காலமாகத் தான். இதற்கு காரணம் சமூகத்தில் விளிம்பில் இருக்கும், இறுதியாக ஓரங்கட்டப்பட்டவர்கள் என கருதப்படும் தலித்துகளிலும் ஆண் தலித்துகளால் பெண் தலித்துகளை ஒடுக்கப்படுவதை விசேடமாக கருத்திற் கொண்டே தலித் பெண்ணியம் குறித்த கருத்தாக்கம் வளரத் தொடங்கியது. சகல அதிகாரத்துவ நிலைகளின் மீதும் போர் தொடுக்கின்ற தருணத்தில் ஆண் அதிகாரம் மட்டும் தப்பி, தமது அதிகாரத்தின் மீதான கவனத்தை திசை திருப்பி விடுகிறது என்றே சொல்வேன்.

பெண்கள் மீதான ஆணாதிக்க அதிகாரம் என்பது வர்க்க, சாதிய, இனத்துவ அரசியல்களைக் கடந்தது. ஒரு புறம் வர்க்க, சாதிய அடக்குமுறைகளை எதிர்த்து போராடுகிற ஆண்கள் சக தலித் பெண்ணின் மீது அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விடுகின்றனர். தலித் பெண்களைப் பொறுத்தளவில் ஆணாதிக்கம், சாதியம் பொருளாதார, கலாசாரம் என சகல வழிகளிலும் ஒடுக்கப்படுகின்றனர்.

தலித் பெண்கள், ஒரே நேரத்தில் அம்பேத்கார் பொது எதிரியாக சுட்டிக் காட்டிய பார்ப்பனியம் மற்றும் முதலாளித்துவம் என்பவற்றுக்கு எதிராகப் போராட வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர்.

**பெண்ணியப் போராட்டம் சாதிய ஒடுக்குமுறையை மறுதலித்து வந்திருக்கிறது என்று கருதுகிறீர்களா?**


ஒரு புறம் பெண்கள் என்பதற்காகவே பிரத்தியேகமான பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துவரும் அதே நேரம் இன்னொருபுறம் தலித் பெண்ணாக இருப்பதால் விசேடமான பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். அப்பிரச்சினைகளை எதிர்த்துப் பேச முடிவதில்லை. மிஞ்சிப் பேசினால் என்னோடு படுத்தவள் தானே என்று பேச்சை அடக்கும் நிலை உள்ளது. இன்று படுத்தால் தான் நாளை வேலை என்கின்ற நிலை பல கிராமங்களில் இன்று நிலவுகிறது இப்படிப்பட்ட நிலையில் உயிரியல் ரீதியில் நாங்கள் எல்லோரும் ஒன்றுதான் என்றும் பெண்கள் எல்லோரும் பெண்கள் தான் என்றும் பேசுவதெல்லாம் சுத்த அபத்தம். பெண்கள் அமைப்புகளில் கூட நிலவுகின்ற சாதிய ஓரங்கட்டல்களை இங்கு காணலாம்.

**தலித் விடுதலைக்கு தலித் பெண்ணின் விடுதலை இன்றியமையாதது என்றா கூறுகிறீர்கள்?**

ஆம், எப்படி இன்று இந்திய உபகண்டத்தில் தலித் விடுதலையில்லாமல் புரட்சிகர சமூக மாற்றம் சாத்தியமில்லையோ அதுபோல பெண் விடுதலை பெறாத தலித் விடுதலையும் சாத்தியமில்லை. இந்த வகையில்தான் தலித் விடுதலைக்கு பெண்களின் விடுதலை முன்நிபந்தனையாகின்றது. அது போல தலித் விடுதலையை, உள்ளடக்காத பெண் விடுதலையும் சாத்தியமில்லை எனும் நிலைப்பாட்டில் உறுதியாக உள்ளோம். தலித் அரசியல் பற்றிப் பேசுகின்ற சில நட்பு சக்திகள் கூட தலித், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் இணைவினை முக்கியப்படுத்தி செயற்படுகின்ற சந்தர்ப்பங்களில் பெண்களையோ, தலித் பெண்களையோ ஒரு சக்தியாக கருதி அதில் இணைக்காமல் இருப்பது துரதிருஸ்டவசமானது.

**தலித் பெண்கள் தனியாக நிறுவனமயப்படுதல் அவசியம் என்கிறீர்களா?**

இன்றைய நிலையில் தலித் பெண்களை தலைமையாகக் கொண்ட ஒரு அமைப்பு உருவாவது அவசியம். இன்றைய ஆதிக்க



அமைப்புமுறையினால் ஓரங்கட்டப்பட்டவர்களும் இவர்கள் என்பதால் இவர்களால் தான் இதனை மாற்றவும் முடியும். எனவே அப்படிப்பட்ட தலைமை தாங்குதலுக்கு தலித் பெண்களை தயார்படுத்துவது காலத்தின் கட்டாயமாகும். அது சுலபமான விடயமல்ல. அதற்கு சில விலைகளைக் கொடுத்துத்தான் ஆக வேண்டும். இதற்கு எந்த வித சமரசங்களும் செய்துகொள்ளத் தேவையில்லை.

உயர் சாதியினர், உயர் வர்க்கத்தினர் என்போர் எப்படிப்பட்ட ஆணாதிக்க அடக்குமுறையை பிரயோகித்து வருகின்றனரோ அதுபோலவே தலித் பெண்கள் மீது தலித் ஆண்கள் பிரயோகித்து வரும் அடக்குமுறை கிஞ்சித்தும் குறைவில்லாத வகையில் நடைமுறையிலிருந்து வருகின்றன. எனவே தான் தலித் பெண்கள் தனியாக அணி திரள வேண்டிய, தனியாக தலைமை வகிக்க வேண்டிய கட்டாயத்துக்கு தள்ளப்படுகின்றனர். பெண்களின் பேரம் பேசும் அற்றலைப் பலப்படுத்தவும் இது தான் வழி. அப்படி இருக்கும்பட்சத்தில் தான் பெண்களின் கோரிக்கைகளை வென்றெடுக்கலாம்.

பத்து வருடங்களுக்கு முன்னர் இருந்தே நாங்கள் தலித் மக்கள் பற்றிய விபரங்களை சேகரிக்கத் தொடங்கினோம். அது ஏறத்தாழ 1987 ஆக இருக்கும். அதிலிருநது 1995 ஆகும் போது நாங்கள் தலித் மக்களின் தேசிய சம்மேளனம் (National Federation of Dalits) என்ற அமைப்பை ஆரம்பித்து அதன் கீழ் இந்தியா தழுவிய தலித் இயக்கங்களை மையப்படுத்தி வருகிறோம்.

கடந்த ஆறு மாதங்களாக தேசிய அளவில் பல பாசறைகளை நடத்தி இருக்கிறோம். அதன் மூலம் தேசிய செயற் திட்டம் ஒன்றையும் வரைந்துள்ளோம். தலித் பெண்களின் விஞ்ஞாபனம் ஒன்றையும் வரைந்துள்ளோம். முதலில் 5 வருடத் திட்டம் ஒன்றைத் தொடக்கியுள்ளோம். இயக்கத்தில் பெண்களை தலைமைத்துவப்படுத்துவது. ஏனைய இயக்கங்களுடன் ஒன்று சேர்ந்து வேலை செய்வது எந்த அடிப்படையில் என்பன போன்றவற்றில் அக்கறை செலுத்தி வருகிறோம்.

இன்று தலித் மக்களின் பிரச்சினைகளில் கர்நாடகம் தமிழ்நாடு போன்ற மாநிலங்களிலும் நிலப்பிரச்சினைக்கு முக்கியத்துவம் கொடுத்து வருகிறார்கள். தமிழ்நாட்டில் பஞ்சமி நில மீட்பு விடயத்தை தலித் இயக்கங்கள் முன்னெடுத்து வருகின்றன. இதில் முகம் கொடுக்கின்ற முக்கிய பிரச்சினை என்னவென்றால் பல தலித் இயக்கங்கள் சாதிவாரியாக பிரிந்து செயற்படுகின்ற போக்கும் இல்லாமல் இல்லை. பறையர், பள்ளர், சக்கிலியர் என சாதிவாரியாக பிரிந்து காணப்படுகின்றனர்.

**பெண்களின் பிரச்சினைகளை தலித் பிரச்சினையோடு சேர்த்து விசேட கவனத்துக்குள்ளாக்கியது போல தலித் பிரச்சினையுடன் வர்க்கப் பிரச்சினையை எவ்வாறு ஒன்றிணைத்து செயற்பட்டுகிறீர்கள்?**

இன்னமும் பல இடதுசாரி அணிகள் தொழிற்சங்கங்கள் என்பன பெண்கள் பிரச்சினையைக் கூட தனித்த ஒரு பிரச்சினையாக அடையாளம் காணாத சூழ்நிலையில் தலித் மக்களின் பிரச்சினை பற்றிய விடயத்திலும் அது போன்ற நிலை காணப்படுகிறது தான். இன்றும் வர்க்கப் பிரச்சினையின் கீழ் மாக்சீய இயக்கங்களில் அணிதிரண்டிருக்கின்ற அடிமட்ட அங்கத்தவர்களில் பெரும்பான்மையோர் தலித்துகள் தானே. தலித்துகள் அனைவரும் வர்க்கச் சுரண்டலுக்கு அதிகமாக இலக்காபவர்கள் தானே. நாங்கள் கூறுவது அந்த சுரண்டலை விட விசேடமான சுரண்டல்களுக்கு தலித்துகள் பலியாக்கப்படுகிறார்கள் என்பதும், தலித்துகளிலும் தலித் பெண்கள் அதிகளவில் பாதிக்கப்பட்டுவருகிறார்கள் என்பதையும் தான். பெண்கள் பிரச்சினையையும் பொருளாதாரப் பிரச்சினையாக இனங்கண்டு வந்ததைப்போல தலித் பிரச்சினையும் வர்க்கப் பிரச்சினையோடு மட்டும் குறுக்கிப் பாக்கும் போக்கிலிருந்து இன்னமும் பல சக்திகள் விடுபடவில்லை. தற்போது சில மாற்றங்கள் தென்பட்டு வருகின்றன. என்றாலும் தலித் பெண்கள் தங்களின் பிரச்சினையை தனித்து அடையாளம் காண்பதைப்போல தலித் ஆண்கள் தலித் பெண்களின் பிரச்சினைகளை உணர்ந்ததில்லை. அப்படி எதிர்பார்க்கவும் முடியாதிருக்கிறது. அங்கு தான் தலித் பெண்ணியத்தின் தனித்துவம் தங்கியிருக்கிறது.

**தலித் பெண்கள் எவ்வாறு தங்களின் முன்னெடுப்புகளை விரிவுபடுத்தி வருகின்றனர்?**

தலித் மக்களின் போராட்டமும் இன்று விரிவுபடுத்தப்பட்டுள்ளது. வெறுமனே தீண்டாமைக்கு எதிராக மட்டும் நிற்கவில்லை. அது போல அம்பேத்கார் சிலையை உடைத்து விட்டார்கள் என்பதற்காக மட்டும் போராடப் புறப்படுவதில்லை. இன்று தலித் மக்கள் தலித் அரசியலின் கீழ் நிறுவனமயப்படுத்தப்பட்டு வருகிறார்கள் என்பதைத்தான் இன்றைய ஆரோக்கியமான விளைவாகக் காண வேண்டும். இனி நம்பிக்கையுடன் முன்செல்லலாம்.

தலித்துகள் அடிமட்டத்தில் உள்ள, வர்க்கச் சுரண்டலுக்கு அதிகமாக இரையாகின்றவர்கள். பெருமளவான தலித்துகள் விசாயிகள். கூலி விவசாயிகள். முன்னர் நிலம் இருந்தது இப்போது நிலம் இல்லை. நிலம் இருப்பவர்களுக்கோ பயிர்ச்செய்கைக்கு மூலதனம் இல்லை. இவர்கள் வங்கிக் கடனும் பெற முடியாத நிலை. தலித்துகள் தங்களின் நிலங்களை மீளப் பெறுவதற்கான போராட்டங்கள் எழுந்து வருகின்றன. காலனித்துவ காலத்தில் தலித் மக்களுக்கு வழங்கப்பட்ட பஞ்சமி நிலங்கள் - இதனை விற்பது என தீர்மானிக்கும் பட்சத்தில் அது இன்னொரு தலித்துக்கு தான் விற்கப்பட வேண்டுமென்பது சட்டம். ஆனால் நிலச்சுவாந்தர்கள் பலர் இவர்களிடமிருந்து கபடத்தனமாக அந்நிலங்களைப் பறித்து பினாமி பெயர்களில் வைத்துக் கொண்டிருக்கின்றனர். தற்போது அந்த பஞ்சமி நிலங்களை மீட்பதற்கான முயற்சிகளில் இறங்கியிருக்கிறோம்.

இன்று நாடு முழுவதும் தலித் மக்கள் கிளர்ச்சி செய்கிறார்கள். இன்று அவர்களின் செயலில், சிந்திப்பில் மாற்றம் காணத் தொடங்கியுள்ளது. மகாராஷ்டிரத்தில் அண்மையில் மரத்வாடா பல்கலைக்கழகத்திற்கு டாக்டர் அம்பேத்காரின் பெயரை வைக்குமாறு அங்குள்ள தலித்துகள் கோரினார்கள். போராடினார்கள். அதன் போது மக்களை அடித்து துன்புறுத்தி, சொத்துக்களை நாசமாக்கி, துப்பாக்கிச் சூடு பிரயோகித்து அடக்கினார்கள். ஆனால் அதற்காக அது போன்ற போராட்டங்கள் நின்று விடவில்லை. நின்றுவிடப்போவதுமில்லை. ஒரு புறம் தீண்டாமைக் கொடுமை, இன்னொருபுறம் வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம், கல்வி, சுகாதாரப் பிரச்சினைகள், அரசின் எந்தவித நிர்வாகமும் இவர்களைச் சேராத நிலை இப்படிப்பட்ட நிலையில் தலித் மக்கள் சூனியத்துக்குள் வாழ்ந்து வருகிறார்கள். பீகாரில் சமீபத்தில் 22 தலித்துகளை ஒரே ராத்திரியில் வெட்டிக்கொன்றனர். இன்று பீகாரில் தலித் மக்களின் போராட்டம் ஆயுதப் போராட்டமாக உருவெடுத்துள்ளது. பிகாரின் நிலைமை தவிர்க்க முடியாத ஆயுதப் போராட்டத்துக்கு தலித்துக்களைத் தள்ளிவிட்டுள்ளது. தலித் பெண்கள் பலர் இரகசிய தலித் அரசியல் இயக்கங்களில் இணைந்து துப்பாக்கிகளை கையிலெடுத்துள்ளனர்.

**அரசியல் சக்திகளை நிர்ப்பந்தப்படுத்துகின்ற பலத்தைக் கொண்டிருக்கிறீர்களா? பேரம் பேசும் ஆற்றலை பொருட்படுத்தும் நிலை எப்படி இருக்கிறது?**


இன்றைய தலித் விஞ்ஞாபனம் இனி வரும் தேர்தல்களில் தேசிய அளவில் கட்சிகளிடம் முன்வைக்கப்படப்போகும் கோரிக்கையாக அமையப்போகிறது. தலித் மக்களை நிறுவனமயப்படுத்தி வருகின்ற இந்த நிலையில் இப்படிப்பட்ட அழுத்தங்கள் கணிசமான விளைவுகளை ஏற்படுத்தவே செய்யும். ஆனால் இவற்றின் விளைவுகளை உடனடியாக எதிர்பாாக்க முடியாது.

**தலித் பெண்களின் கோரிக்கைகள் இப்படிப்பட்ட பாராளுமன்ற அரசியலில் எந்த தாக்கத்தை ஏற்படுத்தப் போகின்றன?**

முன்னர் குறிப்பிட்ட தலித் தேசிய விஞ்ஞாபனத்தில் தலித் பெண்கள் குறித்த கோரிக்கைகளும் அடங்குகின்றன. இனி பேச்சுவார்த்தைகளுக்கு களம் அமைக்க வேண்டியேற்படப் போகிறது. தேர்தல் அரசியலில் 25 கோடி தலித் மக்களின் வாக்குகளானது அவர்களின் கோரிக்கைகளை கருத்திற் கொள்ளச் செய்யப்போகிறது. ஆனால் இதனை பெரிதாக எதிர்பார்க்கத் தேவையில்லை. எமது இலக்கில் ஒரு அடியை முன்னோக்கி எடுத்து வைக்கிறோம் அவ்வளவு தான்.

- ஆசியாவில் 260 மில்லியன் தலித் மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.
- 97 டிசம்பர் 1ஆம் திகதியன்று பிகாரில் உள்ள லக்ஸ்மன்பூரில் தூக்கத்திலிருந்த 61 தலித்துகள் ரனவீர் சேனையைச் சேர்ந்தவர்களால் கொல்லப்பட்டனர். இவர்களில் 27பேர் பெண்கள் அவர்களில் 7 பேர் கர்ப்பிணிகள். 17 பேர் சிறுவர்கள் ஆவர்.
- 1997 இல் மாத்திரம் தேசிய குற்றப்பதிவுகள் பிரிவின் அறிக்கையில் மாத்திரம் ஒடுக்கப்படும் சாதியினருக்கு எதிரான 8500 சம்பவங்கள் பதிவாகியுள்ளன. இதில் 261 கொலைகளும். 302 பாலியல் வல்லுறவுச் சம்பவங்களும் அடங்கும். இத்தொகை 1988 ஆகும் போது 12,000 ஆக அதிகரித்துள்ளது என தெரியவருகிறது. இவை வெறும் அரச பதிவில் உள்ளவை மாத்திரம் தான்.
- 10 வருடங்களாக ஒடுக்கப்பட்ட மக்களுக்கான தேசிய ஆணைக்குழுவின் அறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க முடியாத நிலை தொடர்ந்து நிலவி வருகிறது. ஆளும் அரசாங்கங்கள் இதனை தொடர்ச்சியாக பின்போட்டு வருகின்றன.

# தேசிய கல்வி நிறுவகம்: தேசியக் கொள்கையற்ற நிறுவகம்!



ஒரு நாட்டின் கல்விக் கொள்கையாக்கமானது அரசியல் தலையீடின்றி கல்விமான்களால் சுதந்திரமாக உருவாக்கப்பட வேண்டும் என்ற எண்ணம் கடந்த காலங்களில் நாடுகளிடையே தோன்றியது. அதன் அடிப்படையில் கல்விக் கொள்கை யாக்கம், கல்வித் திட்டமிடல், அமுலாக்கம் தொடர்பான கல்வியியலாளர்களைக் கொண்டதும், ஆராய்ச்சிகளை உள்ளடக்கியதுமான அமைப்புக்களை பல நாடுகள் உருவாக்கின. அந்த வகையிலே,

இந்தியா - NCERT - National Council for Educational Research and Training
கல்வி, ஆய்வு பயிற்சிக்கான தேசிய சபை.

இங்கிலாந்து - I.E. - Institute of Education
கல்வி நிறுவகம்.

ஜப்பான் - NIER - National Institute for Educational Research.
கல்வி ஆய்வுக்கான தேசிய நிறுவகம்.

அவுஸ்திரேலியா - ACED - Australian Council for Educational Development.
கல்வி அபிவிருத்திக்கான அவுஸ்திரேலிய சபை

கொரியா - KEDI - Korean Educational Development Institue
கொரிய கல்வி அபிவிருத்தி நிறுவகம்.

சிங்கப்பூர் - I.E. Institute of Education.
கல்வி நிறுவகம்

போன்ற அமைப்புக்கள் இந்நாடுகளில் நன்கு வளர்ச்சியுற்று சுயாதீனமாக இயங்கிக் கொண்டிருக்கின்றன.

ஒரு நாட்டின் கல்விக் கொள்கையாக்கம் தொடர்பாக காலத்திற்குக் காலம் குழுக்கள் நியமிக்கப்படுவது ஒரு மரபாகும். இக்குழுக்களின் ஆலோசனைகளையே "கல்வி வெள்ளை அறிக்கை" என்கிறோம். இலங்கையில் 1981ஆம் ஆண்டு "கல்விச் சீர்திருத்தங்களுக்கான ஆலோசனைகள்" (கல்வி வெள்ளை அறிக்கை 1981) இதற்கென நியமிக்கப்பட்ட மூன்று குழுக்களின் அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டதாகும்.

வெள்ளை அறிக்கையில் கல்விக் கொள்கைகள் தொடர்பாக அரசுக்கு ஆலோசனை வழங்கவும், அவற்றை நடைமுறைப்படுத்தி மீளாய்வு செய்யவும் முறையே "தேசிய கல்விச் சபை" ( The National Education Council), "கல்வி மதியுரை-சபை" (Education Advisary Board) நிறுவப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. இவ்விருசபைகளின் பணிகளையும் ஆற்றும் நோக்கிலேயே "தேசிய கல்வி நிறுவகம் (National Institute of Education) அமைக்கப் பட்டது. இந்நிறுவகம் கடந்த 14 வருடங்களாக பரந்த அளவில் வளர்ச்சி கண்டு செயற்பட்டு வருகிறது.

இலங்கையில் தேசியக் கல்வி நிறுவகம் 1985ம் ஆண்டின் 28ஆம் இலக்கங் கொண்ட தேசிய கல்வி நிறுவகச் சட்டம் 1985.12.27ஆந் திகதிய 381/10ஆம் இலக்கங் கொண்ட வர்த்தமானி அறிக்கையின் பிரகாரம் 1986.01.01இல் இருந்து அமுல் நடாத்தப்படுகிறது. தேசிய நிறுவகச் சட்டத்தின் 3ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள பிரகாரம் தேசிய கல்வி நிறுவகத்தின் நோக்கங்கள் பின்வருமாறு:

- அ இலங்கைக் கல்வியின் மேம்பாட்டுக்கான திட்டங்களை வகுத்தல், நிகழ்ச்சிகளைத் தயாரித்தல், கல்வியுடன் தொடர்புறும் வேறு அலுவல்கள் சம்பந்தமாக மாண்புமிகு அமைச்சருக்கு ஆலோசனை வழங்கல்.
- ஆ கல்வியின் பல்வேறு சிறப்புத் துறைகளில் பட்டப்பின் படிப்புக் கல்வியைப் பெற்றுக் கொடுத்தலும், அதனை மேம்பாடடையச் செய்தலும்.
- இ கல்வியின் செயற்சாதனைகள், நோக்கங்கள், அமைப்பு முறைகள் என்பன உள்ளடங்குமாறு கல்வித் தொகுதியைச் சமுதாய, பொருளாதார மற்றும் கல்வி அம்சங்களில் பயனுறுதியுள்ளதாக நடாத்துதலும் மேம்பாடடையச் செய்தலும்.
- ஈ. கல்வி அலுவல்களின் பொருட்டு தொழிநுட்பக் கல்வியைப் பயன்படுத்தி கல்வித் தொகுப்பில் நவீன செயற்பாடுகளை ஆரம்பித்து, அவற்றினை மேம்பாடடையச் செய்தல்.
- உ. கல்வித் தொகுப்பைச் சேர்ந்த, செயற்குழுவின் தொழிற்றிறமையையும், பொது நிபுணத்துவத்தையும் அபிவிருத்தி செய்வதற்குரிய நடவடிக்கைகளைத் திட்டமிட்டல்.
- ஊ. அரசாங்கத்துக்கும், அங்கீகரிக்கப் பெற்ற அமைப்பாண்மைகட்கும், கல்வி தொடர்பான விசேட் சேவைகளை வழங்குதல்.
- எ. மாண்புமிகு கல்வி அமைச்சரின் அங்கீகாரம் பெறும் கல்வி அபிவிருத்தி அலுவல்களை நடைமுறைப்படுத்தல்.
- ஏ. தேசியக் கல்வி நிறுவகத்தின் நோக்கங்களை ஒத்த சமனான நோக்கங்களை உடைய நிறுவகங்களுக்கு ஒத்துழைப்பை வழங்கல். (ஆதாரம்: தே.க.நி. ஆண்டறிக்கை 1986)

இது கல்விச் செயலாளரை தலைவராகக் கொண்ட பேரவையின் அதிகாரத்திற்குட்பட்ட அரசு சார்ந்த தன்னாதிக்கமுள்ள ஓர் அமைப்பாகும்.

இந்த அம்சங்களை ஆதாரமாகக் கொண்டு தேசியக் கல்வி நிறுவகத்தை நோக்கும்போது அதன் முக்கியத்துவம் விளங்கும். அத்துடன் தேசியக் கல்வி நிறுவகம் நாட்டின் தேசியச் சொத்து என்பதும் புலனாகும். பல இன மக்களைக் கொண்ட இந்நாட்டிலே உள்ள ஒரே ஒரு பொதுக்கல்வி நிறுவனம் இதுவேயாகும். இந்நாட்டில் கல்வியில் சமத்துவம், சம உரிமை தேசியக் கல்விக் கொள்கையாக இருப்பதால் இந்நிறுவனத்தின் சகல பயன்களையும் சிறுபான்மை இனங்களும் அனுபவிக்க உரிமையுண்டு. இன்று இலங்கையில் தமிழும், அரச கரும மொழியாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இத்தகைய பின்புலங்களின் அடிப்படையில் தேசியக் கல்வி நிறுவனத்தை நோக்கும் போது அதில் சிறுபான்மையினத்தவருக்கும், தமிழ் மொழிக்கும் உரிய இடம் வழங்கப்பட்டுள்ளதா எனப் பார்க்கும் போது ஏமாற்றமே பதிலாக அமைகிறது.

தேசியக் கல்வி நிறுவனத்தின் ஆளணி அமைப்பினை எடுத்து நோக்குவோமாயின் பல திடுக்கிடும் உண்மைகள் தெரிய வரும்.

அனுமதிக்கப்பட்ட ஆளணித்தொகை 710 ஆகும். இதில் அதிவிசேட தரம் (சுப்பர் கிறேட்)-1. இத்தரத்தை உடையவரே நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகமாகத் திகழ்வார். இந்நிறுவனத்தின் முதலாவது பணிப்பாளர் நாயகம் டீ.ஏ. பெரேரா அவர்கள் ஆவார். தற்போது பேராசியர் லக்ஸ்மன் ஜயதிலக்க இப்பதவியினை வகிக்கிறார். இலங்கை ஒரு ஜனநாயக நாடாக இருந்த போதும் இந்நாட்டின் ஜனாதிபதி, பிரதமர் பதவிகளுக்கு ஒரு சிறுபான்மை இனத்தவர் எவ்வாறு வரமுடியாதோ அவ்வாறே இப்பதவிக்கும் ஒரு சிறுபான்மை இனத்தவர் வரமுடியாத நிலைமை உள்ளது.

பிரதி பணிப்பாளர் நாயகம் -

1 பதவி, தரம் -1

உதவிப் பணிப்பாளர் நாயகம் -5 பதவிகள், தரம் -2

பணிப்பாளர் - 22 பதவிகள், தரம் - 3

இதுவரை 14 வருட கால இடைவெளியில் ஒருவர் மட்டுமே (கு.சோமசுந்தரம்) உதவிப் பணிப்பாளர் நாயகமாக பதவி வகித்த சிறுபான்மை இனத்தவராவார். பிரதம செயற்றிட்ட அதிகாரி - 71 பதவிகள். தரம் -4 கல்விசாரா உத்தியோகத்தர் - 4 பதவிகள், தரம் - 4

(1999 மே 1ம் திகதிக்கு முன்னர் இரு சிறுபான்மை இனத்தவர் மட்டுமே பிரதம செயற்றிட்ட அதிகாரியாக நியமனம் பெற்றிருந்தனர். தற்போது 8 பேர் நியமிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. இது ஒரு முன்னேற்றகரமான விடயமே.)

திட்டமிடல் அதிகாரி - 169 பதவிகள் தரம் -5

கல்விசாரா உத்தியோகத்தர்- 9 பதவிகள், தரம் 5

(திட்டமிடல் அதிகாரிகளில் சுமார் 20பேரே சிறுபான்மை இனத்தவராக உள்ளனர்.)

உதவி செயற்றிட்ட அதிகாரி - 128 பதவிகள்: தரம் -5 கல்விசாரா உத்தியோகத்தர் - 10

(இதில் சுமார் 5 பேரே சிறுபான்மை இனத்தவர்:)

கல்விசாரா பதவிகள் - 16 பதவிகள்,
தரம் - 6.
கல்விசாரா பதவிகள் - 38 பதவிகள்,
தரம் -7.
கல்விசாரா பதவிகள் - 12 பதவிகள்
தரம் -8.
கல்விசாரா பதவிகள் - 67 பதவிகள்
தரம் -9.
கல்விசாரா பதவிகள் - 41 பதவிகள்
தரம்-10
கல்விசாரா பதவிகள் - 56 பதவிகள்
தரம் -11.

கல்விசாரா பதவிகளில் சாரதி, சமையல்காரர் போன்ற பதவிகளில் சிறுபான்மையினர் ஒருவர் தானும் இல்லை. சிற்றூழியர் ஒருவர் மட்டுமே உள்ளார்.

எனவே தற்போது தேசியக் கல்வி நிறுவனத்தில் உள்ள மொத்தம் 710 பதவியில் சுமார் 25பேரே சிறுபான்மை இனத்தவராவர். இவர்களுள் முஸ்லிம் 12. தமிழர் 13

இலங்கையில் அரசாங்க நியமனங்களின் போது இனவிகிதாசாரம் பேணப்பட வேண்டும் என்ற விதிமுறை உண்டு. எனவே சிறுபான்மை இனத்தவரைப் பொறுத்தவரையில் சுமார் 25வீதம் நியமனம் பெறக் கூடிய வாய்ப்புண்டு. அந்த வகையில் பார்க்கும்போது இன்று இந்த 710 பேரில் குறைந்தது 175பேராவது சிறுபான்மை இனத்தவர்களாக இருக்க வேண்டும். ஆனால், இருப்பதோ வெறும் 25பேர் மட்டுமே. இதை எந்த விகிதாசாரத்துள் அடக்குவது? தேசிய ரீதியில் கல்வியைத் திட்டமிட்டு செயற்படுத்தும் நிறுவனத்தின் நிலை எந்த நிலையில் இருக்கும் என்று கூறத் தேவையில்லையல்லவா? தேசியக் கல்வி நிறுவனத்தில் சிறுபான்மை இனத்தவருக்கு உரிய இடம் வழங்கப்படவில்லையென்ற சிறுபான்மை இனத்தவரின் ஆதங்கத்திற்கும், மனக்குமுறலுக்கும் நியாயம் உண்டல்லவா?

> தேசியம் என்ற சொல்லினுள்ளே ஒரு நாட்டிலுள்ள அனைவரும் அடங்குகின்றனர் என்றால், அந்த வகையிலே தேசியக் கல்வி நிறுவனம் பெரும்பான்மையினருக்கு மட்டும் தொழில் வாய்ப்பு அளிக்கும் நிறுவனமாக இல்லாது சிறுபான்மையினருக்கும் நீதியான முறையில் உரிய இடத்தை வழங்க முன்வரவேண்டும்.

தமிழ் முஸ்லிம் பாடசாலைகளுக்கு உரிய காலத்தில் பாடநூல்கள் கிடைக்காமை, பாட நூல்களில் பல நூற்றுக்கணக்கான எழுத்துப் பிழைகள், கருத்துப் பிழைகள், வசனப்பிழைகள் காணப்படல், (சுகாதாரமும் உடற்கல்வியும் - 9ஆந்தரம் - 335 பிழைகள். சமூகக் கல்வியும் வரலாறும் -9 ஆந்தரம் - 744 பிழைகள்) தரமற்ற வசனநடை, தவறான மொழி பெயர்ப்புகள் போன்ற பல குறைபாடுகளோடு தமிழ் பாடநூல்கள் வெளிவருவதன் காரணம் இந்தப் பின்னணியில் தான் என்பதை இப்புள்ளி விபரங்கள் வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றன. எனவே இதற்கான பொறுப்பினையும் தேசிய கல்வி நிறுவனமே ஏற்க வேண்டுமல்லவா?

அடுத்து கற்கை நெறிகளை எடுத்து நோக்கும் போது அவை பின்வருமாறு அமைந்துள்ளன.

சான்றிதழ் நெறிகள் - 8
டிப்ளோமா நெறிகள் - 3
கல்விமாணி நெறிகள் - 11
பட்டப்பின் படிப்பு நெறிகள் -5

8 சான்றிதழ் நெறிகளில் 1 மட்டுமே தமிழ்மொழி மூலம் நடைபெறுகிறது. இவ்வாறே ஏனையவற்றிலும் ஒவ்வொரு நெறிகள் மட்டுமே தமிழ் மொழி மூலம் நடைபெறுகின்றன. இத்தகைய நிலையில் ஒரே கலைத்திட்டத்தையும், பொதுப்-போட்டிப் பரீட்சையையும் கொண்டுள்ள நமது நாட்டில் பெரும்பான்மை இன ஆசிரியர்கள் தமது தாய் மொழியில் பல நெறிகளைத் தெரிவு செய்து பல பட்டங்களையும், டிப்ளோமாக்களையும், பட்டப்பின்படிப்பு சான்றிதழ்களையும் பெற்று தமது வாண்மை விருத்தியை மேம்படுத்தி தாம் சார்ந்த மாணவ சமுதாயத்திற்கும் பயன்படும் வகையில் கடமையாற்றும்போது சிறுபான்மை இன ஆசிரியர்கள் தமது வாண்மை விருத்தியை வளர்த்துக் கொள்ள மட்டும் மட்டுபபடுத்தப்பட்ட நிலை தேசியக் கல்வி நிறுவனத்தில் நிகழ்வதானது கல்வியில் சமத்துவம், சந்தர்ப்பம் என்ற தேசியக் கொள்கையை கேள்விக்குரியதாக ஆக்கியுள்ளது.

இது தேசியக் கல்வி நிறுவகச் சட்டத்தின் 3ம் பந்தியில் தரப்பட்டுள்ள நோக்கங்களின் (ஆ).(இ) பிரிவுகளுக்கும் மாறாக உள்ளது.

அது மட்டுமல்ல புதிய கல்விச் சீர்திருத்தத்தில் கல்வியின் தேசிய இலக்குகள் ஒன்பது முன்வைக்கப்பட்டுள்ளன. அவற்றுள் முதல் இரு இலக்குகளுக்கும் மாறான வகையிலேயே இந்நடைமுறைகள் அமைந்துள்ளன. அவ்விரு இலக்குகளாவன,

1. தேசிய பிணைப்பு, தேசிய நிதார்த்தம், தேசிய ஒற்றுமை ஆகியன பற்றித் தொழிற்படும் ஓர் உணர்ச்சியை எய்துதல்.
2. வியாபிதமான சமூகநீதி முறையொன்றினை ஏற்படுத்தலும், ஏற்றத் தாழ்வுகளைச் செயலூக்கத்துடன் போக்குதலும்.

இவ்விலக்குகளை தேசியக் கல்வி ஆணைக் குழுவே உருவாக்கியது. இக்குழுவின் தலைவராக இருப்பவரும் தேசியக் கல்வி நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகமே ஆவார். எனவே, அவர் உருவாக்கிய கொள்கையை அவரது பொறுப்பிலுள்ள நிறுவனத்தில் நடைமுறைப்படுத்தும் கடமைப்பாடு அவருக்குண்டு என மக்கள் எதிர்பார்ப்பதில் நியாயம் உண்டல்லவா?

தேசியம் என்ற சொல்லினுள்ளே ஒரு நாட்டிலுள்ள அனைவரும் அடங்குகின்றனர் என்றால், அந்த வகையிலே தேசியக் கல்வி நிறுவனம் பெரும்பான்மையினருக்கு மட்டும் தொழில் வாய்ப்பு அளிக்கும் நிறுவனமாக இல்லாது சிறுபான்மையினருக்கும் நீதியான முறையில் உரிய இடத்தை வழங்க முன்வர வேண்டும்.

நிதி உதவிகளையும், அவற்றின் பயன்பாட்டினையும் எடுத்து நோக்குவோமாயின்,

1986ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் தேசியக் கல்வி நிறுவனத்தை அமைக்கும் அடிப்படைச் செலவுகளைக் கருத்திற்கொண்டு தயாரிக்கப் பெற்றது. இதன் பொருட்டு ரூபா 1,500,000 செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. என்றாலும் உண்மையான செலவு 907,363 ரூபா ஆகும்.

ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டத்தின் செயற்றிட்ட இலக்கம் எஸ்.ஆர்.எல்/85/001இன் கீழ் நிறுவகத்தின் அபிவிருத்திற்காக உதவி வழங்கப்படுகிறது. அந்த உதவி கீழ்வரும் துறைகளின் பொருட்டுப் பயன்படுத்தப் படுகின்றது.

கொள்கை ஆய்வு, நிகழ்ச்சிகளை மேற்பார்வை செய்தல், மதிப்பீடு செய்தல், பயிற்சியாளரைப். பயிற்றுவித்தல், மனித வளங்களை விருத்தி செய்தல், பாடசாலை முறைமையை மேம்படுத்தும் நோக்கோடு

அமைப்பாண்மையையும், வளமுகாமைத்துவத்தையும் விருத்தி செய்தல்.

செயற்திட்டம் 1986ஆம் ஆண்டில் இருந்து மூன்று ஆண்டுகளைக் கொண்டிருக்கும். இந்த மூன்று ஆண்டுகால வரையறையில் ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித்திட்டம் (UNDP) 638,920 அமெரிக்கன் டொலர்களை வழங்கும்.

இந்தச் செயற்றிட்டத்தின் கீழ் கல்விச் சுற்றுலாக்கள், புலமைப்பரிசில்கள் என்பன வழங்குவதற்கு தகைமை பெற்றவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். நிறுவகத்தின் பணிகளைச் செவ்வனே ஆற்றுவதற்கு ஆலோசனை வழங்குவதற்காக சர்வதேச ஆலோசகரின் பெயர்கள் குறித்தனுப்பப்பட்டுள்ளன.

(தேசியக் கல்வி நிறுவன ஆண்டறிக்கை 1986)

1999ஆம் ஆண்டுக்கான பாதீட்டை எடுத்துக் கொண்டால், அத்ல் 200 மில்லியன் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், சீடா, யுனிசெப், போன்றவற்றின் உதவி 40 மில்லியன். 1999ஆம் வருடத்துக்கான வரவு செலவு திட்டத்தின் மொத்த பெறுமானம் 275 மில்லியன்களாகும்.

இந்த நிதிகளை எடுத்துக் கொண்டால் இரு பிரிவுகளில் அடக்கலாம்.

1. அரச கொடை கல்வி அமைச்சுக் கூடாக வழங்கப்படுவது.
2. உலக தாபனங்களின் நன்கொடை.

அரசாங்கத்தால் வழங்கப்படும் நிதி இந்நாட்டின் விவசாய, தொழிலாள வர்க்கத்தின் உழைப்புக்கூடாக திரட்டப படுவதும் பொதுமக்களின் மீதான வரிகள் மூலமும் நாட்டுக்குத் திரட்டப்படும் மொத்த நிதியிலிருந்து வழங்கப்படுவது. எனவே, இந்நாட்டு மக்களாகிய சிறுபான்மை இனத்தவரின் உழைப்பும், பங்களிப்பும் இத்தேசிய நிதியில் அடங்குகிறது. எனவே அவற்றை அனுபவிக்கும் உரிமை இம்மக்களுக்கும் உண்டு. எனவே இவற்றால் அளிக்கப்படும் பயன் சகல இன மக்களும் நியாயமான முறையில் பெறக்கூடியதாக அமைய வேண்டும்.

அடுத்து உலகத்தாபனங்களால் வழங்கப்படும் நிதியுதவி என்ன நோக்கங்களுக்காக வழங்கப்படுகிறது என்பது தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. மேலே குறிப்பிட்டது போன்று பயிற்றுநர்களைப் பயிற்றுவித்தல், மனித வளங்களை விருத்தி செய்தல், பாடசாலை முறைமையை மேம்படுத்துதல், வளமுகாமைத்துவத்தை விருத்தி செய்தல், கல்விச் சுற்றுலாக்கள், புலமைப்பரிசில்கள் வழங்குவதற்கு எனத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந் நோக்கங்கள சிறுபான்மையினருக்கு எந்தளவுக்கு நிறைவேற்றப்படுகின்றன - அவர்களை சென்றடைகின்றன என்பதுவும் கேள்விக்குறியாகவே உள்ளன. உலக நிறுவனங்கள் உதவி அளிக்கும் போது சகல இன மக்களும் இவற்றால் நன்மைப் பெறவேண்டும் என்ற நோக்கத்தினையே கொண்டுள்ளதாகக் கூறப்படுகிறது. ஆனால், நடைமுறையில் பெரும்பான்மை இனத்தவருக்கான விசேட சலுகைகளாக இவை உபயோகிக்கப்பட்டு வந்துள்ளமையை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

உதாரணமாக, புலமைப்பரிசில் பெற்று உயர்கல்வி பெற வெளிநாடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள ஆளணியினரை எடுத்துப் பார்த்தால், கடந்த 14 வருட காலத்தில் 3 சிறுபான்மை இனத்தவரே கலாநிதி பட்டப்படிப்பிற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். ஆனால், பெரும் பான்மை இனத்தவர்கள் வருடா வருடம் அனுப்பி வைக்கப்படுவதும், ஒரு சிலர் ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் வெளிநாட்டுப் புலமைப்பரிசில் பெற்று சென்றுள்ளமையையும் அறிய முடிகிறது.

கடந்த காலத்தில் உலக வங்கி நிதியுதவியுடன் தரம் 2தரம், 3தரம் பாடசாலை அதிபர்களுக்கான வதிவிடப் பயிற்சி வழங்கப்பட்ட போது சிங்கள மொழிமூல பாடசாலைகளிலிருந்து சுமார் 7000 அதிபர்களுக்கு பூரணமாகப் பயிற்சியளிக்கப்பட்டது. திட்டத்திற்கும் மேலாக அப்பாடசாலைகளிலிருந்து உதவி அதிபர்களும் அழைக்கப்பட்டு பயிற்சியளிக்கப்பட்டனர். மிகவும் வெற்றிகரமாக இத்திட்டம் நிறைவேற்றப்பட்டது. ஆனால், தமிழ்மூலப் பாடசாலைகளில் உள்ள 2300 அதிபர்களில் சுமார் 675 பேருக்கு மட்டுமே பயிற்சிகள் வழங்கப்பட்டன. ஏனையோருக்கு பயிற்சி வழங்கப்படாது அத்திட்டம் முடிவுற்றது. பயிற்சியில் கலந்துகொண்ட அதிபர்களும் பயிற்சியை நடாத்தியோரின் திறமையின்மையாலும், சரியாகத் திட்டமிடப்படாமையாலும் பெரும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியிருந்தது. அத்துடன் இப்பயிற்சியை நடாத்துவதற்கான பயிற்சியாளரைப் பயிற்றுவித்தல் திட்டத்தில் ஒரே ஒரு தமிழ்பேசும் அதிகாரியே வெளிநாடு அனுப்பி பயிற்சி பெற்றுவந்தார். அவரும் இடைநடுவில் வேறு சேவைக்கு மாறி வெளிநாடு சென்று விட்டமையால், அவ்விடத்தில் அப்பயிற்சி பெற்ற வேறு தமிழர் ஒருவரும் இதுவரை இல்லை. தமிழ் மொழிமூல பாடசாலை அதிபர்களின் பயிற்சிக்காக ஒதுக்கப்பட்ட நிதி முழுமையாக அவர்களுக்குப் பயன் படுத்தப்படவில்லை.

மேலும், தேசிய கல்வி நிறுவனத்தின் சிறுபான்மை இனத்தவருக்கு உரிய சந்தர்ப்பம் வழங்கவில்லையென்பதற்கான பல எடுத்துக் காட்டுகள் சுட்டிக் காட்டப்படுகின்றன. உதாரணமாக, கல்வி மாணியில் (B.Ed) 11 பாட' நெறிகள் மொத்தமாக உள்ளன. அதன் விபரம் வருமாறு:

1. விசேட கல்வி
2. ஆங்கிலம்.
3. அழகியல்
4. கணிதம்
5. விவசாயம்.
6. தொழில் நுட்பம்.
7. மனைப்பொருளியல்.
8. தமிழ்.
9. உடற்கல்வி.
10. ஆரம்பக் கல்வி.
11. முறைசாராக் கல்வி.

இவற்றுள் ஆங்கில மொழிமூலம் ஒன்றும், தமிழ் மொழிமூலம் ஒன்றும் நடைபெற ஏனைய ஒன்பதும் சிங்கள மொழி மூலமே நடைபெறுகின்றன. இதுவரை தமிழில் இரு பட்ட வகுப்புகள் மட்டுமே நடந்து முடிந்துள்ளன. அதற் கிடையில் இவ்வருடம் சிங்கள மொழிமூலம் ஆரம்பக் கல்விக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. ஆனால், இதேவேளை தமிழ் மொழிக்கு விண்ணப்பம் கோரப்படவில்லை. எனவே, தொடர்ந்தும் ஒரு நெறிமட்டுமே தமிழ்மொழி மூலம் நடைபெற வாய்ப்புள்ளது. ஒரு பாட நெறியே தமிழ் மொழிமூலம் உள்ளபடியால், உதார்ணமாக கணிதம் கற்ற ஒருவர் கூட ஆரம்பக் கல்வியிலேயே இந்நெறியை தொடர முடியும் என்ற நிலைமை உள்ளது. எனவே ஆசிரியர்கள் அனைவரையும் பட்டதாரிகளாக்க வேண்டும் என்ற அரசாங்கத்தின் கொள்கை தமிழ் பேசுவோரைப் பொறுத்துமட்டில் மட்டுப்படுத்தப்பட்டதாகவே அமைகிறது.

மேலும் இப்பட்ட நெறிக்கான பிரதேச நிலையங்கள் சிங்கள மொழிமூலம் நாட்டின் பல பாகங்களிலும் பரந்தளவில் உள்ளன. ஆனால், தமிழ் மொழிமூலம் இது வரைகாலமும் தேசியக் கல்வி நிறுவனத்தில் மட்டுமே நடைபெற்று வந்தது. நாட்டின் பல பகுதிகளிலிருந்தும், தமிழ் மொழிமூல அதிபர்கள் இங்கு வந்தே இப்பயிற்சி நெறியை மேற்கொள்ள வேண்டியிருந்தது. அதேவேளை தமிழர்கள் இங்குள்ள விடுதிகளில் தங்க அனுமதிக்கப்படுவதில்லை. எனவே இவர்கள் வெளியில் விடுதிகளில் பெரும் பணச் செலவுடன் தங்கியிருந்தே இப்பாடநெறியை மேற்கொள்ள வேண்டியிருந்தது.

இவ்வருடம் இந்நெறிகளை வவுனியா, கொழும்பு, கண்டி போன்ற பிரதேச நிலையங்களில் போதிக்க அனுமதி வழங்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்க விடயமாகும். ஆனால், கிழக்கு மாகாணம் முற்றாகப் புறக்கணிக்கப்பட்டிருப்பது ஏன் என்பது புரியவில்லை.

கல்விமுதுமாணி (MED) நெறிக்கு சிங்களம், ஆங்கிலம் ஆகிய இரு மொழிமூலமே வகுப்புக்கள் நடைபெறுகின்றன. சிங்களவர்கள் தமது தாய் மொழிமூலம் சுலபமாகக் கற்கக் கூடியதாக இருக்க தமிழர்களே ஆங்கில மொழி மூலமே கற்க வேண்டியிருக்கிறது. இதனால், ஆங்கில மொழி தேர்ச்சியில்லாத பெரும்பாலான தமிழ் அதிபர்கள் இப்பாடத்தினைப் பெற வாய்ப்பில்லாது போகிறது. இப்பாட நெறியை ஆங்கிலத்தில் கற்று தமிழில் பரீட்சை எழுத சலுகை வழங்கப்பட்டுள்ளது. இது ஓரளவு வரவேற்கத்தக்க நடவடிக்கையாகும். இல்லையெனில், பரீட்சையில் பெரும்பாலானவர்கள் தேச்சியடைய முடியாதவர்களாக போய்விடுவர் என்ற கருத்தும் உண்டு.

இப்பாட நெறியை தற்போது பெரும்பாலும் சிங்கள விரிவுரையாளர்களே ஆங்கில மொழியிலும் விரிவுரையாற்றுகின்றனர். இப்பாட நெறியினை தமிழ் மொழிமூலம் நடாத்த பொருத்தமான வள ஆளணியினர் இல்லையா என்ற கேள்வி இன்று எழுந்துள்ளது. நாம் அறிந்த வகையில் கொழும்பிலேயே சுமார் 8 பேர் இவ்வகுப்பினை நடாத்தக் கூடியவர்களாக உள்ளனர். ஆனால், இதற்கான விளம்பரப்படுத்தல் செய்யப்படவில்லை. பொருத்தமான தமிழ் மொழிமூல வள நபர்கள் இல்லையென்ற முடிவுக்கு தேசியக் கல்வி நிறுவனம் தாமே வந்திருப்பது எதன் அடிப்படையில் என்று தெரியவில்லை. இச்செயலானது தாய் மொழிமூலக் கல்வியை மறுக்கும் செயலுக்கொப்பானதாகும்.

அடுத்து தேசியக் கல்விக் கொள்கையை முன்னெடுத்துச் செல்லும் தேசியக் கல்வி நிறுவகம் இந்நாட்டு தேசிய மொழிகளில் ஒன்றான தமிழுக்கு எந்தளவுக்கு சந் தர்ப்பம் வழங்கி வருகிறது என்ற வினா எழுப்பப்படுகிறது. நிறுவனத்தால் அனுப் பப்படும் சுற்றறிக்கைகள் பெரும்பாலும் சிங்கள மொழிமூலமே அனுப்பப்படுகின்றன. இதனால் அங்கு கடமையாற்றும் தமிழ் மொழி மூல ஆளணியினர் பெரும் சிரமத்தை எதிர் நோக்க வேண்டியுள்ளது. இந் நாட்டில் தமிழும் அரச கரும மொழி என்ற அந்தஸ்தைப் பெற்றிருந்தும் கூட மொழியோடு தொடர்புடைய ஒரு தேசிய நிறுவனம் அரசாங்கக் கொள்கைக்கு மாறாக தமிழை புறக்கணித்து செயற்படுவது வேதனைக்குரிய செயலா கும்.

| புதவிநிலை | தரம் | எண்ணிக்கை | சிங்களவர் | சிறுபான்மையினர் |
|---|---|---|---|---|
| பிரதிப் பணிப்பாளர் நாயகம் | தரம் 1 | 1 | 1 | |
| உதவிப் பணிப்பாளர் நாயகம் | தரம் 2 | 5 | 5 | |
| பணிப்பாளர் | தரம் 3 | 22 | 22 | |
| பிரதம செயற்திட்ட அதிகாரி | தரம் 4 | 71 | 63 | 8 |
| கல்விசாரா உத்தியோகத்தர்கள் | தரம் 4 | 4 | 4 | |
| திட்டமிடல் அதிகாரிகள் | தரம் 5 | 169 | 149 | 20 |
| கல்விசாரா உத்தியோகத்தர்கள் | தரம் 5 | 9 | 9 | |
| உதவி செயற்திட்டஅதிகாரிகள் | | 128 | 128 | |
| கல்விசாரா உத்தியோகத்தர் | | 10 | 5 | 5 |
| கல்விசாரா பதவிகள் | தரம் 6 | 16 | 16 | |
| 〃 | தரம் 7 | 38 | 38 | |
| 〃 | தரம் 8 | 72 | 72 | |
| 〃 | தரம் 9 | 67 | 67 | |
| 〃 | தரம் 10 | 41 | 41 | |
| 〃 | தரம் 11 | 56 | 56 | |
| | | 709 | 676 | 33 |



தேசியத்தை தனது பெயரிலேயே வரித்துக்கொண்டுள்ள தேசியக் கல்வி நிறுவனம் தனது நேர்மையான நடவடிக்கைகள் மூலம் சிறுபான்மை இனத்தவர்களின் குறைகளைக் களைய முன்வரவேண்டும். தற்போது பிரதிப்பணிப்பாளர் நாயகமாக மூவர் செயற்படுகின்றனர். மூவரும் பெரும்பான்மை இனத்தைச் சார்ந்தவர்கள். இவர்களில் ஒருவர் சிறுபான்மை இனத்தவராக நியமிக்கப்படல் வேண்டும். உதவிப்பணிப்பாளர் நாயகமாக தற்போது பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ஐவர் செயற்படுகின்றனர். இவர்களில் இருவர் சிறுபான்மை இனத்தவராக (1 தமிழர், 1முஸ்லிம்) நியமிக்கப்பட வேண்டும்.

அடுத்த பிரதான அம்சம் தீர்மானம் எடுக்கும் மட்டத்தில் தமிழ் அதிகாரி ஒருவர் தானும் இந் நிறுவனத்தில் இல்லையென் பதாகும். எனவே எந்த ஒரு சிறு செயலுக்கும் பெரும்பான்மை அதிகாரிகளினது அனுமதியும், ஆலோசனையும் பெற்றே தமிழ் அதிகாரிகள் செயற்பட வேண்டியுள்ளது. அது மட்டுமல்ல தமிழ் மொழி மூல பாட நூல்கள் அனைத்தும் சிங்கள மொழியில் எழுதப்பட்டு தமிழுக்கு மொழிமாற்றம் செய்ய வேண்டிய நிலைமை நிலவுகிறது. தமிழ் மொழியில் எழுதக்கூடிய ஆளணியினர் இல்லையா என்ற கேள்வி எழுகிறது. இவற்றை நோக்கும் போது தேசியக் கல்வி நிறுவனத்தில் தமிழ் மொழி மீதான பாரபட்சம் தெட்டத் தெளிவாகிறது.

நிறுவனத்தில் கடமையாற்றும் சில மூத்த தமிழ் அதிகாரிகள் சேவை நீடிப்பிலேயே கடமையாற்றுகின்றனர். எனவே, இவர்கள் பிரச்சினையின்றி சேவை நீடிப்பு பெறுவதிலேயே கருத்தாக இருப்பதால், குறைபாடுகளை கண்டும் காணாதவர்களாக சுட்டிக்காட்ட முடியாதவர்களாக இருக்கும் பரிதாபநிலை நிலவுகிறது.

தேசியக் கல்வி நிறுவன ஆண்டறிக்கை 1986இல் "குறைபாடுகளும், தடைகளும்" என்ற பகுதியில் (40ம்பக்கம்) "அலுவலர் குழு போதாமை விசேடமாக தமிழ் உத்தியோகத்தர் பற்றாக்குறை திட்டமிட்ட இலக்குகளை அடைய தடையாக உள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. தேசிய கல்வி நிறுவனம் நிறுவப்பட்டு 14 வருடங்களாகியும், இக்குறைபாடு இன்னும் நிலவுகிறதென்றால் இதற்குப் பொறுப்புச் சொல்லக் கூடியவர்கள் யார்?

இன்று இலங்கையின் இனவிகிதாசாரம் சிங்களவர் 74வீதமும், தமிழர் 18வீதமும், முஸ்லிம்கள் 8வீதமும் என எடுத்துக் கொண்டால், 710 மொத்த ஆளணியில் சிங்களவர்கள் 525 பேரும் தமிழர் 128பேரும், முஸ்லிம் 57 பேரும், இருக்கமுடியும். ஆனால், விகிதாசாரத்தை விட சிங்களவர்கள் 160 பேர் மேலதிகமாக உள்ளனர். இந்த 160 இடங்களும் சிறுபான்மையினத்தவருக்குரியதாகும். எனவே சிறுபான்மையினத்தவருக்குரிய இடங்கள் பெரும்பான்மையினத்தவருக்கு தாரை வார்க்கப்பட்டுள்ளது அல்லது பெரும்பான்மை இனத்தவரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது எனக் கொள்ள முடியும். எனவே தேசிய கல்வி நிறுவனத்தில் சிறுபான்மை இனம் புறக்கணிக்கப்பட்டுள்ளது என்பது வெட்ட வெளிச்சமாகிறதல்லவா?

தேசியத்தை தனது பெயரிலேயே வரித்துக்கொண்டுள்ள தேசிய கல்வி நிறுவனம் தனது நேர்மையான நடவடிக்கைகள் மூலம் சிறுபான்மை இனத்தவர்களின் குறைகளைக் களைய முன்வர வேண்டும். தற்போது பிரதிப்பணிப்பாளர் நாயகமாக மூவர் செயற்படுகின்றனர். மூவரும் பெரும்பான்மை இனத்தைச் சார்ந்தவர்கள். இவர்களில் ஒருவர் சிறுபான்மை இனத்தவராக நியமிக்கப்படல் வேண்டும். உதவிப்பணிப்பாளர் நாயகமாக தற்போது பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ஐவர் செயற்படுகின்றனர். இவர்களில் இருவர் சிறுபான்மை இனத்தவாராக (1 தமிழர், 1முஸ்லிம்) நியமிக்கப்படல் வேண்டும். 22 பணிப்பாளர்கள் கடமையாற்றுகின்றனர். இவர்கள் அனைவருமே பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள். இவர்களில் குறைந்தது 5 பேராவது (3தமிழர், 3முஸ்லிம்) சிறுபான்மை இனத்தவராக இருத்தல் வேண்டும். ஏனைய ஆளணியினரிலும் இன விகிதாசாரம் பின்பற்றப்படல் வேண்டும்.

இனவாத சிந்தனைகளற்ற நீதியும், நியாயமும், நேர்மையும், மனித நேயமும் கொண்டவர் எனக் கூறப்படும் பேராசிரியர் லக்ஸ்மன் ஜயதிலக்க அவர்கள் இந்நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகமாக வந்த பின்னர், அண்மையில் 9 பேருக்கு பிரதம செயற்றிட்ட அதிகாரியாக பதவி உயர்வு வழங்கியுள்ளார். அவ்வாறே கல்வி மாணிகற்கை நெறிகளை வவுனியா, கண்டி, கொழும்பு போன்ற பிரதேச நிலையங்களிலும், தமிழ் மொழிமூலம் ஆரம்பிக்க அனுமதியளித்துள்ளார். தமிழ் மொழிமூலம் ஆரம்பக் கல்விக்கும் கல்விமாணி கற்கைநெறிக்கும் விண்ணப்பம் கோரியுள்ளார்.

இந்நாட்டின் தலைவிதியை நிர்ணயிக்கின்ற கல்வித்துறை சார்ந்த தேசியக் கல்வி ஆணைக் குழுவின் தவிசாளராகவும், தேசியக் கல்வி நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகமாகவும் திகழும் பேராசியர் லக்ஸ்மன் ஜயதிலக்க அவர்கள் எடுக்கும் முயற்சிகளை நாம் பாராட்டலாம். ஆனால் அவர் அதில் முழுமையாக வெற்றி பெற இங்கு நிலவும் சூழலை வெற்றி கொள்ள வேண்டும். அவரால் வெற்றி கொள்ள முடியுமா?

வே.சண்முகராஜா

அதிபர்,

நுகேகொட தமிழ் மகா வித்தியாலயம்



## மேற்கில் இன்றைய பெண்ணிலைவாதம்:

# தனிப்பட்ட விடயங்கள் அரசியலாவது எப்படி?

### "கோணேஸ்வரிகளின்" முக்கியத்துவம்

பிரபல பெண்ணிலைவாத எழுத்தாளரும், **DIFFERENT FOR GIRLS, HOW CULTURE CREATES WOMAN, HUNGRY FOR YOU, FROM CANNIBALISM TO SEDUCTION, A BOOK OF FOOD** போன்ற ஐந்து பெண்ணிலைவாதம் சம்பந்தப்பட்ட புத்தகங்களை எழுதி பல வாதப்பிரதிவாதங்களுக்குக் காரணமாய் இருந்தவரான ஜோன் ஸ்மித் (John Smith) என்னும் இப்பெண்ணிலை புத்திஜீவி இன்று மேற்கில் காணப்படும் பெண்ணிலைவாதத்தின் போக்குப்பற்றி குறிப்பிடுவன சுவையான செய்திகளே.

அண்மைக் காலத்தில் அமெரிக்காவிலும் சரி, இங்கிலாந்திலும் சரி பெண்ணியம் சம்பந்தமாக எழுதியவர்கள் எல்லாம் அதன் தத்துவம் சார்ந்த சிந்தனையை எழுதுவதற்குப் பதிலாக தமது தனிப்பட்ட சொந்த அனுபவங்களைக் கதைகளாகத் தந்தவர்களாகவே உள்ளனர். NAOMI WOLF என்பவர் தான் எவ்வாறு தன் கன்னிமையை இழந்து கலியாணத்துக்குரிய உடையைத் தெரிவுசெய்தார் என்பதையும், KATIE ROIPHE என்பவர் தனது **THE MORNING AFTER** என்ற நூலில் எவ்வாறு திகதி குறிப்பிடப்பட்ட பாலியல் வன்புணர்வு பற்றி பேசுகிறார் என்பதையும் இன்னும் NANCY FRIDAY என்பவர் தான் எவ்வாறு கல்லூரி அரங்கில் அழகுப் பொருளாகப் பாவிக்கப்பட்டார் என்பதையும் சுட்டிக்காட்டி இவையெல்லாம் வாசிப்புக்கு சுவையூட்டுபவையாக இருக்குமே ஒழிய வாசகர் சிந்தனைக்கு உகந்த வையாக இருக்கப்போவதில்லை என்பதை ஜோன் ஸ்மித் கூறுகிறார்.

"முப்பது வருடங்களுக்கு முன்னர் வெளிவந்த **FEMININE MYSTIQUE, THE FEMALE EUNUCH, SEXUAL POLITICS** ஆகிய புத்தகங்கள் வெளிப்படுத்திய கருத்துக்கள் எம்மைச் சிந்திக்க வைத்தன. நாம் அவற்றை முழுவதும் ஏற்றுக் கொள்ளா-விட்டாலும் அவை ஏற்படுத்திய அருட்டுணர்வுகள் பல" என்று ஸ்மித் கூறிவிட்டு BROWN MILLERன் **AGAINST OUR WILL** என்ற நூல், பெண்களைத்தேடிக் கொலை செய்யும் (RIPPER MURDERS) கொலைகாரர் பற்றிய தனது **MISOGYNIES** என்ற நூலுக்கு எவ்வளவு அருட்டுணர்வை அது ஏற்படுத்துகிறது என்று கூறுகிறார்.

இன்று பெண்களுக்குத் தேவைப்படுவது என்ன?

இன்று தேவைப்படுவது அவர்களைத் திருப்திப்படுத்தும் புத்தகங்கள் அல்ல. மாறாக, அவர்களைச் சிந்திக்க வைக்கும் புத்தகங்களே. X எழுதினால் Y தான் வரும் என்கிற அலுத்துப் போன சமன்பாடுகள் இனியும் உதவப் போவ-தில்லை என்று கூறும் ஜோன் ஜ்மித் இக்கருத்தை கேலி செய்வது போலவேதான் **DIFFRENT FOR GIRLS** என்ற நூலை எழுதியதாகவே கூறுகிறார்.

இன்று பெண்கள் தமது தனிப்பட்ட வாழ்க்கையை தம் அனுபவங்களை எழுதுவதை பெரிய அளவில் செய்கின்றனர். அண்மையில் NANCY FRIDAY என்பவர் எழுதிய **THE POWER OF BEAUTY** என்னும் நூல் பெண்களின் உடல், அதன் அழகு பற்றிய வழமையான கொள்கை-களை பேணுவதன் மூலம் அவர்களைத் திருப்திப்பட வைக்கிறதே ஒழிய அழகு பற்றி இத்தகைய பழைய கொள்கைகளை அழித்து புதியவற்றை உருவாக்கு-வனவாய் இல்லை.

பெண்கள் தமது பாலியல் வாழ்க்கை பற்றியெல்லாம் எழுதுவதில் தப்பில்லை. பெண்களின் மாதவிடாயும், அதற்காக அவர்கள் கடைகளில் வாங்கும் SANITARY TOWELSம் ஒரு மிகுந்த அவமானச் சின்னமாக 60களில் கணிக்கப்பட்டன. இக்காலத்தில் இது பற்றியெல்லாம் எழுதிய GERMAINE GREER என்பவர் தனது **THE FEMALE EUNUCH** என்ற நூலில், தமது மாதவிடாய் இரத்தத்தை சுவைத்துப் பாக்காத பெண்களுக்கெதிராக சவால் விடுகிறார். இதன் நோக்கம் இவை பற்றியெல்லாம் காட்சிப்படுத்துகின்ற (EXHIBITIONISM) கீழான நோக்கமல்ல. இத்தகைய விஷயங்கள் சம்பந்தமாக காலாகாலமாக ஒட்டிவரும் தடைகளையும் (TABOOS) விஷமத் தனங்களையும் உடைத்தெறிவதற்கே.

'ஆகவே இங்கே நாம் ஒரு முக்கியமான விஷயத்தைக் கவனிக்க வேண்டும்' என்று ஜோன் ஸ்மித் கூறி பின்வருமாறு விளக்குகிறார். பெண்கள் தமது சொந்த வாழ்க்கையில் நேர்ந்த அனுபவங்கள் பற்றியெல்லாம் தாரளமாக எழுதலாம். தாம் பாலியல் வன்புணர்வு-குள்ளாக்கப்பட்டவை, தமது பாலுணர்வு எழுச்சிகள், அதன் விளைவுகள் என்று பலவற்றை எழுதலாம். ஆனால், எழுதுவது இத்தகைய 'கதைசொல்லி' வாசகர்களை கவர்வதற்காக இல்லாமல் மாறாக, இவற்றை ஆதாரமாகக் கொண்டு சமூகத்தில் பேணப்படும் பெறுமதிகள் யாவற்றையும் பிரக்ஞைபூர்வமாக உடைத்தெறிவதற்காக இருக்க வேண்டும்.

இங்கு தான் ஒரு முக்கிய அம்சம் முன்வைக்கப்படுகிறது.

பெண்களின் தனிப்பட்ட அந்தரங்க விஷயங்கள், அவர்களுக்கு நேர்ந்த அநீதிகள், துன்பங்கள், தடைகள் என்பவை வெளிக்கொணரப்படும் போது இந்த அநியாயங்களையெல்லாம் உடைத்தெறிய பெண்கள் அணிதிரள-வேண்டும் என்னும் கோஷம் மேலெழுகிறது. இந்தக் கணத்தில் தான் தனிப்பட்ட அந்தரங்க விஷங்கள் இயல்பாகவே அரசியல் மாற்றம் பெறுகின்றன. அதனால் தான் பெண்களின் தனிப்பட்ட விஷயங்களே அரசியல் என்னும் கோஷம் பெண்ணிலைவாதிகளின் அடித்தளமாக மாறுகிறது. (The personal is political' became one of the founding slogans of the feminist movement.)

60களிலும், 70களிலும் பெண்ணி-லைவாதிகள் எத்தனையோ எழுதியும் கோஷம் வைத்தும் இன்னும் நிலைமை பெரிய முன்னேற்றம் கண்டதாய் இல்லை. இன்று 90களில் பல வித்தியாசமான சூழல்கள் உருவாகியுள்ளன. இவற்றை உணர்ந்து எமது சொல்லாடல்கள் புதிய கலாசார உருவாக்கத்திற்கு வழிகாட்டு-வனவாய் இருக்க வேண்டுமே ஒழிய தனிப்பட்ட விஷயங்களின் கதை சொல்லித்தனங்களாக இருக்கக் கூடாது என்று கூறி முடிக்கிறார் ஜோன் ஸ்மித்.

இதன் பின்னணியில் தான் சரிநிகரில் வெளியான 'கோணேஸ்வரிகள்' கவிதையின் வலுவான கருத்து வளத்தைக் காணலாம். கோணேஸ்வரிகளில் வரும் விஷயங்கள் எவ்வாறு தனிப்பட்ட நிலையிலிருந்து பொதுமைப்படுத்தப்பட்டு அரசியல் உருவாக்கம் பெறுகிறது என்பது மட்டுமல்ல, அக்கவிதையை பிரச்சினைக்குள்ளாக்கிய அக்கவிதையில் பாவிக்கப்படும் சொற்கள் பாலியல் ரீதியாக பெண்களைச் சூழ்ந்துள்ள தடைகளையும், அநீதிகளையும் உடைத்-தெறிவனவாக இருப்பதோடு மேலே ஜோன் ஸ்மித் குறிப்பிடும் புதிய கலாசார உருவாக்கத்திற்கு வழிகாட்டுவனவாயும் உள்ளன என்பதையும் புரிந்து கொண்டால் அக்கவிதையின் பரப்பு எவ்வளவு ஆழமானது என்பதையும் அறியலாம்.

*'துவைதிலி'*



## போர்க்கால வாழ்வின் பதிவுகள்!

நாம் வாழுகின்ற இந்தப் போர்க்காலத்தில் நாம் இழந்தவைகள் அனேகம்.

சாதி, மத, இன பேதமின்றி எல்லோரும் இழந்தவைகள் ஈடுசெய்யப்பட முடியாதன.

இழந்த உயிர்களுக்காய் அஞ்சலிகளையும், உடமைகளுக்காய் நஷ்ட ஈடுகளையும் பெற்றுக் கொண்டிருக்கிறோம்.

கறையான்கள் அரிப்பதுபோல்' வாழ்வு இன்னும் அரிபட்டுக் கொண்டுதானிருக்கிறது.

நாம் போராடி வருகின்ற காலம் அதிகம்.

நாம் உருக்குலைந்து நடந்து வந்த காலமும் அதிகம். இடைவெளியும் தூரம்.

முகாம் முகாமாய் குந்தியிருந்து முகங்களை இழந்து விட்டோம்.

பட்டினி வயிறுகளுக் கூடாக எலும்புளையும், இன்னொரு எதியோப்பி-யாவையும் கண்டு கொண்டிருக்கிறோம்.

எமது கலை, கலாசார விழுமியங்கள் முகாம்களின் அருகேயிருக்கிற வீடியோ கொட்டகைக்குள் அமிழ்ந்து போகிறது.

கூட ஒரு இடமின்றி விரகம் வெட்ட வெளியில் வீணாகிறது.

'பைப்' அடிகளில் இன்னொரு கலாசாரம் ஆடை அவிழ்க்கிறது.

இப்படி இப்படி நாங்கள்.. ஈழத்தின் பல மூலைகளுக்கும் சிதறிவிட்டோம்.

எனினும்... எம்மால் இழந்தவைகளை, இறந்த காலங்களை மறக்க முடியவில்லை.

கொக்கட்டிச்சோலை, மைலந்தனைகளை தமிழர்களும்,

அழிஞ்சிப்பொத்தானை, காத்தான்குடிகளை முஸ்லிம்களும்

அனுராதபுரம், வெலிக்கந்தைகளை சிங்களவர்களும் இன்னும் மறக்காமல் சுமந்து கொண்டிருக்கிறோம்.

ஒவ்வொரு கூட்டத்தை ஒவ்வொருவராய் வெளியேற்றிக் கொண்டிருக்கிறோம். கூடவே போராடிக் கொண்டுமிருக்கிறோம்.

இந்த வரலாற்றின் எச்சங்களை எங்கெல்லாமோ, எவரெவரோ சுமந்து கொண்டும் திரிகிறோம் ஒரு புறம்.

இந்த நிகழ்வுகளூடு எம் மண்ணில் புதைந்தெழுந்து உரம்பாய்ச்சிய கவிதைகள் வாழ்வின் மீதான காதலும், சோகமும், வேகமும் கொண்டவை.

கடந்து போன இரு தசாப்தத்திற்கும் மேலான வாழ்வை மிகக் காத்திரமாய் பதிவு செய்துகொண்டிருப்பவைஇந்தக் கவிதைகள் தான்.

பொறுக்கியெடுக்கமுடியுமான கதைகளும் இருக்கின்றன.

ஆனால், கவிதைகள் படம் பிடித்துக் காட்டியதுபோல் எம் அவல வாழ்வை வேறெதுவும் காட்டவில்லைதான்.

இன்னும் இன்னும் இன்னுமாய் போராட்ட நிலத்திலிருந்தும், போராடிய மக்களிடமிருந்தும், போராடியவர்களால் போட்டடிக்கப்பட்டவர்களிடமிருந்தும் கவிதைகள்.. வித்துக்களாய் முளைத்தெழும்பிவருகின்றன.

இவற்றால் நாம் எத்தனையோ கவிஞர்களை இனம்கண்டிருக்கிறோம். மகுடம் சூட்டியிருக்கிறோம்...

இந்தப்போக்கில் ஒரு பதிவாய்... ஒரு தடமாய்.. தமிழ் மக்கள் போராடிக் கொண்டிருந்த எல்லோருக்கும் ஏற்புடையதான ஒரு காலத்தில் 'மரணத்தில் வாழ்வோம்' கவிதைத் தொகுதி யாழ் மண்ணிலிருந்து வந்தது.

பின்னுமொரு காலத்தில் போராட்டம் வேறு வேறாய் தாறுமாறாய்ப் போன காலத்தில் உயிர்ப்பான கவிதைகள் வேறு திக்கிருந்தும் முளைத்தன. பல முஸ்லிம் சமூகத்துக் கவிஞர்கள் தோன்றினார்கள். தங்கள் வாழ்வும் மரணத்துள்தான் இருக்கின்றதென்பதை உணர்ந்தார்கள். எழுதினார்கள். அவை உதிரிகளாய் சிதறிக்கிடந்தன. சின்னச் சின்ன தொகுப்புக்களாயும் வந்தன. என்றாலும், ஒரு வரலாற்றுப் பதிவாய் அவை ஆகவில்லை.

மரணத்துள் வாழ்வோம்' போன்றதொரு தொகுப்பொன்றை முஸ்லிம் கவிஞர்களின் கவிதைகளைக் கொண்டு வெளியிடவேண்டும் என்று பலர் விரும்பினார்கள். விரும்புகிறார்கள். இந்த விருப்புள்ளவர்களோடு தோள்கொடுத்து, முன்னின்று தொகுத்து ஒத்துழைக்க கிழக்கின் முஸ்லிம் கவிஞர்களுள் முக்கியமானவ்வரான அஷ்ரப் சிஹாப்தீன் முன்வந்துள்ளார்.

இவரின் இத்தொகுப்புக்கு ஒத்துழைக்க முஸ்லிம் கவிஞர்கள் முன் வரவேண்டும்.

தாங்கள் எழுதிய கவிதைகளுள் மிகச் சிறந்ததாகக் கருதும் ஐந்து கவிதைகளை அவர்கள் பற்றிய விபரங்களோடு கீழுள்ள முகவரிக்கு இம்மாதம் முப்பதாம் திகதிக்கு முன் அனுப்பிவைக்குமாறு அவர் கேட்டுக் கொள்கிறார்.

**அஷ்ரப் சிஹாப்தீன்**
37, Dhankanatha Road,
Mabola, Wattala.



# தலாக் தலாக் தலாக் தலாக்

(இறுதிப்பகுதி)

ஒரு போன் கால் வந்தது.

ஹலோ!

ஹலோ நிஷாவா.. என் பேரு லட்சுமி. தேவியோட பிரண்ட்!

எந்த தேவி?

சிஸ். உங்க கணவரோட உங்களுக்கு பிராப்ளம்னு எனக்கு தெரியும். பாருங்க.. உங்க சாமுக்கும் தேவிக்கும் ரொம்ப வருஷமா தொடர்பு.

இப்ப எதுக்கு போன் பண்ணுனீங்க?

என்னை தப்பா நினைச்சுடாதீங்க. சிஸ். உங்களை சாம் அடிச்சிட்டு படுக்கையிலே கசாமுசா பண்ணிட்டார்னு தேவி சொல்லி சிரிச்சிக்கிட்டு இருந்தா. எனக்கு மனசு கேட்கலை பாருங்க.... சிஸ்.. உங்களை நினைச்சா பாவமா இருந்துச்சு அதான். அவளுக்கு தெரியாம அவ டைரியிலே இருந்துதான் உங்க போன் நம்பரை எடுத்தேன். உங்களுக்கு எப்படியாவது போன் பண்ணி இன்னும் பல விஷயங்களை சொல்லனும்னு ட்ரை பண்ணுனேன். தேவி திமிரு பிடிச்சவ... தேவிக்கும் சாமுக்கும் மார்ச் மாதம் கல்யாணம் நடந்துச்சு.

கல்யாணமா?

ஆமா! திருட்டுத்தனமா! கோயில்லே காலைக் கல்யாணம். கல்யாணத்துக்கு சாம் குடும்பத்தாரும் வந்து இருந்தாங்க. வீடியோ எடுத்தாங்க. படம் எடுத்தாங்க. இப்ப சாமும் தேவியும் தேவியோட தங்கச்சி வீட்டுலே இருக்காங்க சாம் தங்கைக்கும் அண்ணனுக்கும் எல்லாம் தெரியும். நான் தான் போன் பண்ணுனேன்னு சொல்லி-டாதீங்க சிஸ்.. டேக் கேர் ப்ளீஸ்.. ஒகே!

ஹலோ.. தேவி எங்க வேலை பார்க்கிறா?

கம்பனி பேரு சொல்லிட்டு போனை வச்சிட்டாங்க.

(மௌனம். காத்திருப்பு. பொறுமையின்மை )

நான் கம்பனி ரிசபஷன்லே வெயிட் பண்ணிக்கிட்டிருந்தேன். தேவி வந்தாள். அவ அங்கே ஒரு சூப்பர்வைசர்.

யெஸ் கேன் ஐ ஹெல்ப் யூ?

ஐ எம் நிஷா!

தெரியும். என்ன வேணும்?

எப்படி தெரியும்?

உன் கல்யாணப் போட்டோவை காட்டியிருக்காரு.

நீ மதம் மாறிட்டியா?

இல்ல.

நீ செய்யுறது ஹராம் தெரியுமா?

ஹராம் எனக்கா சாமுக்கா? நீ இப்ப வந்தவ. எனக்கு சாமை ஸ்கூல்டேயில்லை இருந்து தெரியும் நீ ஊர்க்காரி சாம் எனக்குத்தான் சொந்தம். நான் நினைச்சா உன்னை சாம்கிட்டே இருந்து வெட்டிவிட முடியும். பாவம்னு விட்டு வைச்சிருக்கேன். பேசாம வீட்டுக்குப் போ

யூ... யூ... யூ. யூ. என் புருஷனை எனக்குத் திருப்பிக் கொடுத்துடு. இல்லைன்னா நான் போக மாட்டேன்.

நவ் லுக் ஹியர் இது என் ஆபிஸ் ஏரியா. இங்கே நீ வந்ததே தப்பு. ப்ளீஸ் லீவ் இல்லேன்னா செக்யூரிட்டியை கூப்பிட வேண்டிவரும் . செக்யூரிட்டி செக்யூரிட்டி!

அவளை பலம் கொண்ட மட்டும் ஓங்கி அறைஞ்சேன். அங்குள்ளவங்க என்னை வெளியே கொண்டாந்து விட்டாங்க. அவமானப்பட்டாலும் அவளை அவளோட இடத்துலேயே அவமானப்படுத்-திட்டோம்கிற சந்தோஷத்தோட வீட்டுக்கு வந்தேன். வீட்டுல அவர் இருந்தாரு. அவருக்கு ஹேன்ட் போன் மூலமாக தகவல் சொல்லிட்டா போல இருக்கு.

என்ன துணிச்சல் இருந்தா ஆபிசுக்கு போய் என் தேவியை அறைஞ்சிட்டு வருவேன்னு மிரட்டுனாரு.

நீங்க ஒரு முஸ்லிம் அவளுக்கு உங்களுக்கும் திருட்டுத்தனமா கோயில்ல கல்யாணம்.. வெட்கம் இல்லை.. ஹராம் இல்லை. சட்டப்படி குற்றம் இல்லை.

என்னடி சட்டம்? என்ன ப்ரூப்? எவிடன்ஸ் இல்லாம நீ ஒண்ணும் பண்ண முடியாது. நான் நினைச்சா நீ கள்ள புருஷன் வச்சிருக்கேன்னு கதை கட்ட முடியும். இந்த பிளாட்லே இருந்து உன்னை தள்ளிவிட்டு தற்கொலை பண்ணிக்கிட்டேன்னு நம்ப வைக்க முடியும். பைத்தியம் பிடிக்கிற மாதிரி மாயம் மந்திரம் செய்ய முடியும். தேவியையா அறைஞ்சா.. இந்தா வாங்கிக்க. கன்னம் வீங்குற வரைக்கும் அறைஞ்சாரு. உதைச்சாரு..

இது என் ரெண்டாவது தலாக்னுக்கு கத்திட்டு போயிட்டாரு.

(மௌனம்.)

மறுவாரம் சம்சுதீன் முஸ்தபா கடையிலே பையனோட ஷாப்பிங் போயிருந்தேன். திடீர்னு.. உம்மா பாரும்மா.. பாரும்மா.. வாப்பா வாப்பா வாப்பான்னு கத்தினான். தேவியும் அவரும் நகைக்கடை பக்கம் நின்னுக்கிட்டிருந்தாங்க. உம்மா யாரும்மா அந்த பொம்பிளைன்னு பையன் கேட்டான். வாப்பா வாப்பான்னு கூப்பிட்டான். அவரு திரும்பிப் பார்த்தாரு பையன் அதிர்ச்சியிலே மயக்கம் போட்டு விழுந்தான். எனக்கு கையும் ஓடலை காலும் ஓடலை. பையன் மயங்கி விழறதை பார்த்துட்டு தேவியைக் கூட்டிக்கிட்டு அவரு அவசரமா வெளியேறிட்டாரு, சொந்த மகன் மயங்கி விழுறதைப் பார்த்துட்டு இன்னொருத்தியோட ஓடுகிற அப்பனை அன்னைக்குத்தான் பார்த்தேன்.

நான் 'எம்பி'யைப் போய் பார்த்து அட்வைஸ் கேட்டேன். அவங்க சிவில் கோர்ட்டுலே பெர்சனல் புரொட்டக்ஷன் ஆர்டர் எடுத்துகிட்டு, மெயின்டன்ஸ்க்கு அப்ளை பண்ணுங்கன்னு சொன்னாங்க. மற்ற விஷயங்களை ஷரியா கோர்ட்டு முடிவு பண்ணனும்னாங்க. நான் பிபிஓக்கு அப்ளை பண்ணினேன். அவரை கோட்டுக்கு கூப்பிட்டாங்க. எல்லாருக்கும் என் மேலே சரியான கோபம். மீட்டிங் போட்டாங்க.

மீட்டிங் மாமியார் வீட்டுல. பாலைவனத்துல கழுத்து வரைக்கும் மணல்ல புதைக்கப்பட்ட ஒரு பெண்ணோட நிலைமை எனக்கு. என்னைச் சுற்றி பரிகாசம் பண்ணியபடி ஒவ்வொருவரா கல்லெறிஞ்சாங்க.. யாருக்கும் என்னுடைய தார்மீக கோபத்தைப் பற்றி அக்கறையில்லை.

(சுற்றி வந்தபடி மேடையின் மையத்தைக் குறிவைத்து கல்லெறிகிறாள்.)

ஏய் எப்படி நீ உன் புருஷனை மெயின்டனன்ஸ் கோர்ட்டுக்கு இழுக்கலாம். ஏய் நீ ஒரு பொண்ணு. ஏய் எப்படி நீ உன் புருஷனை மெயின்டன்ஸ் கோர்ட்டுக்கு இழுக்கலாம். ஏய் நீ ஒரு பொண்ணு. இப்படி தான் இருந்தது அந்தக் கூட்டத்தோட வாதம். என்னை பேசவிடாம மூளையைக் கழுவப் பார்த்தாங்க. ஆனா அவரு மட்டும் வரலை. பின்னால இருந்து டைரக்ட் பண்ணிக்கிட்டு இருந்தாரு.

(ஒவ்வொரு கூற்றின் முடிவிலும் அரங்கத்துள் கல்லெறிகிறாள்.)

ஊர்க்காரிங்களுக்கு செக்ஸ் மட்டும் தான் வாழ்க்கை. எப்போதும் உனக்கு குறுகிய புத்தி. எவ்வளவு கம்பென்சேஷன் வேணும்னு சொல்லு.. தம்பியை இனி மீதி வாழ்க்கையையாவது நிம்மதியா வாழ விடு.. இல்லை தம்பி உன் கூட படுத்ததுக்கு எவ்வளவு தொகைன்னு சொல்லு.. நாங்க கொடுத்துடறோம் அவனை திருப்திப்படுத்த முடியாததுனால தான் வேற பொம்பளையை தேடிப்போயிருக்கான்.

அவர் அண்ணன் தகாத வார்த்தைகளால மனசை புண்படுத்தினாரு.

சொல்லப்போனா தேவி உங்களை விட சாதுமா.. ஊமைக்கோட்டான் மாதிரி இருந்துக்கிட்டு ஒன்னுக்குப் பத்தா செய்யுறது எல்லாம் அவங்களுக்குத் தெரியாது. ஷீ இஸ் எ ஜென்டில் லேடி யூ நோ? உங்களைவிட அவ ரொம்ப பிரிட்டி-யாகவும் பெர்சானலிட்டியாகவும் இருப்பா. இதனாலதான் அண்ணன் அங்க தாவி இருக்காரு. அவரு ஆம்பிளை.. அவருக்கு உரிமையிருக்கு.. அவரை அவமானப்படுத்த கோர்ட்டுக்கு இழுத்திருக்கீங்களே.. இதெல்லாம் யாரோ உங்களை துாண்டி விட்டிருக்கனும். இது அவரோட ஒரே தங்கை.

ஊரா இருந்தா பரவாயில்லைம்மா., நியாயம் கேட்கலாம். ஆம்பிள்ளைக்கு ஒரு பயம் இருக்கும். முடிஞ்சா சொந்தமா தீர்க்கப்பாரும்மா.. ஷரியா கோர்ட்டுக்கு போனா உனக்கு தான் அவமானம். நீ இந்திய முஸ்லிம் பொண்ணு.. உன்னால நம்ம சமூகத்துக்கு அவமானம் வர்ற மாதிரி பண்ணிடாதேம்மா.. ஆம்பிளைங்கன்னா அப்படிதான். அந்த பொம்பளையை சும்மா வச்சிக்கிட்டு தானே இருக்கான். திரும்ப உன்கிட்டேயே வந்துடுவான். கவலைப்படாதே. அவளை என்ன மதம் மாத்தியா கட்டிக்கிட்டான்... விட்டுத் தள்ளுரியா என்றார் ஒரு பெரியவர்.

இன்னொரு பெரியவர் .. இந்த பாரும்மா.. சாப்பாட்டுல பல ருசி தேடுறோம்... அது போல தாம்மா ஆணுக்கும். இதையெல்லாம் பெரிசா எடுத்துக்காதேம்மா.. மனைவிக்குப் பயந்தவரு. அதனால மனைவியைக் கூட்டிக்கிட்டு வரலை.

உங்க வீட்டு பொண்ணா இருந்தா நீங்க என்ன செய்வீங்க?

வெட்டி போட்டுட்டுவான்னு சொல்லுவேன்.. உனக்கு இல்லாதவன் எவளுக்கும் இருக்கக் கூடாது.

(நல்ல வேளை அவருக்கு மகளே கிடையாது மகன்தான். அதனால தான்.)

உறவுக்கார பெண்களோ இன்னும் மோசம், ஏன் தங்கச்சி? ீங்க தான் கொஞ்சம் அட்ஜஸ்ட் பன ணிக்கிட்டு போங்களேனம்மா.. கண்ணை மூடிக்கிட்டு போங்கம்மா... நாங்களெல்ல ம் இல்லை.. உங்களுக்கும் வயசாகுது... ஒரு ஆம்பிள்ளை பிள்ளை வேறு.. புருஷனை கோர்ட்டுக்கு இழுக்குறது எல்லாம் நல்லாயில்லைமா. நம்ம பொம்பிளையி-லுவோ யாரும் இந்த மாதிரி அக்கிரமம் பண்ணினது இல்லே. முதல்ல கோர்ட் சம்மனே வாபஸ் பண்ணுங்க... இது அல்லாஹ்வுக்கு அடுக்காது.. உனக்கு நரகம்தான் கிடைக்கும்... பேசாம சமரசமா போயிடுங்க.. ஆம்பிளைகளுவோ நினைச்சா உங்களுக்கு அனாவசியமா கெட்ட பேரை கட்ட முடியும்.

அப்புறம் வாழுற வரைக்கும் வாழாவெட்டியா இருக்க வேண்டியதுதான், ஒரு கல்யாணம் காட்சிக்கு கூட நீங்க தலைகாட்ட முடியாம போகும்... அவஸ்தைப்பட வேண்டியிருக்கும். ஊர் ஜனங்களும் உங்களை அவலு மாதிரி அரைச்சு எடுத்துடுவாங்க.. வர்றவன் போறவன் எல்லாம் வெளியே போகலாமாடீன்னு கேட்க ஆரம்பிச்சுடுவான். நீங்க ஒண்ணும் பண்ண முடியாது. மவுத்தானா கூட யாரும் வரமாட்டாங்க. ஊருல உங்க குடும்ப மானமும் போயிடும்... கோர்ட் சம்மனை வாபஸ் பண்ணுங்க.

அம்மாடி! நீங்க ஊர்க்காரப்பிள்ளை. உங்களுக்குன்னு யாரும் இல்லை. ஷரியா கோர்ட்டுக்கு போனாலும் உங்களால என்ன செய்ய முடியும்? எல்லாரும் ஒன்னா சேர்ந்-துக்கிட்டு பொய்சாட்சி சொன்னா நீங்க என்ன செய்வீங்க? முத்தாகூட கிடைக்காம பண்ண முடியும். நீ சரியா வாழலை... உன் நடத்தை சரியில்லைன்னு அவங்க பத்து பேரு சொல்றது எடுபடுமா.. நீங்க ஒருத்தர் சொல்றது எடுபடுமா.. வீட்டை வித்தாலும் நீ எங்க போவீங்க? ஊருக்கா..? முத்தா என்னா? ஒன்னா வாழ்ந்த நாளை கணக்கெடுத்து ஒரு நாளைக்கு ஒரு வெள்ளியிலேருந்து அஞ்சு வெள்ளிவரை. கூட்டிகழிச்சு கொடுக்கச் சொல்லுவாங்க. **அதே கிடைக்காம பண்ணிடலாம்.**

**அந்தக் கடன் இருக்கு! இந்தக் கடன்** இருக்குன்னு கணக்கு காட்டி உங்களை ஏமாத்தவா முடியாது. அப்படியே பெரிய தொகையா கொடுன்னு சொன்னாலும்.. இந்தா கொடுக்கிறேன். அந்தா கொடுக்-கிறேன்னு இழுத்தடிச்சா.. வழக்கை தள்ளி போட்டு நீங்களும் நடையா நடந்து கடைசியில மூணாவது தலாக்கை சொல்லி சனியனே தொலைஞ்சு போன்னு துாக்கி எறிஞ்சா என்னம்மா செய்வீங்க? எங்க போயி நிற்பீங்க? உங்களுக்கு யாரு இருக்கா?

விசாரணையில அவங்க எல்லாத்-துக்கும் கணக்கு வழக்கு கேட்பாங்க. பம்பர்ஸ்லே இருந்து சின்ன செலவு. போக்குவரத்து செலவுன்னு துருவி துருவி கேட்பாங்க. நீங்க என்ன கணக்கா வைச்சிருக்கீங்க? முழி பிதுங்கி போய் நிற்க வேண்டியதுதான். என் பிள்ளை மாதிரி சொல்லுறேம்மா? பேமிலி கோர்ட்டுல பைல் பண்ணுன கம்பளைன்டை வாபஸ் பண்ணு.. முஸ்லிம் பொண்ணு கோர்ட்டுக்கு போறது ஹராம்.. ஹராம்... ஹராம்.. ஹராம்... ஹராம்!

(ஹராம் என்று கத்தியவாறு அரங்கினுள் கல்லெறிகிறாள். அலறல். வாந்தி எடுக்கிறாள்.)

நான் மீண்டும் கர்ப்பம் ஆனேன். அவரோட அண்ணனும் தங்கச்சியும் தேவி என்னை சந்திக்க விரும்புறதா சொன்னாங்க. தேவியோட வேலை இடத்துக்கு பக்கமா ஏற்பாடு செய்தாங்க. அவரோட அண்ணன் என் பையை செக் பண்ணினாரு. இல்லை கத்தி எதும் வச்சிருந்து தேவியை குத்திட்-டீங்கனா.. அதுதான்... சண்டை ஏதும் போடாதீங்க.. சமாதானமா பேசுங்க.. அவங்க ரொம்ப அமைதியானவங்க.. பயமுறுத்திடாதீங்க.

தேவியும் நானும் சந்திச்சோம். அவ தைரியமா இருந்தா. நான் தான் ரொம்ப உடைஞ்சு போய் இருந்தேன்.

நீங்க மாசமா இருக்கீங்கன்னு கேள்விப்பட்டேன்.

ஆமா அவரு குழந்தையை சுமக்கிறேன்.

சாம் எனக்கு தாலி கட்டிட்டாரு! தாலியைக் காட்டினாள். எனக்கு சாமை மறக்க முடியலை.. ஆனால் இப்ப நிலைமை இவ்வளவு மோசமா வந்தபிறகு.. எல்லாத்-தையும் விட்டுடலாம்னு முடிவுக்கு வந்துட்டேன்... ஆனா அவரு சரின்னா. அவரு மட்டும் என்னை போன்னு ஒரு வார்த்தை சொன்னா போயிடறேன். அவரை போன்னு சொல்ல வைக்கிறது உங்க சாமர்த்தியம். அது உங்க கையிலதான் இருக்கு... I Can't leave him by myself, co'z I love him so much.

(இரண்டையும் மாற்றி மாற்றி உச்சரிக்கிறாள் )

நான் அவரு குழந்தையை சுமக்கிறேன்

I love him so much.

அதுக்கு மேல் பேச ஒன்னும் இல்லை. இரண்டுபேருமே அமைதியா உட்கார்ந்திருந்தோம். மழை பெய்ய ஆரம்பிச்சது. நான் மழையில நனைஞ்சுக்கிட்டே நடந்தேன். வீட்டுக்கு வந்தேன். வீட்டுல அவரு இருந்தாரு. நாலு மாசம் வராதவரு.. திடீர்னு வந்திருந்தாரு..

ஹல்லோ டியர்.. எப்படி இருக்கே? ஐம் சாரி மா.. உன்னை ரொம்ப கொடுமைப்படுத்திட்டேன்.. கர்ப்பமா இருக்கியா? எப்படி? ஓ.. உன்னை அடிச்சிட்டு மிருகத்தனமா நடந்துகிட்டேன். அன்னைக்குத்தானே.. இங்க பாருடா.. ஒரு வெறியில உருவான குழந்தை நமக்கு வேண்டாம். அது ஹராம். சைத்தான் அழிச்சிடு. அது பொறந்தா நமக்கு ஆகாது அபார்ஷன் பண்ணிடு.

நாம் திரும்ப சேர்ந்து வாழலாம். தேவியை விட்டுடுறேன். தேவி எனக்கு வேண்டாம். நீயும் என் மகனும்தான் எனக்கு வேணுமுன்னு சொல்லிகிட்டே அணை-ச்சிக்கிட்டாரு.

நிஜமா? நிஜமா சொல்றீங்க? என்றேன்.

நம்பலைன்னா தேவி முன்னாலேயே தேவி மேலேயே சத்தியம் பண்றேன்னார்.

இந்த குழந்தை வேண்டாம். வேற பிள்ளை பெத்துக்குவோம். உனக்கு தான் இன்னும் வயசு இருக்கே.. தேவி மாதிரி நீ என்ன வயசானவளா.. இந்த பிள்ளை வேண்டாம்மா.. கலைச்சிடு... நான் உன் வயித்துல சயித்தான் உருவாகிற மாதிரி கனவு கண்டேன்... வேண்டாம்மா.. உன்னை நான் மகாராணிபோல வச்சுக்கிறேன். என்னை மன்னிச்சுடும்மா... உன்னை மாதிரி நல்ல பெண்டாட்டிக்கு துரோகம் செஞ்சிட்டேன்னு நினைக்கும்போது நெஞ்சு வலிக்குதும்மா... நெஞ்சு குத்துதுமா. அவர் கண்ணீர் விட்ட-ழுதார்.

மெயின்டன்ஸை வாபஸ் பண்றதும் பண்ணாததும் உன் விருப்பம். நான் கோர்ட் ஏறனும்னு நீ விரும்பினா.. ஓகே! அது உன் விருப்பம். ஆனா. அபார்ஷன் மட்டும் பண்ணிடு.. ஆபத்தில்லை. நானே டாக்டர்கிட்டே கூட்டிக்கிட்டு போறேன். சரியாம்மா? ஆசையில புத்தி கெட்டுப் போச்சுமா.. பட்டது போதும்மா.. இனி நிம்மதியா இருப்போம். ஒரு மாசம் இரண்டுபெரும் Europe tour போயிட்டு வருவோம்.

எனக்கு வழங்கப்பட்ட இறுதி வாய்ப்பை இழக்க நான் விரும்பலை. அபார்ஷனுக்கு ஒத்துக்கிட்டேன். டாக்டர், இது கொஞ்சம் சீரியஸ் நாலு மாசத்துக்கு மேலே ஆகுது. Partial - Birth abortion தான் பண்ண முடியும்னார்.

கையெழுத்து போட்டேன். இரண்டு நாளா வார்டுலேயே தங்க வச்சிருந்தாங்க. இன்னைக்கு டிஸ்சார்ஜ். வந்து கூட்டிக்கிட்டு போறேன்னு சொன்னாரு. அவரோட வருகைக்காக காத்திருக்கேன்.

(ரோஜாப்பூங்கொத்தைக் கட்டிய-ணைத்துக் கொள்கிறாள்.)

ஹலோ...

Excuse me Nisha, Could you please answer the phone. Your hubby is on the line.

ஹலோ...

எப்படியம்மா இருக்கே?

பரவாயில்லேங்க.. கொஞ்சம் வலி.. நீங்க வர்றீங்களா?

இல்லே.. நீயே டாக்ஸி பிடிச்சு

→ 19

# உட்செல்கை

திசேரா



பம்மாத்துக் காட்டிக்கொண்டே தலைவலிக்கு மண்டையைத் திறந்து காட்டி, என் முடியைப் பிய்த்தெறியும் பொம்பளயுடன் காலந்தள்ள நான் படும் அவஸ்தை. "சனியன் சனியன் இந்தச் சனியனைக் கட்டித்து வாழ்க்கையே சனியன் புடிச்சதாப் போயித்து". இந்த இடிக்குள்ள தம்பியயும் பாத்துக்கண்ணு அப்பா அனுப்பியிருக்காரு. அவனை வச்சித்து சாப்பாடு குடுக்க கத்தப்போறாள். எனக்கே சில நேரம் "ஏஞ்சம்பளம் இல்லாட்டி தெரியும் சோத்துக்கு, பிச்ச எடுக்கோணும்" எண்டு சொல்லுறவள். அவனுக்குச் சாப்பாடு குடுப்பாளா? நல்ல காலம், சிகரெட் குடிக்கிற, தண்ணியடிக்கிற பழக்கம் இல்ல. இல்லாட்டி இன்னேரம் நான் செத்துப் போயிருக்கணும். கடலைகளை வாய்க்குள் போட்டுக் கொண்டே நடக்கிறேன். கடக்கப்படுகின்ற வீதியோரப்புல்லு, ரோட்டிலிருந்து கழன்ற கல், குழிக்குப் போடப்பட்ட மண் - மழைக்கு சகதியானது. அந்தக் குழிக்குள் கிடக்கும் கலங்கல் தண்ணி, எல்லாமே என்னையோ மனது உட்பட்டதாகிய நிலையையோ தான் காட்டுகின்றது என்ற வெட்கத்தில் எதுவும் தெரியாதவன் போல நடந்து கொண்டேயிருக்கிறேன். கால்கள் கூட என்னுடன் வரமறுத்து இழுத்து நிறுத்திக் கொண்டிருக்க நானும் மல்லுக்கட்டி இழுத்துக் கொண்டு நடக்கிறேன்.

ஒரு பந்து தலையில் விழுந்து ரோட்டில் பட்டுத் தெறித்து கானுக்குள் விழுந்து, தப்பித்தோம் என ஒடிக்கொண்டிருந்தது.. எனக்கு பந்து பட்டுப் போனதும் சிரிப்பு. இந்தச் சிரிப்பு - ஞானப்பார்வையில் எதுவும் படும்போது இப்படி ஒரு பக்கச்சிரிப்புத் தான் வரும். பந்துக்கு தப்பியோடும் சந்தர்ப்பங்கள் கிடைக்கும் போதெல்லாம் முயற்சித்துக் கொண்டிருக்கிறது. ஆனாலும், திரும்பவும் தேடப்பட்டு அடிக்கப்படுகிறது. நானும்.. "ஐயெ, மே பத்தே போல ஆவாத" (அண்ணன் இந்தப் பக்கம் பந்து வந்ததா) சிந்திக்க முடியாமலும், விடப்படாமலும் கேட்கப்பட்ட கேள்விக்கு கடலையொன்றை வாய்க்குள் போட்டுக் கொண்டே பந்து சென்ற திசையில் கையை நீட்டிச் சுட்டுகின்றேன். அவன் அதைத் துரத்திப் பிடித்துக் கொண்டு சந்தோசத்தில் ஓட நான் கவனித்தது அவன் கையிலிருந்த பந்தை, இளம் பச்சை நிறமான பந்து எனைப் பார்த்துக் கொண்டு முறைத்தது. "காட்டிக் கொடுத்த நாயே" என்பது மாதிரிப்பட்டாலும், அது "நாய்" என்று கௌரவமாகத் திட்டியிருக்க வாய்ப்பில்லை. ஏனெனில், அதன் அசைவு வித்தியாசப்பட்டிருந்ததும், அந்தக் காட்டிக் கொடுத்தலுக்கு நான் மாட்டியிருக்கும் போது உதட்டசைவுகள் நாயைத் தாண்டி எங்கோ அழுக்குப்பட்ட வார்த்தைகளாகவே அசையும்.

வழமைக்கு மாறாக, வெள்ளனவே வீட்டுக்குப் போனால் அன்றைய மீதியும், நாளையும் சிலவேளைகளில் தொடரும் சில நாட்களும் இருட்டாவது நிச்சயம். அப்படியான சம்பவங்கள் தான் வீட்டில் நடக்கும். பாதத்திலிருந்து தலை வரையுள் ஏதாவதொன்று வலியெடுக்கும். இல்லாவிட்டால் மூக்குக்குள்ளால் சளி எட்டிப்பார்க்கும். இப்படி ஏதாவது நடப்பதற்கு அல்லது நடப்பதாகக் கூறுவதற்கு மழையும், பனியும் ஏதாவதொரு விதத்தில் துணை நிற்கும். இதுமாதிரி ஏதாவது நடப்பது எனக்கு வேலை வைப்பதற்காக, "புள்ளயிர ஊறப்போட்ட உடுப்பக் கழுவோணும்", "பகல்ல இருந்து நானும் சாப்பிடல்ல... இரவைக்கும் சமைக்கோணும்", "எனக்கு கதைக்கேலல்ல மூச்சடைக்கிற மாதிரி இருக்கு" என்று ஏதாவது குடைவு இருந்து கொண்டே இருக்கும். காலைல குளிர்ன்னா இதே மாதிரித்தான் கால் வெறச்சிருக்கு, கை வெறச்சிருக்கு. நெலங்குளிருது. இறங்கேலாது. இப்படியே ஏதாவது வரும். ஏம்பூட்டு வாயும் சும்மா இருக்கேலாம ஏதாவது சொல்லிச்சின்னா. "பண" ஓதுற மாதிரித் தொடங்கினா நான் அறப்படிச்சதில தொடங்கி "எங்கக்கால்லாம் நல்லாத்தான் இருக்காங்க நா மட்டுந்தான் இப்பிடி இருக்கன். எங்க குடும்பத்திலேயே சீரழிஞ்சி போனது நா தான். மத்த எல்லாரும் எப்படி இருக்காங்க தெரியுமா....?

ஒவ்வொரு ஆம்பிளயும் எப்படி எப்படி பொம்பளய வச்சித்து இருக்கான்னு தெரியுமா?" உலகத்திலேயே எல்லாரும் நல்லவன தான். நான் மட்டுந்தான் பொல்லாதவன். அதுவும் யாராச்சும் சின்னப்புள்ளய கூட்டித்து வந்துதான் அவங்க குடும்பப் பட்டியல் பற்றியும், பொருளாதார நடவடிக்கைகளும், புள்ளிவிபரப்பொய்யாகக் கொடுக்கப்பட்டு, என்னைப் பத்தி சொல்லுறதுக்கு ஒண்ணுமேயில்ல. பிச்சைக்காரன் "கீழ்சாதிநாய்"ன்னு சொல்லுவாள். இப்படியெல்லாம் வாங்கிக் கட்டுறத பார்த்து ரசிக்கிறதுக்குன்னே ஒரு கூட்டம் அலையிது. என்ன எங்க கண்டாலும் போய்ச் சொல்லிடும். பசிக்கு ஒரு டீ குடிக்க ஒட்டலுக்குப் போனாலும் "நா போடுற டீ எல்லாத்துக்கும் நல்லாயிருக்கும். இந்த சனியனுக்கு ஒண்ணும் புடிக்காது". அங்க டீ குடிச்சது, எனக்கு பசி வந்ததெல்லாம் ஒண்ணுமில்ல. அவள யாராச்சும் ஏதாவது சொல்லிறப் போறாங்கன்னு தான் எண்ணமெல்லாம். நானும் எல்லாத்துரட்டும் காலப்புடிச்சி நக்கித்தும், வாலப்புடிச்சி பின்னுக்குத் திரிஞ்சிருந்தா பெரிய இடத்தில இருந்திருக்கலாம் தான். இந்தக் காக்கா புடிக்கிறத விட்டுத்து சுயமா மனிசனா வாழ்ந்தது தான் ஒத்தருக்கும் புடிக்கல்ல.

"ஐயே" (அண்ணன்) இதற்கு முன்னரும் இவன்தான் வந்து பந்தைக் கேட்டவன். சிரிக்கிறான். சைகையால் உருண்டையாகக் காட்டி பந்தைக் கேட்கிறான். நானும் தெரியாது என்பதாகக் கையை விரிக்க, ஒரு மாதிரியாகப் பார்த்துவிட்டு கானுக்குள் பார்க்கிறான். வலது பக்கமாகத் திரும்பி எச்சிலைத் துப்பிவிட்டு கானைத் தாண்டி புற்களை மிதித்து மிதித்துப் பார்க்கிறான். "தியனவாத"(இருக்குதா) கேட்டுக் கொண்டே மிதிக்க இன்னொருத்தனும் வந்து சேருகிறான். அப்போது தான் பார்க்கிறேன். முன்னமே நின்ற இடத்தில் இன்னமும் நின்று கொண்டிருந்தது தெரிந்தது. அதனால் தான் அவன் என்னை ஒரு மாதிரியாகப் பார்த்திருக்கிறான். அவர்கள் இருவரும் குனிவதும் நிமிர்வதுமாக புல்லுகளை மிதித்து தேடிக்கொண்டிருக்கின்றார்கள். பாவம் கஷ்டப்பட்டு தேடக்குள்ள நாமும் கொஞ்சம் உதவி செய்யலாம்னு நெனச்சி கானைத் தாண்டி புல்லுகளை மிதிக்கிறேன். இருவரும் என்னைப் பார்த்துச் சிரித்துவிட்டு தேடுகிறானுகள். அந்த கசப்புத் தழைக்குள்ள இருக்குமோன்னு கையால் இருபகுதியாக விரிக்கிறேன். இல்லை, கண்ணை இன்னும் ஆழமாகச் செலுத்தத் தெரிந்தது. இளம் பச்சை நிறத்தில் உருண்டையாக இருக்க, கையை நீட்ட நீட்ட உள்ளே போய்க்கொண்டே இருந்தது. சாதாரணத்தை விட கை கூடுதலாகவே வளர்ந்து அடியில் போய் பிடித்துவிட்டது. அதை எடுத்து நீட்ட முன்னதாக வந்தவன் வாங்கிச் சிரித்துவிட்டு மற்றவனின் தோளில் தட்டிக் கூப்பிட்டு பறந்து போனார்கள்.

நேற்று மழை பெய்திருந்ததால் செருப்புக்கும் காலுக்குமிடையில் தண்ணி இருந்து செருப்பை ஒரு திசையாகவும், எனையொரு திசையாகவும் வழுக்கிவிட்டது. "இப்படி எத்தனை வழுக்கல்களிலிருந்து நான் தப்பியிருக்கன்" எனக்குள் நானே சொல்லிக்கொண்டு, கானைத் தாண்டி ரோட்டுக்கு வந்து காலைத் தட்டும் போதுதான் வலது காலில் வளைந்து பின்ப்பகுதியை தூக்கிப்பக்கத்தில் வைத்து, பின்னர் முன் பகுதியை எட்டவைத்த வண்ணம் அட்டை ஏறிக்கொண்டிருந்தது. "ஆட்டக்கடிச்சி, மாட்டக்கடிச்சி, கடைசியில மனிசனக் கடிச்சமாதிரி நம்மளக் கடிக்க வந்துத்தாரு" பெருவிரலையும், சுட்டு விரலையும் இடுக்கியாகப் பிடித்து பிய்த்து வீசிவிட்டு, காற்சட்டைப் பைக்குள் கிடக்கும் கடலைகளில் நான்கைந்தை வாய்க்குள் போட்டு கடித்து அரைக்கிறேன்.

இந்தப் பொழுது வேறு போய்த் தொலையுதில்ல. இருட்டமுதல் வீட்டுக்குப் போனா, நான் இருட்டாயிருவன். முடிஞ்ச வரைக்கும் வாயத்தொறக்காம இருக்கணும். வாயத் தொறந்தம்னா ஒவ்வொரு வார்த்தையும் குத்தமாப் பட்டது. அண்ணைக்கு பாலாவுக்கு என்ன சொன்ன.

"ஏதாச்சும் கேட்டா சுருக்கமா பதிலச் சொல்லித்து பொறகு ஓம்பூட்டு வெளக்கத்தக்கத, இது பொதுவானது இந்தக் கேள்விக்கு மட்டுமில்ல எல்லாக் கேள்விக்கும் பொருந்தும்" எனப் பொதுப்படையாகச் சொன்னேன். ஆனா அவருக்கு நெனப்பு ஏதோ அவர வெட்டிக் கதைக்கிறம்ன்னு - அவர வெட்டுறது பெரிய வேலல்ல எல்லாக் கதையையும் பொய்யா மாத்திறதுக்கு எங்களுக்கு தெரியும்னு அவனுக்குத் தெரிஞ்சிருந்தும் அவன் அப்படி நெனச்சித்து ரெண்டு நாளாவரல்ல. இது மாதிரியே நல்லதுக்கு சொன்னா எல்லாத்துக்கும் பொய்யாப்படுது. வீட்டிலயும் ஏதாவது சொல்லித்தம்னா "பேப்பரையும் புத்தகத்தையும் வாங்கி அடுக்கி வச்சித்து படிச்சா சரி, இவனுகள்ளாம் படிக்காட்டி உலகம் ரெண்டா ஒடஞ்சிரப் போகுதா? படிக்கானுகளாம் படிப்பு" எப்ப கையில புத்தகம் படுதோ அப்பல்லாம் இதுதான், எல்லா வேலையும் முடிஞ்சித்து பேப்பர் பாத்தாக் கூட இந்தக் கத தான் ஏன் தான் இப்படி ஏசித்திருப்பாங்க தெரியல்ல. சின்னதில அம்மா "அப்பாட குணத்தில தான் இருக்கிற, மண்டைக்குள்ள களிமண்தான் இருக்கு, செத்துத்தொலைய மாட்டேங்குறியே"ன்னு ஏசுவாங்க. அப்பா "ஒனக்கு அம்மா புத்தி, ஏண்டா வந்து பொறந்தீங்க" ஏச்சு வாங்கிக் கட்டியே இருந்து, கலியாணங்கட்டியாவது நிம்மதியா இருப்பம்ன்னா, "ஆ" நாக்கைத் தடவிப் பார்க்கிறேன் ஏதோ கோபத்தில் நாக்கைக் கடித்திருக்கிறேன்.

டக்கு வருது போல அதுலதான் இந்தச்சத்தம் வரும். கொழுந்தேத்தித்தான் வருது. அப்ப நேரம் அஞ்சி அஞ்சர இருக்கும். கானுக்கு ஓரமாக ஒதுங்கி நிற்க என் தலைக்கு மேலால் ஒரு புகை மூட்டத்தையும் காதுகளுக்குள் அதிர்வையும் உண்டு பண்ணிப்போனது. நேரமும் போகல ரெண்டு மூணுதரம் பந்தப் பொறுக்கித்துப் போனானுகள். என்ன விளையாடுகிறானுகள்னு பார்க்க நினைத்து முதலாவது படியில் காலை வைக்க மேலிருந்து ஓடிவந்து முதலாவது படியில் விழாமல் பந்தைத் தடுத்து ஒருத்தன் எடுத்துப் போனான்.

முன்னம் வந்து பந்தைக் கேட்டவன் தான் அந்தப்பக்கம் மட்டையோட நிற்கிறான். ரெண்டாவது தரம் பந்தைத் தேடி வரக்குள்ள வந்த மத்தவன் பந்துவீசுற பக்கம் பின்னுக்கு கையக் கட்டித்து நிக்கிறான். பந்து பொறுக்க வந்தவனில்லாம மத்தவன் அடிக்கிறான். பந்து மேலே தூக்கி உயரமாப்போய்ப் பிடிக்க நின்றவன் தலைக்கு மேலால் போய்விழ அவன் அந்தப் பந்தை எடுத்து ரெண்டு கையையும் நேரேமேலே தூக்கிக் காட்ட, பந்து பொறுக்க வந்த பந்து வீசுறதுக்குப் பக்கத்தில நிண்ட பச்ச சேட்டுக்காரனும் ரெண்டு கையையும் மேலே தூக்குகிறான். ரெண்டு கையையும் முன்னுக்கு நீட்டி குறுக்காக பிடித்துக் காட்டுகிறான். மட்டையோட நிண்டவனுகள் ஒருவர்ர மட்டய மத்தவர்ர மட்டையோட தட்டித்து பக்கத்த மாறுறாங்க. பந்து வீசுறதுக்கு வேற ஒருத்தன வந்திருக்கான். முதலாவது தரம் பந்தத் தேடிவந்த வெள்ள சேட்டுப் போட்டவன் தான் அடிக்கிறதுக்கு ரெடியா, மட்டய நிலத்தில அடிக்கிறதும், பந்து வீசப்போறவனை பார்க்கிறதுமா நிக்கிறான். பந்து வீசுறான். முதல்ல போட்டவன் மாதிரி ஓடிவராம கிட்டத்தில நின்னு மெல்லத்தான் போடுறான். வெள்ள சேட்டுக்காரன் அங்கனயே தட்டி விடுறான். இவனுக்கு அடிக்கத் தெரியாது. நானாயிருந்தா விசுக்கி அடிச்சிருப்பன். இவனுக்கு முதல்ல அடிச்சவனுக்கு மத்தவன் பந்து வீசக்குள்ள, தூரத்தில இருந்து ஓடி வந்து வேகமாய் போட்டான். அதையே அவன், மேலால தூக்கி மரத்துக் கிட்டத்தில விழுற மாதிரி அடிச்சான். இவனுக்கு அடிக்கத் தெரியாது போல, அந்தா இப்ப கூட மெல்லமாத் தட்டித்து ஓடுறான். முதல்ல அடிச்சவன் தான் இப்ப அடிக்கிற பக்கம் ஓடிப்போய் நிக்கிறான். இவன் நல்லா அடிப்பான். இங்கிட்டுத்தான் பாத்துப் பாத்து நிக்கிறான். நடந்து வந்து ஒரு மாதிரி கையத் திருப்பிப் போடுறான். அடிக்கிறவன்ட மட்டயில படாம பின்னிக்கிருந்த கம்புல தான் படுது. மூணுல ஒண்ணு கீழ விழுந்துத்துது. எல்லாரும் கத்துறானுகள். ஓடி வந்து பந்து போட்டவனுக்கு கையக் குடுக்கிறானுகள், கட்டிப் புடிக்கிறானுகள். அடிச்சவன் தலையக் கீழ தொங்கப்போட்டுத்து, அங்கிட்டு கொஞ்சப் பேர் உட்கார்ந்து இருக்கிற இடத்தப் பார்த்து நடக்கிறான். சிவப்பு சேட்டுப் போட்ட ஒருத்தன் இன்னொரு மட்டயோட வாறான். இவன்தான் அடிக்கப் போறான் போல. அடிக்கிற பக்கமாப் போய் நிக்கிறான். "சீ" கொசு கடிக்குது. இருட்டின மாதிரி இருக்கு. உருளோசு கட்டி ஒருத்தரும் இல்லயா? சுத்திப் பார்க்கிறேன். அந்தத் திட்டில குந்தியிருக்கிறவரு கட்டியிருக்காரு. நேரம் என்னன்னு கேட்டா நல்லம். லயத்து முன்னுக்கெல்லாம் காலையில பாத்தா இப்படித்தான் குந்தி இருப்பாங்க, அதப்பாக்கக்குள்ள மலங்கழிக்கிற மாதிரித்தான் இருக்கும்.

"அண்ணன் நேரம் என்ன?"

"ஆறர" சாதாரணமாச் சொல்லித்து விளையாட்டத்தான் பாக்குறாரு. சிவப்பு சேட்டுப்போட்டவன் தான் அடிச்சான். நான் இருந்த இடத்துக்குப் பக்கத்தில இருந்து தான் பந்து எடுத்துத்து வாறான். நான் நேரங்கேட்டவரும் போறதுக்கு எழும்புறாரு. கைல பேப்பர் சுருட்டி இருக்குது. இன்றையப் பேப்பரா இருக்குமோ?" எப்ப எடுத்தாலும் பேப்பர்தான். இதயே படிச்சிப் படிச்சி கிடக்கவேண்டியதுதான். பத்து மணியாச்சி கரன்ட்பில் ஏறப்போகுது" கனவுல வந்து கூட ஏசுறாள். சிவப்பு சேட் போட்டவன் தான் அடிக்கிறான். நேரமாச்சி லேட்டாகிப் போனாலும் ஏச்சு வாங்கோணும். போவம் வெளியில இருந்து எல்லாரும் ஓடி வந்து சிவப்பு சேட் காரன தூக்கித்துப் போறானுகள். இந்தப் பக்கம் பந்து பொறுக்க வந்த வெள்ள சேட்டுக்காரன காணல. ஒரே சத்தம். வெத்தித் தானுகளாக்கும். இதப்பாத்துத்து இருந்ததில நேரம் போனதே தெரியல. ஒப்பிசிலயும் "கிரிக்கட் மெச்" இருக்குது. அதுக்கும், இதுக்கும்ன்னு வாய்க்குள்ள நுழையாத பேரெல்லாஞ்சொல்லி அம்பது, நூறுன்னுத் திருப்பானுகள். வேல எல்லாம் மறந்து போயிருப்பானுகள். எனக்கும் அப்பிடித் தான் மனசுக்குள் யோசித்திருந்த எல்லாமே மறந்து போச்சி, எல்லாத்தையும் மறக்கிதுக்கு நல்ல மருந்து. டீவிலயும் அடிக்கடி அதத்தானே காட்டுறானுகள். வீட்டிலயும் ஒரு டீவி வாங்கி வச்சி இதப்பாக்குறதுக்கு பழக்கி விட்டா சாப்பாடும் தேவல்ல. செலவும் மிச்சம். அதோட பேப்பரும் பாக்கலாம். புத்தகமும் வாசிக்கலாம். இண்ணைக்குப் போய்ச் சொல்லலாம். "டீவி ஒண்ணு வாங்கித்தாரன்"னு கிரிக்கட்ட பாத்துத்து இருக்கட்டும். நான் நிம்மதியா இருப்பன். கிரிக்கட்ட வச்சி என்னென்னமோ செய்யலாம் போல. ஒருவரையும் யோசிக்கவிடாம நினைச்சத சாதிக்கலாம். இன்றிலிருந்து மெச் நடக்கும் நாட்களில் பொருட்களின் விலை அதிகரிக்கும். எனக்குள் சிரிப்பு... சரியான சந்தோசம்.


"சே, இந்த ஊர்க்காரர்களுக்கு கொஞ்சம் கூட மூளையில்லை. ஒரு நிழல் மரம் கூட இங்கிருக்கா? சின்னச் சின்ன பத்தையைத் தவிர வேறு என்னதான் இங்கிருக்கு? என்ன வெயிலாக் கிடக்கு அப்பா... சுள்ளென சுட்டெரிக்குதே, அவன் சொல்லாவிட்டால் வந்திருக்கத் தேவை-யில்லை. என் வயதையொத்த ஒருவரையும் காணோமே. முத்தா, சுது... அந்தக் குறுப்தான் மண்ணையள்ளிக் கொட்டுகிறார்கள். கொஞ்சப்பட்டாளம் கடலில் குளித்து கூத்தடிக்கிறார்கள். நானும் இங்கு நின்டு என்னத்தப்புடுங்கிற. மெல்ல, மெல்ல நகர்கிறேன்.

விசர்கொண்டு காற்று என்னில்மோதி அறைந்து போகிறது. ஆணலையும், பெண்ணலையும் வீறுகொண்டு மண்கூட வெளியில விற்க ஏலாது. 'டீசல்' அடிக்கிறதோ, மண்ணாங்கட்டி அடிக்கிறதோ எல்லாம் அந்தச் 'செற்' காசு போட்டுச் செய்யும். நேரத்துக்கு நேரம் சாப்பாடு மதியம் 12.30 மணிவரை பாண், ரோல், வணிஸ், தேத்தண்ணி, ரிங்ஸ். மத்தியானம் சோறு. பின்னேரம் பாயாசம், கள்ளத்தீன் என வயிறு நிரம்பும். இப்ப நினைத்தாலும் உமிழ் நீர் சுரக்கிறது.

குலசேகர அண்ணன் என்றால் எல்லாருக்கும் பயம்தான். சும்மா வேலை செய்யாமல் நிற்கவிடமாட்டார். 'மருமகன் இஞ்சவாங்க, இதத்தூக்குங்க" அந்த மனிசன் பக்கத்தில் நின்றால் கண்ணுக்குள்ள மண்ணைத் தூவிவிட்டு தாழம் பத்தைக்குள்ள "அம்பியுஸ்" தான். விடிஞ்சாத்தான் தெரியும் மேல் வருத்தம். அம்மா.. சுள்ளென்று குத்தி முதுகெலும்பு போப்பறன்"

என்னருகில் நின்ற நிறைமாதக் கர்ப்பிணியாய் வந்த "மெசினில்" தாவி ஏறினேன். குலுங்கிக் குலுங்கி கோவிலடியை வந்தடைந்தது. எனக்கு அவ்விடம் நிற்பது உசிதமாகத் தெரியவில்லை. ஏதாவது கதைத்து ஏன் சண்டையில் இறங்குவான்?

சாய்மாணக் கட்டிலில் சாய்ந்த பின்தான் நெருப்பில் ஊற்றிய தண்ணீராய் சற்றுக் கோபம் தணிந்திருந்தது. எனக்கு என்ன நடந்தது? இன்று நடந்ததெல்லாம் கனவா? உண்மையா? மற்றவர்களுக்கு ஏற்படாத உணர்வு எனக்கு மட்டும் ஏன் ஏற்படணும்? அவர்களோடு சேர்ந்து செல்வா நகர்வரை தோண்டிவிட்டாலென்ன? மீண்டும் ஏதோ கிறுகலாகத்தான் சிந்திக்கிறேன்.



கடற்கரையை மோதியுடைத்தன. இந்தா்தான் வந்துவிடுமோ என்ற பயம் வேறு எனை உலுக்கியது. அதைப்பார்க்கப் பார்க்க விசராய் என்னுள் ஏதோ எழுகிறது. மூளை-யில்லையா? இந்த ஊரவர்கள் என்னபாடு படுத்தியிருக்கிறார்கள். அதைப் பார்க்கப் பார்க்க வயிறு வாய் எல்லாம் பத்தி-யெரிந்தது. இன்னும் ஐந்து வருசத்தால இந்த ஊரைக் கடல் சாப்பிட்டு விடுமா? இல்ல ஒரு பத்து வருசத்துக்குப் பின்னாலையா? பெரும் வாயை ஆவென்று இந்து சமுத்திரம் எனைப் பயமுறுத்தியது. தோண்டப்பட்ட அந்தப் பெருமை ஓடைக்குள் நின்று பார்க்கிறேன். என்னைப்போல் மூன்று அல்லது நாலு பேரைத் தாக்கும் பெரும் ஓடை இதுபோல் வலதுபக்கமும், இடதுபக்கமும் தோண்டி எடுக்கப்பட்டிருக்கிறது.

பெரும் துயர் என்னில் படர, தாழைமர ஓரத்தில் கையைக் குத்திக்கொண்டு கடலை விறைத்துப் பார்க்கிறேன். என்னில் பழைய க லங்களும், முகங்களும் கொத்துக் கொத்தாய் வந்து விழுகின்றன.

கண்ணகி அம்மன் கோவிலுக்கு மண்ணடிக்கத்தான் முதன்முதலில் வீட்டுக்குத் தெரியாமல் கடற்கரைக்குப் போயிருக்கிறேன். அப்ப பதின்மூன்று பதினைந்து வயதிருக்கும். இப்ப இருப்பது போலில்லை. கடற்கரை, கடற்கரையை அண்டிய பகுதிகளெல்லாம் நிறைந்த தென்னை மரங்களும், தாழைமரங்களும. தாகமெடுத்தால் என்ன குறை? இளநீர் வயிற்றை நிரப்பும். இப்ப எங்க? ஒரு தென்னை மரத்தைக் கூட மருந்துக்கும் காணோமே. அந்த நாளில் நான் பார்த்த கடற்கரை எவ்வளவு தூரத்தில் இருந்தது. இப்பயிருக்கிற மடுவும், பெரிய ஓடை போன்ற பள்ளங்கூடயில்லை. இந்தக் கிணறு எப்படியிருந்தது? இன்று ஒரு பக்கம் கெழிந்து இந்தா, அந்தா விழப் போவது மாதிரியல்லோ இருக்கு.

ஆ! அந்தக்காலம் தான் ஒரு பொன்னான காலம். காலமை எட்டுமணிக்குப் பின் மண் ஏத்தத் தொடங்கினால் பொழுது பட்டு நிலவு கிளம்பிய பின்னும் மண் ஏத்துதல் தொடரும். (அப்ப, பத்துப்பதினைந்து மெசின் வேலை செய்யும்) வெள்ள மாமா, வண்டா, தம்பான் ராசா அண்ணன், குல்சேகர அண்ணன், சின்னநாதன்... பெரிய ஆக்கள் அப்ப. நல்ல சிஸ்ரமாக எல்லா வேலையும் செய்வார்கள் ஒரு துளி விர்ரென நோகும்.

அதெல்லாம் ஒரு காலம் தான். இப்ப எங்க? பட்டாளக்கிளையள் கொஞ்சப் பேர் மண் ஏத்த மத்தக் கிளையள் கடலுக்குள்ள கிடக்கு. சாப்பாடு என்றால், ஈயான் கிளைகள் போல மொய்க்குதுகள். எனக்கு அப்ப சின்ன வயதால மண்ணரிப்புப் பற்றி ஒரு மண்ணும் தெரியாது. இல்லாட்டி அப்பவே. பின்னின்றுயிருப்பேன்.

இன்னும் விட்டு வைத்தால் நம் சந்ததிகள் இந்த ஊரில் வாழமுடியாது. இந்த நேரத்திற்குள் எத்தனை லோட்டுத்தான் போயிற்றோ? 'டீசல்'. காசிக்கென்று எத்தனை லோட்டுத்தான் காத்-தான்குடியிலும், ஊர்க்குள்ளும் வில்பட்டி-ருக்குமோ? ம்... பெரும் சிரிப்பாகயிருக்கு. கோவில் தொண்டுக்கென 'மெசின்'கொடுத்த பின் கடைசியில் அவர்களுக்கும் ஒரு லோட்டு. நல்லதொண்டு ஒரு கல்லில் இரண்டு மாங்கா என்பது இதுதானா?

எப்படிப் போனாலும் போகட்டுமென சும்மா கிறுக்குத்தனமாய் யோசிக்க முடியாது. இந்த அதிகாரிகளும் தான் என்ன செய்வார்கள். ஒவ்வொரு வருசமும் இருபத்தைந்து. முப்பது கோவிலுக்கு மண்ணடிக்கிறதெண்டா சும்மா வேலையா?

எனக்குள் குமுறிக் குமுறி எழுந்தது அடக்க முடியாத கோபம். தலையைத் திருகணும் போலிருந்தது. அதிகாரிகளுக்கு தெரியுமோ? தெரியலையோ? கோவிலுக்கு மண்ணடிக்கிற சாட்டில் காத்தான்குடியிலும், ஊரினுள்ளும் மண்விற்கின்ற சமாச்சாரம்.

"ஊரை விழுங்கப் போகிறேன்" மீண்டும் இராட்சத அலையொன்று ஞாபகம் மூட்டியது. இன்னும் இருக்க மனம் இடம் கொடுக்கவில்லை. பின் பக்கம் ஓட்டி. மண்ணைத் தட்டிவிட்டு தாழம்-பத்தைக்கருகில் கிடந்த "செருப்பை" மாட்டிக் கொண்டு ரோட்டை நோக்கி நகர்ந்து வருகிறேன். திவா என்னை நோக்கி ஓடி வருகிறான். அவனுக்கு எங்க, இதைப் பற்றி விளங்கப்போகுது. கடல் வந்தாத்தான் என்ன? காவிரி வந்தால் தான் என்ன? முஸ்பாத்தி இருந்தால் போதும். ஊரைப் பற்றி யோசித்திருப்பானா? கோவில் சடங்குத்தான் முக்கியம். அப்பதானே "காய்" பார்க்கலாம்.

"என்ன மச்சான், மண்ணடிக்க வரலையா?"

"இல்லடா, தலைக்கால இடிக்குது வீட்ட

அம்மா சூடான தேனீர் ஆவி பறக்க என்னருகில் வந்தா? "என்ன மகன் கோவிலுக்கு மண் அடிச்சி முடிஞ்சா"?

"ஓம் அடிக்கிறாங்க" அம்மாக்கும் எனக்கும் கடவுள் மண்ணாங்கட்டியெண்டா முரண்பாடுதான். வாறபோற கிழமைவிரதம் பிடிப்பதும், கோவில் குளம் என்று திரிவதும், "கல்" உனக்கு என்ன செய்யப்போகிறது. சும்மா உனக்கு வேற-வேலையில்லையா? அம்மாவுக்கும் எனக்கும் அடிக்கடி எழும் போர்க்களம் இப்பயில்லை. "ஜயசிக்குறு" தொடங்கிய பின் நான் தான் பின்வாங்கிறன். (இப்ப கொஞ்சம் மெலிந்திட்டன். வாரதும் கந்தசஷ்டி எப்படித்தான் கழிக்கிறப்போறனோ?)

இரவு பத்து மணியைத் தாண்டிற்று. கடல் இரைச்சலை விட வேறு ஒரு சத்தமும் இல்லை. யார்தான் இந்த நேரத்தில முழிச்சிருப்பா? ஆமிக்காரன் மட்டும் திரிவான். நிலா முற்றத்தில் அமர்ந்து நாலையும், பத்தையும் கதைக்க எங்க சுதந்திரம் இருக்கு. அப்படியிருந்தால் புலிக்கு 'நீயூஸ்' கொடுக்கவா இருக்கிறீங்க? என்ற உறுட்டலுக்கு ஏன் வழி வைப்பான் என்று சனங்கள் நேரத்தோட உறங்கி விடுங்கள். நாங்கள் மட்டும் இப்படி புதிசா சுதந்திரம் கிடைத்த மாதிரி ஏனோ தெரிய இன்று?

"கடலில் பெரும் குழப்பம் போல, கடல் இரைச்சல் பெரிதாய்க் கேட்குதே!" அப்பா ஏதோ முணுமுணுத்தார்.

"குழப்பமுமில்லை ஒன்றுமில்லை. கடல் செல்வா நகருக்கு வந்திட்டுப்போல, என்ன ஒரு நாளைக்கு வரத்தானே போகுது?"

நான் மனதுக்குள்ள சொன்னதை பக்கிள் ஒன்று ஆமோதித்துக கத்தியது. மேலும் இரண்டு பங்கிள் கூட்டம் சேர்ந்து பெரும் எரிச்சலாய்ப் போயிற்று.

அம்மா சொன்னா, "யாரோ சாகப்போறா...." எனக்கு சுள்ளெனப்பட்டது. ஊரே அழியப் போகுதோ? கல்லெடுத்து விட்டேன். எறி. ஆக்... ஆக் எனக் கத்திப் பறந்திற்று.

கடல் அலை மட்டும் இரைந்தது. கிட்ட-வருவதுபோல் கேட்டுக்கொண்டே இருக்-கின்றது. வரும் ஒரு நாளை, நானும் இந்த ஊரும் இராட்சத அலைக்குப் பலியாகித்தான் போவோம் பார்!



## 'ஓவல்' என்பது.....!

'ஓவல்' என்பது
முட்டை போன்றது!

ஒரு புறம் ஒடுங்கியும்
மறுபுறம் சற்றே
அகன்றதுமான
அஃதோர் வடிவம் -
அல்லது அமைப்பு!

இந்த வடிவில்
அமெரிக்காவில்
அறை ஒன்றுள்ளது....

வெள்ளை மாளிகைக்
குள்ளே இருக்கும்
இந்த அறைக்குள்
அமர்ந்து இருப்பவர்
அமெரிக்காவின்
அரசியல் தலைவர்!

இந்த அறையின்
மகிமை பெரிது!
மாட்சிமை பெரிது!!

அமெரிக்காவின்
அரும் பெரும் தலைவர்
அந்தப் பெரிய அமெரிக்காவை
அதற்குள்ளிருந்தே
ஆட்சி புரிவார்...

அந்த அறைக்குள்
அமர்ந்த அவரால்
ஆனதையெல்லாம்
செய்து பார்க்கலாம்!

அப்பாவிகளை
அரட்டிப்பார்க்கவும்
அசையாதவரை
அடித்துப்பார்க்கவும்
அகில உலகை
ஆட்டிப் படைக்கவும்
உட்கார்ந்திருந்தே
உத்தரவிடலாம்!

மற்றப்படிக்கு -
மோனிக்காக்களை
முகர்ந்து பார்க்கலாம்!

## சும்மா இருப்பது சுகமல்ல

சுட்டுப் பொசுக்கியும்
வெட்டிக் குதறியும்
வெறியாட்டமாடிப் போனபிறகு,

கண்ணில் இரத்தம் விட்டு
நெஞ்சில்
வயிற்றிலடித்துக் கொண்டு
அள்ளிப் புதைக்கிறாய்....

வெகுண்டால்
வேதனை என்பதால்
அவமானப்படுத்தப்பட்டாலும்
அமைதி காக்கிறாய்....

உனக்கு மட்டும்
உத்தரவாதமா இருக்கிறது...!

உனக்காக
கண்ணில் இரத்தம் விடப்படும் போதும்
அதுவே
உன் நிலை என்பதால்

ஏதாகினுஞ்செய்
இப்போது!

விரைவில் வெளிவரவிருக்கும் அஷ்ரப் சிஹாப்தீனின்
"காணாமல் போனவர்கள்" என்ற கவிதைத் தொகுப்பிலிருந்து.....

# எம்.சி : ஒரு சமூக விடுதலைப் போராளி !



வடக்குக் கிழக்கில் நிலவிய தீண்டாமைக்கெதிரான போராட்டங்களைத் தலைமை தாங்கி நடாத்தியவர்களுள் முக்கியமான ஒருவரான எம்.சி.சுப்பிரமணியம் மறைந்து பத்தாண்டுகள் ஓடி விட்டன. இன்று தமிழர்கள் என்பதற்காக எவ்வாறு ஒடுக்கு முறைக்குள்ளாகிறார்களோ அதேபோல் சாதியின் பெயரால் ஒடுக்கு முறைகள் நிலவிய காலகட்டத்தில் அதற்கெதிரான போராட்டத்தை நடாத்தியவர்களுள் ஒருவர் எம்.சி.சுப்பிரமணியம் அவர்கள். அவர் மறைந்து பத்தாவது ஆண்டில் அவரை நினைவு கூருமுகமாக கனடாவிலுள்ள விசாலாட்சி பதிப்பகம் எம்.சி. பற்றிய 15 கட்டுரைகளைத் தொகுத்து எம். சி. ஒரு சமூக விடுதலைப் போராளி என்ற ஒரு நூலை வெளியிட்டுள்ளது.

இந்நூல் எம்.சியின் புகழ்பாடும் தனிமனித காவியமல்ல. இலங்கைத் தமிழர்களின் ஒரு காலகட்ட கறை படிந்த வரலாறு. சாதியின் பெயரால் தமிழர்களைத் தமிழர்களே கூறு போட்டு அவர்களில் ஒரு சாராரை அடக்கி ஒடுக்கி மனித உரிமைகளை மறுத்து வாழ்ந்த வரலாறும் அதற்கு எதிராக சுதந்திரத்திற்கும் சமத்துவத்திற்கும் சமநீதிக்குமான போராட்ட வரலாறும் ஆகும் என நூலின் முகப்புரையில் தெரிவிக்கப்பட்டிருப்பது ஒன்றும் அதீதமானது அல்ல.

அத்தொகுதியிலிருந்து ஒரு கட்டுரையை இங்கு தருகின்றோம்.

ஆ—ர்

எம். சி. என்று நண்பர்களாலும், எம். சி. ஐயா எனப் பலராலும் அழைக்கப்படும் எம். சி. சுப்பிரமணியம் ஒரு வரலாற்று நாயகன். தொண்ணூறு வய்தைத் தாண்டி நினைவுகள் மங்கிக் கொண்டு போகும் இந்த நிலையில் அந்த வரலாற்றின் ஆரம்பம், அதில் எம். சி.யின் ஈடுபாடு, எம். சி.க்கு வழிகாட்டியவர்கள்' இணைந்து செயற்பட்டவர்கள் ஆகியோரை எனது நினைவிற்கு எட்டிய வரையில் இங்கு பதிவு செய்வது எனது தார்மீகக் கடமையாகும்.

இன்று தமிழ் மக்களின் அரசியலில் ஒரு புதிய சகாப்தம். சிங்கள இனவாதத்திற்கெதிரான போராட்டத்தில் தமிழர் என்ற ரீதியில் சாதியின் பெயரால் அடக்கப்பட்டவர்கள், நிலமற்றவர்கள் அடக்கி ஆண்டவர்கள், வசதிபடைத்தவர்கள் என்று வர்க்க சமய சாதி பேதமின்றி இணைக்கப்பட்டுள்ளார்கள்.

தமிழர்களின் நிலம் பறிபோகிறது. உயர் கல்வியில் ஒடுக்கப்படுகின்றனர். பெரிய பதவிகள் பறிபோகின்றன. தமிழர் இரண்டாந்தரப்பிரஜையாக ஆக்கப்படுகின்றார் இதுவே தமிழ் மக்களின் கூக்குரல்! இதற்காக நாட்டுப் பிரிவினைகோரி வாலிபர்கள் போராடிக் கொண்டும், உயிர்த்தியாகம் செய்து கொண்டும் இருக்கின்றார்கள்.

அறுபது ஆண்டுகளுக்கு முன் இதே காரணிகளுக்காகத்தான் தமிழ் மக்களின் ஒரு பகுதியினர் யாழ்ப்பாண உயர் சாதியினர் எனத் தமக்கு முத்திரை குத்திக்கொண்டவர்களின் அடக்கு முறைக்கு எதிராகப் போராடத் தொடங்கினார்கள். இப்போராட்டத்திற்குத் தலைமை தாங்கியவர் தான் எம். சி. என அழைக்கப்படும் எம். சி. சுப்பிரமணியம்.

வாழ்வதற்குச் சொந்த நிலமில்லை. ஆரம்பக் கல்வியே மறுக்கப்பட்ட நிலை. அடிமைத்தனமான வேலைவாய்ப்புகள். கோவில்கள், தேனீர்க்கடைகள், சுடலைகள் ஆகியவற்றில் பாரபட்சம். யாழ்ப்பாணத்து வேளாள இனம் இந்து சமய பின்புல ஆதரவோடு வீறாப்புடன் விளங்கிய காலகட்டம்.

சிங்கள இனவாதத்தால் கட்டவிழ்த்து விடப்பட்டும் அக்கிரமங்களை அகில உலகும் கேட்கும் படியாக தமிழ் மக்கள் இன்று ஓங்கிக் குரலெழுப்புகிறார்கள். இதே தமிழ் மக்கள் மத்தியில் தான் ஒரு பகுதியினரின் வீடுகள் கொழுத்தப்பட்டன. பொதுக் கிணறுகளில் நஞ்சு கலக்கப்பட்டன. நியாயம் கேட்டவர்கள் கொலை செய்யப்பட்டார்கள். சொந்தமான கொஞ்ச நஞ்ச நிலங்களும் பறிக்கப்பட்டன.

இவ் அநீதிகளுக்கெதிராக எழுந்த போராட்டத்திற்குத் தலைமைதாங்கி யாழ்ப்பாணத்துச் சாதி அமைப்பின் அக்கிரமங்களை, மனித உரிமை மீறல்களை முழு இலங்கைக்கும் அம்பலப்படுத்தியவர்தான் எம். சி.

"தமிழ் மக்கள் மத்தியில் நிலவிய சாதி அமைப்பு நீதியற்றது" என்று கொள்கை ரீதியான நிலைப்பாட்டை முதலில் எடுத்தது இலங்கை இளைஞர் காங்கிரஸ் என்ற இயக்கம் ஆகும். முற்போக்குச் சிந்தனையுள்ள இதன் தலைவர்களும், திருவாளர்கள் எஸ். தர்மகுலசிங்கம், பொன். கந்தையா போன்ற இடதுசாரித் தலைவர்களும் சாதி ஒடுக்குமுறைக்கெதிரான போராட்டத்தில் சிறுபான்மைத் தமிழ் மக்களுக்குத் தங்கள் ஆதரவை வழங்கினார்கள்.

"'அடித்தால் திருப்பி அடி' என்று அடக்கப்பட்ட மக்களுக்கு அறிவுரை கூறி உற்சாகப்படுத்தியவர் பெருமகன் எஸ். தர்மகுலசிங்கம். சீவல் தொழிலாளர்கள் வாழ்ந்த பருத்தித்துறை சாந்தா தோட்டம் கிராமத்தில் அவர்களின் வயிற்றில் அடிக்கும் நோக்கோடு அவர்களுக்கு ஊதியம் தரும் பனை மரங்களின் பாளைகளை, தங்கள் 'கைக்கூலிகளை' வைத்து இரவோடு இரவாக வெட்டி எறிந்து விட்டார்கள் இவ்வூர்சாதிமான்கள். பாதிக்கப்பட்ட மக்கள் எஸ். தர்மகுலசிங்கத்திடம் சென்று முறையிட்டார்கள். "உங்கள் மரங்களை அவர்கள் வெட்டினால், அவர்களுக்கு வருமானம் கொடுக்கும் புகையிலை மரங்களை வெட்டுங்கள்" என்று ஆலோசனை கூறி அவர்கள் போராட வேண்டிய அவசியத்தை உணர்த்தியவர் தர்மகுலசிங்கம் அவர்களே ஆகும்.

இக்காலகட்டத்தில் சமத்துவத்தை வலியுறுத்த 'சமபோசனம்' இலங்கை இளைஞர் காங்கிரஸால் ஒழுங்கு செய்யப்பட்டது. தென்பகுதி இடதுசாரித் தலைவர்களும் இதில் கலந்து கொண்டார்கள். எமது சமூகத்தின் சார்பாக ஜேக்கப் காந்தி, ஜீ.எம். பொன்னுத்துரை, ஜே.போல் ஆகியோரோடு நானும் கலந்து கொண்டேன். இவ்வகையான அரசியல் சூழ்நிலைகளின் உந்துதலால் யாழ்ப்பாணம் பலாலி வீதியில், அப்பகுதியைச் சேர்ந்த வாலிபர்களால் 'சன்மார்க்க ஐக்கிய வாலிபர் சங்கம்' என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது. முழுச் சிறுபான்மைத் தமிழ் மக்களின் போராட்டங்களுக்கும் முன்னோடியான இச்சங்கம் இன்னும் யாழ். பலாலி பருத்தித்துறை வீதிச்சந்தையில் கம்பீரமாகக் காட்சித் தருகின்றது.

சம்பத்தரிசியார் கல்லூரியில் ஆங்கிலப் படிப்பை இடைநிறுத்தி விட்டு திருகோணமலையில் ஆங்கிலக் கொம்பனியான 'எலிபன்ட் கவுஸ்" இல் வேலையைப் பொறுப்பேற்றார் எம். சி. அநியாயங்களைக் கண்டு குமுறும் உள்ளங் கொண்ட எம். சி.யால் உத்தியோக வாழ்க்கையைத் தொடர முடியவில்லை. வேலையை உதறிவிட்டு யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார்.

யாழ்ப்பாணத்துச் சா்தி அமைப்பிற்கு எதிராகப் போராடுவதே தன் வாழ்க்கையின் நோக்கமாக வரித்து 'சன்மார்க்க ஐக்கிய வாலிபர்' சங்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டார். தன் சமூக மக்களுக்காக மட்டுமல்லாமல், முழு உழைக்கும் வர்க்கத்தின் விடுதலைக்காகப் போராடுவதற்காகக் கம்யூனிஸ்ட் கட்சியிலும் இணைத்து கொண்டார். சன்மார்க்க ஐக்கிய வர்க்க சங்கத்தின் தலைவராக சமூகப் பிரச்சினைகளைக் கையாண்டு பெற்ற அனுபவங்களும், அச்சங்கத்தை சேர்ந்தவர்களின் ஆதரவும், பக்க பலமும் தான் அவரைச் சிறுபான்மைத் தமிழ் மக்களின் ஏகதலைவனாகப் பரிணமிக்க வழிவகுத்தது என்பதை அடித்துச் சொல்வேன்.

'சாதிக்கு எதிரான போராட்டம் பரவலாக்கப்பட வேண்டும், ஸ்தாபன ரீதியாக வலுப்பெற வேண்டும்' என்ற தேவையை எம். சி.க்கு உணர்த்தியவர் பொ. கந்தையா அவர்கள். இவரின் அறிவுரையின் பெயரில்தான் 'அகில இலங்கைச் சிறுபான்மைத் தமிழர் மகாசபை' உதயமானது. பெரும்பான்மைச் சமூகத்திடமிருந்து பண, அரசியல், அதிகார பலங்களால் அடக்கப்பட்டு மௌனிகளாக விருந்த சிறுபான்மைத் தமிழ் மக்கள் தங்கள் உரிமைகளுக்காக குரல் எழுப்ப ஏதுவாக இருந்தது இம்மகாசபையே. அந்திம காலம் வரை இதற்குத் தலைமை தாங்கி வழிநடத்தியவர் எம். சி.

தமிழ் மக்கள் மத்தியில் நிலவிய சாதி அடக்கு முறையைக் கண்டும் காணாமல் பெரும்பான்மை சமூகத்தின் மனம் கோணாமல், இனவாத அரசியல் நடத்திய தளபதிகளும், எல்லைக் காவலர்களும், சிங்கங்களும் இன்று விலாசமிழந்து அரசியல் வனாந்தரத்துக்குள் எறியப்பட்டுள்ளார்கள். இத்தமிழனத்தின் அடக்கு முறைக்கும் அராஜகத்துக்கும் உட்படுத்தப்பட்டு சமூகத்தின் அடிமட்டத்தில் வாழ்ந்த மக்களின் விடுதலைக்காகத் தன் வாழ்வின் ஒவ்வொரு நிமிடத்தையும் அர்ப்பணித்த எம். சி. ஒரு ஒப்பற்ற தலைவனாக, தன் மக்களால் இன்னும் போற்றப்படுகிறார். மனைவி, மக்களுக்கு மேலாக சமூக சேவைக்கு முன்னுரிமை கொடுத்தவர் எம். சி. மனித நேயம் அவர் நெஞ்செல்லாம் நிறைந்திருந்தது.

தனிமனிதனான எம். சி.யிடம் சில அலாதியான பழக்க வழக்கங்கள் இருந்தன. இவருக்கு எதிரிகள் கிடையாது. இவர் யாரையும் வெறுப்பதில்லை. நகைச்சுவை உணர்வுள்ளவர். மகிழ்ச்சியில் அட்டகாசமாகச் சிரிப்பார். அப்போது அவர் கண்கள் மூடிக்கொள்ளும். நின்று கதைக்கும் பொழுது அவரை அறியாமலே அவர் கால்கள் ஆடிக்கொண்டிருக்கும். தூய வெள்ளை வேட்டி (வேட்டி போல தோற்றமளிக்கும் சாரம்) 'நஷனலோடு' எந்நேரமும் கம்பீரமான தோற்றம், உடைகளின் தூய்மையில் அதீத கவனம் பேணுவார்.

எம். சி.யின் ஆரம்ப கால சமூக வாழ்வில் நான் நெருக்கமாக இணைந்து செயலாற்றியுள்ளேன். ஜேக்கப் காந்தி, ஜீ.எம். பொன்னுத்துரை, ஜீ. நல்லையா, கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த ஆர்.ஆர். பூபாலசிங்கம் எல்லோரும் மாலைவேளையில் என் வீட்டில் கூடிப் பேசுவோம். அரசியல் சமூகப் பொதுப் பிரச்சினைகளை மையமாகக் கொண்டு விவாதங்கள் நடு இரவு வரை நீண்டு விடும். நோக்கம் ஒன்றென்றாலும், அணுகுமுறை வேறுபாட்டால் அயலே அதிரும் படியான முழக்கங்களோடு சொற்போர் நடக்கும். எம்.சி., ஜி.எம்., காந்தி இவர்கள் உணர்ச்சிவசப்பட்டால் தொண்டை கிழியக் கத்திப் பேசுவார்கள். காந்தி தன் கைத்தடியால் எம். சி.யின் முதுகில் அடித்தும் இருக்கிறார். இறுதியில் சகோதரர் போலவே பிரிவோம். ஒருவருக்கொருவர் பரஸ்பரம் அன்பும், நட்பும் மயரியாதையும் வைத்திருந்தோம்.

'காந்தி ஐயா' என்று எம் மக்களால் அன்போடு அழைக்கப்படும் ஜேக்கப் அவர்கள் உடுவிலைச் சேர்ந்தவர். யாழ்ப்பாணக் கல்லூரியில் பயின்றவர். சிறுபான்மைத் தமிழர்களின் மூத்தத் தலைவர்களில் ஒருவர். மகாத்மா காந்தியின் கொள்கையால் ஆகர்சிக்கப்பட்டதால் மேலங்கி ஏதும் அணியாமல் கதர் வேட்டியும் சால்வையும் மட்டுமே அணிந்து கொள்வார். நீண்டு வளர்ந்த தாடியும், கைத்தடியும் அவரது அடையாளச் சின்னங்கள். சூட்டும் கோட்டும்போட்டே கறுவாக்காட்டு சீமான்கள் 'காந்தி'பட்டம் பெறமுன்பே காந்தி பட்டம் பெற்று எளிமையாக வாழ்ந்து காட்டியவர் எங்கள் ஜேக்கப் காந்தி அவர்கள். 'செனற் பதவிக்கு ஏற்ற தகுதிகள் இருந்தும் அதற்குத் தடையாக இருந்தது அவரது தோற்றமே. எதிர்க் கட்சியில் இருந்த சமயம் எஸ். டபிள்யூ ஆர்.டி. பண்டாரநாயக்கா யாழ்ப்பாணம் வந்திருந்தார். எமது மக்கள் சார்பில் அவரை வரவேற்று ஆங்கிலத்தில் உரையாற்றினார் காந்தி. வருங்காலப் பிரதமரே எனத் தீர்க்கதரிசனமாக அவரை வரவேற்றார்.

சன்மார்க்க ஐக்கிய வாலிபர் சங்கம், அகில இலங்கைச் சிறுபான்மைத் தமிழர் மகாசபை, வட இலங்கைக் கள்ளிறக்கும் தொழிலாளர் சங்கம் ஆகியவற்றில் தலைவர் உட்பட பல பதவிகள் வகித்து எமது சமூகத்திற்குச் சேவையாற்றிய பெருமகன் ஜேக்கப் காந்தி அவர்கள். இவரது ஆலோசனைகளையும், வழிகாட்டலையும் எம். சி. தனது பொதுவாழ்வில் பெற்றுக் கொண்டார்.


ஜி.எம். என்று அழைக்கப்படும் ஜி. எம். பொன்னுத்துரை, எம். சியிலும் வயது கூடியவர். இருவரும் நெருங்கிய நண்பர்கள். எமது போராட்டத்தை ஆரம்பித்த முன்னோடிகளில் ஒருவர். மகா சபை, சன்மார்க்க ஐக்கிய வாலிபர் சங்கம் போன்ற ஸ்தாபனங்கள் உருவாக எம். சியுடன் இணைந்து உழைத்தவர். ஆங்கிலத்தில் எழுத்து வல்லமையுடவர். ஆங்கிலத்தில் 'மகஜர்', பிரசுரங்கள் தயாரிப்பது இவரிடமே ஒப்படைக்கப்படும். அநீதியைத் துணிச்சலுடன் மோதும் ஒரு நேர்மையாளன். சம்பத்திரிசியார் கல்லூரியில் பயின்ற காலத்தில் தமிழ் கத்தோலிக்க சுவாமியார் ஒருவர் இவரிடம் "நீ என்ன சாதி"என்று வினவ "சகல ஜீவராசிகளும் சமமே எனப் போதிக்கும் கிறிஸ்துவ சமயத்தின் பிரதிநிதியாகிய நீயே சாதி பேசுகிறாயே" என முகத்தில் அடித்தால் போல் கூறிவிட்டு கல்லூரியை விட்டு வெளியேறியவர். அந்நாட்களிலேயே சீர்திருத்த மணம் செய்தவர். சமயங்களிலேயே சாதி ஒட்டியிருந்ததால் இறுதிவரை நாத்திகனாகவே வாழ்ந்தவர்.

தமிழ் ஈழம் நிர்மாணிக்கப்பட்டால் அதில் சாதி வேறுபாடும், வறுமையும் ஒழிக்கப்பட்டுவிடும் என்ற நம்பிக்கையில் பிற்படுத்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான இளைஞர்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போராட்டத்தில் இணைந்துள்ளனர்.

அதே சமயம் சுயாட்சி கிடைக்கும் கட்டத்தில் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்ற வெளிநாடுகளில் வாழும் தமிழ் இனமேலாதிக்கவாதிகளும், பிற்போக்காளர்களும், தங்களைத் தயார்படுத்துகின்றார்கள். அவர்கள் புதிய வடிவங்களோடு பொருளாதார ரீதியில் தம்மைப் பலப்படுத்தி வருகிறார்கள். எம். சி.யை நினைவு கூரும் இவ்வேளையில் எமது சமூகம் இன்றைய அரசியல் நிகழ்வுகளை அவதானித்து விழிப்புடன் செயல்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

'துப்பாக்கி நிழலில் சாதிகள் மறைந்து கிடக்கின்றன. மரணித்து விடவில்லை'. ஈழத்தமிழர்க்கு சுயாட்சி கிடைக்கும் பொழுது சகல அடக்குமுறைகளும் அற்ற ஒரு சமத்துவ சமுதாயம் மலர வேண்டும். அப்பொழுதுதான் அமரர் எம். சி.யின் ஆத்மா சாந்தியடையும். அதுவே நாம் அன்னார்க்குச் செய்யும் அஞ்சலியுமாகும்.

-க.இராசையா



காலம் கருத்தரிக்கும் மூலத்தை
ஆயும் ஒவ்வோர் சமயமும்
பாழில் விழும் நான்.
வீழந்தது தெரியாது,
எழுகையில்
என் மகள் முற்றத்தில் நின்று கை சுழற்றிக்
கயிறடிப்பில்
காலம் கயிறாய்த் துடிக்கிறது:
அண்ணாந்து பார்த்தேன்.
நூலிழுத்து கீழிறங்கும் காலத்தில்
ஊஞ்சலிடும் சிலந்தி.
கண்காணா
கால முகட்டில் முடிச்சிட்டு
ஏணையென ஆடும் பிரபஞ்சம்.
ஒவ்வோர் யதார்த்த நிகழ்வுள்ளும்
காலமே ஆயிரமாய் வலைபின்னும்
மின்னிழையில் இரத்தோட்டம்
துயில்கையில் காலத்தை விழுங்கி
விழிக்கையில் காலத்தை வெளித்தள்ளும் நான்.
விழிப்பில்லை
துயில் இல்லை
காலக் கருத்தரிப்பின் மூலத்தில் ஆழ்கையில்
பாழில் விழும் நான்!

மு. பொ

# கணியன் நா. கோவிந்தசாமி: ஒரு தமிழ் அறிஞனின் மறைவு!

சிங்கப்பூரின் முன்னோடி இலக்கியவாதியும் கணினி அறிஞருமான நா. கோவிந்தசாமி (53) அவர்கள் சென்ற வாரம் சிங்கப்பூரில் காலமானார். சரிநிகரின் அபிமானியும், ஈழத்து இலக்கியங்களை சிங்கப்பூர், மலேசிய நாடுகளில் அறிமுகப்படுத்துவதில் பங்காற்றியவருமான நா.கோவிந்தசாமி அவர்கள் இறப்பதற்குச் சில தினங்களுக்கு முன்பு தான் சரிநிகருக்கான இணையப் பக்கத்தை உருவாக்கி இருந்தார். (WWW. Kanian.com/Sarinihar)

சிங்கப்பூரில் தேசிய கல்விக் கழகத்தின் (National Institutre & Education) மூத்த விரிவுரையாளராக நீண்ட காலமாகப் பணியாற்றி வந்தவர் நா.கோவிந்தசாமி. சிங்கப்பூரில் தமிழுக்கும், தமிழ் மொழியூடான கல்விக்கும் இலக்கியத்துக்கும் அவர் ஆற்றியுள்ள பணிகள் அளப்பரியவை. தமிழையும் தமிழிலக்கியத்தையும் நவீன கணினித்துவமையூடாக நவீன மயப்படுத்தியதில் அவருடைய பங்கு பல வழிகளிலும் முன்னுதாரணம் அற்றதாகவே இருந்தது.

கால மாற்றத்தோடும் தொழில் நுட்ப வளர்ச்சியோடும் ஒட்டித் தன்னையும் வளர்த்துத் தமிழையும் வளர்த்து வந்தவர் நா.கோவிந்தசாமி. 1989இல் IE Keybord என்னும் புதிய தமிழ் தட்டச்சு வடிவமைப்பை இவர் உருவாக்கினார். இந்த வடிவமைப்பு எளிமையானதும் இலகுவாகப் பயிலக் கூடியதாகவும் இருந்தது. இன்று சிங்கப்பூரிலும் மலேசியாவிலும் பரவலாகப் பாவனையில் உள்ள தட்டச்சு முறை இதுவே ஆகும்.

சிங்கப்பூரின் தேசியப் பல்கலைக்கழகத்தின் கணினித் துறையுடன் இணைந்து கணியன் என்று வழங்கப்படும். தமிழ் மென் பொருளை உருவாக்கியமை நா.கோவிந்தசாமி அவர்களின் மிக முக்கியமான பங்களிப்பாகும். சிங்கப்பூரின் எல்லாத் தமிழ்ப் பள்ளிகளிலும் பெருமளவு பயன்பாட்டில் இருக்கும் கணியன், தமிழைக் கணினி மய்ப்படுத்தியதில் ஒரு முக்கியமான மைல் கல்.

நான்கு மொழிகள் அரச மொழிகளாகப் பாவனையில் இருக்கும் சிங்கப்பூரில் கணினியூடாக இந் நான்கு மொழிகளிலும் உடனடியாகத் தகவல் பெற்றுக் கொள்வதும் பரிமாற்றம் செய்வதும் அவசியமாக இருந்தது. ஆங்கில எழுத்துக்களையே பாவிப்பதால் மலே மொழிக்கு கணினி வடிவம் பெறுவதில் சிரமம் இருக்கவில்லை. தமிழ், சீனம் ஆகிய மொழிகளே ஆங்கிலத்துக்குச் சமானமாகவும், சமாந்தரமாகவும் கணினித் துறைக்குள் பிரதிநிதித்துவம் பெறுவதில் பெருத்த சங்கடங்கள் இருந்தன.

நா. கோவிந்தசாமியின் கணியன் இந்தச் சிக்கலை மிகவும் சாதுரியமாகத் தீர்த்து வைத்துள்ளது. (WWW. Kanian.Com) நொடிப் பொழுதுள் தமிழிலிருந்து ஆங்கிலத்துக்கும், சீனத்துக்கும், மலேக்கும் கணினியூடாக மாற முடியும். இத்தகைய ஒரு தொழில் நுட்பம் இலங்கையில் நடைமுறையில் இருக்குமானால் தமிழ்மொழி அமுலாக்கல் மற்றும் அரசுத் துறையில் தமிழ் மொழிக்கும் சமமான இடம் வழங்கப்படுவதில் எத்தகைய பிரச்சினையும் இருக்க நியாயமில்லை.

முதன் முதலில் தமிழை இணையத்தில் ஏற்றிய சிறப்பையும் கோவிந்தசாமி அவர்களே பெற்றுக் கொண்டார். 1995இல் Journey என்னும் சிங்கப்பூர் கவிதைத் தொகுப்பின் தமிழ்க் கவிதைகள் முதன் முதலில் கணினி வலைப் பக்கத்தில் இடம் பெற்றன.

1997 ஆம் ஆண்டு, உலகத் தமிழ்க் கணினிப் பேராளர்கள் பலர் பங்கு கொண்ட முதல் அனைத்துலகத் தமிழ் இணைய மாநாட்டை சிங்கப்பூரில் நா. கோவிந்தவாமி அவர்களே ஏற்பாடு செய்திருந்தார். இந்த வருட ஆரம்பத்தில் தமிழகத்தில் நடைபெற்ற Tamil Net 99- இரண்டாவது அனைத்துலக தமிழ் இணைய மாநாட்டிலும் தமிழ் கணினி வளர்ச்சி பற்றி அவர் ஆற்றிய ஆய்வுரை மிகவும் முக்கியமானதாக அமைந்திருந்தது.

தமிழ் மாணவர்களுக்காக செந்தமிழ் என்ற தலைப்பில் CD தட்டுக்களையும் அவர் உருவாக்கியிருக்கிறார். அவற்றின் தொடர்ச்சியாக மேலும் பல CD தட்டுக்கள் வெளிவர இருந்தன. எனினும் கோவிந்த சாமியவர்களின் திடீர் மறைவு, முயற்சிகளில் எல்லாம் பெரும் தேக்கத்தை ஏற்படுத்தி விட்டது.

சிங்கப்பூரின் தமிழ் இலக்கிய வரலாற்றிலும் கோவிந்தசாமி அவர்களின் பங்கு போற்றுவதற்குரியதாக இருந்தது. சிங்கப்பூர் இலக்கியங்களுக்கும், சிங்கப்பூர் தமிழ் இலக்கியத்துக்கும் குறிப்பானதும் தனித்துவமானதுமான பண்புகள் இருக்க வேண்டும் என்ற எண்ணமும் தேடலும் கோவிந்தசாமி அவர்களிடம் இருந்தது. பெருமளவுக்குத் தென்னிந்திய ஜன




ரஞ்சகத் தமிழ் மலிவு/மலின இலக்கியங்களிலும் சினிமாவிலும் மூழ்கிப் போய் இருக்கிற சிங்கப்பூர்த் தமிழ்ச் சூழலில், சீரிய இலக்கியத்தையும் ஆழமான பார்வையையும் வலியுறுத்தி இயங்கி வந்தவர் அவர். அறுபதுகளில் எழுதத் தொடங்கியவர் ஏராளமான தொலைக்காட்சி, வானொலி நாடகங்களை ஆரம்பத்தில் எழுதினார். பின்னர் சிறுகதைத் தொகுதிகளும், வேள்வி (1990) என்னும் நாவலும் இது வரை வெளியாகியுள்ளன. சிங்கப்பூர் இலக்கியத்துக்கு வரலாற்றுப் பார்வையை உண்டாக்கியவர் என்று சிங்கப்பூர் தமிழ் நாளேடான தமிழ் முரசு, கோவிந்தசாமியைப் பற்றிய தன்னுடைய அஞ்சலிக் குறிப்பில் தெரிவிக்கிறது.

1992இல் தமிழ்ப் புத்தகாலயம் வெளியிட்ட சிங்கப்பூர்த் தமிழ்ச் சிறுகதைகளின் தொகுப்பாளராகவும் கோவிந்தசாமியே இருந்தார் Fiction of Singapore (1990) மூன்று தொகுதிகள், Asian Drama Anthology (1993) ஆகிய தொகுப்புகளின் தமிழ்ப் பிரிவுக்கு ஆசிரியராகப் பணிபுரிந்தார்.

1988இல் தொடங்கப்பட்ட சிங்கப்பூர் எழுத்தாளர் வாரம் என்னும் அனைத்துலக நிகழ்ச்சியின் முக்கியமான அமைப்பாளர்களில் ஒருவராகக் கோவிந்தசாமி பணிபுரிந்து வந்திருக்கிறார். எழுத்தாளர் வாரம் நிகழ்வின் போது பல உலக எழுத்தாளர்கள் சிங்கப்பூருக்கு வரவழைக்கப்பட்டு இலக்கியப் பரிமாற்றங்கள், கவிதை வாசிப்புக்கள், ஆய்வுகள் என்பன ஒழுங்கு படுத்தப்பட்டு வந்தன. தமிழ் எழுத்தாளர்களும் உலகின் பிறமொழி எழுத்தாளர்களும் கலந்துறவாடவும் பரிமாற்றம் செய்யவும் சிங்கப்பூர் எழுத்தாளர் வாரம் முக்கியமானதொரு களமாக இருந்தது. பேராசிரியர் சிவத்தம்பி, ஜெயகாந்தன், சுந்தர ராமசாமி போன்றோர் இந்த நிகழ்வுகளில் பங்கேற்று இருக்கிறார்கள். இந்த வருட நிகழ்வின் போது அம்பையும் எஸ்.பொவும் வருவதாகக் கூறி மகிழ்வடைந்திருந்தவர் கோவிந்தசாமி. நிகழ்வு நிறைவேற முன்பே அவர் காலமானது அவருடைய நண்பர்களையும் இலக்கிய ஆர்வலர்களையும் பெருந் துயரத்தில் ஆழ்த்தி விட்டது.

இந்த வருடம் ஏப்ரல் மாதம் தான் நா.கோவிந்தசாமி அவர்களை நான் முதலில் சந்தித்தேன். இலங்கை திரும்பும் வழியில் சிங்கப்பூரில் எழுத்தாள நண்பர்களையும் இலக்கிய வாதிகளையும் சந்திக்கிற நல்வாய்ப்பு எனக்குக் கிட்டியிருந்தது. ஈழத்து இலக்கியம் தமிழகத்தில் போதுமான அளவு கவனம் பெறவில்லை என்று ஆதங்கப்படுகிற நாம் மலேசிய, சிங்கப்பூர் இலக்கியங்கள், இங்குள்ள தமிழ்நிலை, தமிழர்நிலை பற்றி அக்கறை காட்டுவதில்லை. சிங்கப்பூரில் தங்கி நின்ற நாட்களில் தான் கோவிந்தசாமி அவர்களுடன் நெருங்கிய நட்பு ஏற்பட்டது. தமிழையும் தமிழ் இலக்கியத்தையும் 21ம் நூற்றாண்டுக்கு இடர்ப்பாடுகள் இல்லாமல் கொண்டு சேர்க்க வேண்டும் என்பது எங்கள் இருவருக்கும் பொதுவானதொரு அக்கறையாக இருந்தது.

மே மாதம் 19ம் திகதி மறுபடியும் நண்பர் கோவிந்தசாமியைச் சந்தித்தேன். மறுநாள் நான் கனடா செல்ல வேண்டும் என்பதால் எமக்குப் பேசுவதற்கு ஒரேயொரு இரவு மட்டும் தான் இருந்தது அந்த இரவில் போவதும், சரிநிகரின் இணையப் பக்கத்தைச் சீரமைப்பதும் இப்போது தமிழ்ச் சிற்றிதழ்கள் அனைத்தையும் எப்படிக் கணினியூடாக உலக வலைப் பக்கங்களில் இணைக்கலாம் என்பது பற்றியும் திட்டமிட வேண்டி இருந்தது.

அதிகாலை வரை செலவிட்டும் எங்களது வேலை முடியவில்லை. இன்னொரு முறை, இந்த வருடமே செப்டம்பர் மாதம் சந்திப்போம் என்று கூறிப் பிரிந்தோம். மறு வாரமே அவர் காலமாகி விட்டார் என்ற துக்கச் செய்தியை நண்பர் மூர்த்தி அறிவித்தார். தொலைபேசி மூலம் செய்தி வந்த போது நடு இரவு. இப்படியான ஒரு இரவின் போது தான் எனது அப்பா மாரடைப்பால் காலமான செய்தியும் முன்பு வந்திருந்தது. நடு இரவும் மாரடைப்பும் இலக்கியமும் ஒரு அச்சம் தருகிற இணைப்பாகத் தோன்றுகிறது.

கோவிந்தசாமியின் இழப்பு மிகவும் பெரிது. வெற்றிடங்களை இயற்கை விடுவதிலை என்பது உண்மை ஆயினும் சில வெற்றிடங்கள் நிரப்பப்படுவதற்கு நீண்ட காலம் எடுக்கலாம்.

சேரன்



ட்ரலீஷியா குணவர்தன:

# அருந்தலான ஒரு சிங்களப் பெண் கலைஞர்!

இலங்கைத் தமிழ் மக்களை சக்தி தொலைக்காட்சி ஆக்கிரமிக்க முன்னர் தமிழ் மக்கள் சரியாக 8.30 மணியளவில் ரூபவாஹினியை முடுக்கிவிடத் தவறுவதில்லை. அது சிங்கள தொலைக்காட்சி தொடர்களை கண்டுகளிக்கவே. மொழி அறியாதவர்கள் கூட, சிங்களத் தொலைக்காட்சி நாடகங்களை தவறவிடாத போக்கு அன்று நிலவியது.

அவ்வாறான நாட்களில் ஒளிபரப்பப்பட்ட தொலைக்காட்சித் தொடரில் பாக்கு வெட்டியை கையிலேந்திக் கொண்டு ஒரு சூனியத் தன்மையான பின்னணிச் சூழலுடன் உலவித்திரியும் ஒரு பெண்ணை அந் நாடகத்தை ரசித்த எவராலும் மறந்திருக்க முடியாது. பாக்குவெட்டி நாடகம் என தமிழ் மக்களால் பரவலாக விளிக்கப்பட்ட அந் நாடகத்தில் லுசிஹாமி வேடமேற்று அப்பாத்திரத்துடன் ஒன்றி தமது திறமையை வெளிக்காட்டிய ட்ரலீஷியா குணவர்தன அண்மையில் காலமானார் என்ற செய்தி அதிர்ச்சியைத் தரக் கூடியது தான்.

லெஸ்ட்டர் ஜேம்ஸ் பீரிசின் தொலைக்காட்சித் தொடரான 'கிரய'வில் லுசிஹாமியாக அவர் ஏற்ற வேடத்தை தமிழ் ரசிகர்கள் மறந்திருக்க மாட்டார்கள். அவரை ஒரு தொலைக்காட்சி நாடக நடிகையாக மட்டும் அறிந்திருப்பவர்களுக்கு 43 வருட கலைத்துறை அனுபவம் கொண்டவர் அவர் என்பது சற்று ஆச்சரியத்தைத் தரக்கூடியது.

1956களில் சிங்கள மேடை நாடகத்துறையில் ஏற்பட்ட புரட்சிகர மாற்றத்தின் விளைவாக, பேராதனைப் பல்கலைக்கழக நாடகப்பிரிவு ஒழுங்கு செய்த பேராசிரியர் எதிரிவீர சரத் சந்திரவின் 'மனமே' மேடை நாடகத்தில் முதன் முதல் இளவரசியாக நடித்த பெருமை இவரையே சேரும். அவ்வேளை அவர் அப்பல்கலைக்கழகத்தின் 2ம் ஆண்டு மாணவி.

50கள் எனக்கூறப்படும் பொழுது ஒரு பெண் மேடையேறி நடிப்பதென்பது சம்பிரதாயங்களுக்கு முரணானது என்ற போக்கு நிலவிய அக்காலகட்டத்தில் ட்ரலீஷியாவின் தன்னம்பிக்கையும் ஆர்வமும் இங்கு குறிப்பிடத்தக்கது. சமூகத்தின் தடைகளை கட்டுடைத்து அவர் 50களில் ஏறிய மேடை இன்று கலைத்துறையில் பலராலும் மதிக்கப்படும் ஒரு நிலைக்கு அவரை இட்டுச்சென்றுள்ளதெனலாம். அன்று எல்பின்ஸ்டன் மேடையில் தொடங்கிய அவரது கலைப் பயணம், 'ஹஸ்த்தகிந்த மந்த்தரே, சந்தகிந்துரு, குண்டலகேசி, நரிபேனா போன்ற நாடகங்களுடன் தொடர்ந்தது. 1963ல் லெஸ்ட்டர் ஜேம்ஸ்பீரிஸ் 'கம்பெரலிய திரைப்படத்தில் அனுலா என்ற வேடமேற்று நடித்தார்.

குறிப்பாக மனமே மேடை நாடகத்தில் 1956 தொடக்கம் 1971 வரையிலான காலப்பகுதியில் மனமே இளவரசியாக 300க்கு அதிகமான மேடைகளில் தோன்றி நடித்த பெருமை இவருக்குண்டு. அத்தோடு நவீன சிங்கள மேடை நாடகத் துறையின் மூத்த பரம்ரையைப் பிரதிநிதித்துவம் செய்தவர் ட்ரலீஷியா குணவர்த்தனவாகும்.

இவ்வாறு மேடை நாடகம், தொலைக்காட்சி நாடகம், திரைப்படத்துறை என பல்கலைத்துறையை ஆக்கிரமித்தவரான இவர் பல்கலைக்கழக விரிவுரையாளராகவும் தமது கடமையை ஆற்றத் தவறவில்லை. களனி பல்கலைக்கழகத்லதில் சேவையாற்றிய அவர் 1976ம் ஆண்டு தொடக்கம் அழகியற்பிரிவின் ஆங்கில மொழி ஆலோசகராகவும் விளங்கினார். அத்துடன் திறந்த பல்கலைகழகத்தின் விரிவுரையாளராகவும் பணியாற்றினார்.

இவ்வாறு. கலைத்துறையிலும், கல்வித்துறையிலும் ஆற்றிய பங்களிப்புக்களுக்கு ஜனாதிபதி விருது, சரசவிய விருது எனப் பல விருதுகளைப் பெற்றுள்ள ட்ரலீஷியா குணவர்தன துணை நடிகைப் பாத்திரத்திற்குப் பெற்ற விருதுகள் எண்ணிலடங்காதன.

அவரது தோற்றமும், திறமையை வெளிக் காட்டும் பாத்திரங்களை தேர்ந்தெடுத்துக் கொள்ளும் பக்குவமும் அவரை ஒரு 'பிரபல' நடிகை என்ற முத்திரை குத்தப்படாத மூத்த திறமையான நடிகை என்ற முத்திரைக்குரியதாக்கியுள்ளது எனலாம்.

இந்த ஆணாதிக்கக் கட்டமைப்பில் 'பிரபலம்' என்ற சொல்லை மட்டும் தக்க வைத்துக் கொள்ள முனையும் பெண் கலைஞர்கள் மத்தியில் ட்ரலீஷியா குணவர்தன தனித்துவமானவராக திகழ்ந்தார் என்றே கூற வேண்டும்.

தனது இறுதிக்காலத்தில் புற்று நோயால் பாதிக்கப்பட்டிருந்த போதும் கலைத்துறையின் பால் கொண்ட காதலினால் பல தொலைக்காட்சித் தொடர்களிலும் நடித்துக் கொண்டிருந்தார். அவ்வாறு நடித்து சமீபத்தில் பலராலும் பேசப்பட்ட நாடகம் தான் பெத்தேகெதர நாடகமாகும். விபவி கலாசார மையத்துடன் இணைந்து சர்வதேச இலக்கியங்களை மொழிபெயர்க்கும் பணிக்கும் ஆதரவு தந்து கொண்டிருந்தார் என அறியக்கிடைக்கின்றது. இந்தியாவின் கன்னட எழுத்தாளரான யு.ஆர். அனந்த மூர்த்தியின் 'சம்ஸ்கார்' எனும் படைப்பை சிங்களத்தில் 'சங்ஸ்கார' எனும் பெயரில் மொழிமாற்றம் செய்யும் பணியில் ஈடுபட்டிருந்தார் எனத் தெரியவருகின்றது.

எவ்வாறாயினும், சிங்கள கலைத்துறையில் விரல்விட்டு எண்ணிவிடக்கூடிய பெண்களே சிறந்த கலைஞர்களாக இருக்கிறார்கள் என்பது துரதிருஷ்டமே. அவர்களை இழக்கும் போது அவ்விடத்துக்கு வரக்கூடியவர்கள் யார் என்ற மிகப்பெரிய கேள்விக்குறி பூதாகரமாக நம்முன் உருவெடுத்து நிற்கின்றது. அவ்வாறு விரல்விட்டு எண்ணக் கூடியவர்கள் வரிசையில் ட்ரலீஷியா குணவர்தன முதன்மையானவர் என்பதில் ஐயமில்லை..

-ரத்னா



# பரராஜசிங்கமும் தமிழிசையும் பற்றி சில தறிப்புகள்

-தவா

நண்பர் பரா அவர்களின் திடீர் மறைவு இன்றைய நிலையில் எம்மைப்போன்றவர்களுக்கும் புதிய சமூக, அரசியல், கலாசார எழுச்சியை எதிர்நோக்கியுள்ள பலருக்கும் பேரதிர்ச்சியாகவே உள்ளது. ஏனெனில், இன்றுள்ள ஒரு சில தமிழ் இசை அறிஞர்களில் இசை சம்பந்தமான ஆழ்ந்த புலமையும், படைப்பாற்றல் நிறைந்தவரும் அதற்கான தேடல்களைத் தன்வசம் கொண்ட ஒருவராகவும் இருந்தவர் "பரா" ஒருவரே என்றால் அது மிகையாகாது.

அவரால் படைக்கப்பட்ட, தேடப்பட்ட சொத்துக்கள் என்றால் அவை இசை சம்பந்தமான புத்தகங்கள், குறிப்புக்கள், பத்திரிகை துணுக்குகள், ஒலி, ஒளி நாடாக்கள் பழைய திரை இசைப்பாடல் புத்தகங்கள் (இவற்றில் சில 1940ம் ஆண்டிற்கு முற்பட்டவை.) பழைய திரைப்பட விளம்பரங்கள், அவரால் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்கு என தயாரிக்கப்பட்ட நிகழ்ச்சிகளின் ஒலி இழை நாடாக்கள், தொலைக் காட்சிக்கென தயாரிக்கப்பட்ட ஒளி நாடாக்கள் இன்னும் பல.

எனது தமிழிசை சம்பந்தமான தேடலின்போது நண்பர் தேவதாஸ் மூலமாக பரா அவர்களின் நெருங்கிய தொடர்பைப் பெற்றுக் கொண்டேன். வெள்ளவத்தை காலிவீதியில் அமைந்துள்ள ஓர்ச்சியாட் கட்டிடத்தில் ஒரு தனி அறையில் மேற்கூறப்பட்ட இசை ஆதாரங்கள் மத்தியில் தான் முதன் முதலில் நண்பர் பராவைச் சந்தித்தேன். அவருடன் தமிழ் இசை பற்றி கலந்துரையாடியபோது அவரது முதல் வெளிப்பாடே மொழி கடந்த இனம் கடந்த ஒன்றாகவே இசையை அவர் உள்வாங்கியுள்ளதை என்னால் புரிந்து கொள்ள முடிந்தது.

அவரைப் பொறுத்தவரையில் அதுவே சரியான முடிவாக இருந்தபோதிலும் கூட தமிழ் இசையை முன்னேறிய தேசிய உணர்வுடன் கலந்த ஒன்றாக முன்னெடுப்பதை ஆதரிக்கவே செய்தார். இசை என்பது சமூக மாற்றத்திற்கான ஒரு ஊடகமாக எப்பொழுதுமே பயன்படுத்தக் கூடிய ஒன்று என்பதும், அதனூடாக மக்களை உணர்வூட்டி அறிவூட்ட முடியும் என்பதும் எமது மூதாதையரின் கடந்த கால வரலாறாகும். அன்று பரா அவர்களது ஆதங்கம் எல்லாம் எவ்வாறு தனது தேடல்களை பாதுகாப்பது என்பதும் எவரிடம் அவற்றைக் கையளித்தால் பாதுகாப்பாக இருக்கும் என்பதும் பற்றியதாகவே இருந்தது. இவற்றின் மேலாக இன்று தமிழ் ஒலிபரப்பு, தகவல் துறையில் நிலவும் தேடலற்ற வியாபார நோக்கம் கொண்ட மிக மோசமான சீரழிவைக் கண்டு வேதனையுடன் தமது கடந்தகால இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன சேவையில் ஆற்றியபணிகளை நினைவு மீட்டார். அவர் முக்கியமாகக் குறிப்பிட்டவற்றுள் ஒன்றை இங்கு பகிர்ந்து கொள்ளலாம். நாதஸ்வர மேதை காரைக்குறிச்சி அருணாசலத்தின் மேதமையை முதன்முதலில் புரிந்துகொண்டு அவரை தமிழ் மக்களுக்கு வெளிப்படுத்தியது இலங்கை வர்த்தக ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தான். அதன் பிறகே அவரின் திறமையை தமிழகம் போற்றியது. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன இசைப்பிரிவின் கட்டுப்பாட்டாளராக பணியாற்றிய வேளையிலே அவரால் தமிழில் மெல்லிசை பாடல்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து செயலாற்றியதையும், தன்னால் பாடப்பட்ட பாடல்களுள் தனக்கு மிகவும் பிடித்தமானதுமான "அழகான ஒரு சோடி கண்கள்" என்ற பாடலை அடிக்கடி பாடுவார்.

இன்று தமிழ் இசையின் பெயரில் போலியானவர்களே முன்னிலை வகிப்பதும் தேடலோ, படைப்பாற்றலோ அற்றவர்களே பெரும்பான்மையாக உள்ளதுமான நிலைமைகளைக் கூறி பெரிதும் மனம் வருந்துவார்.

தனது கடைசிக் காலத்தில் இசைத் துறைச் செயல்பாடுகளிலிருந்து ஒதுங்கியிருந்தாலும் கூட அவ்வாறான செயல்களில் ஈடுபடும் நண்பர்களுக்கும், இளைஞர்களுக்கும் உற்சாகமூட்டி நல்வழி காட்டுவதற்கு என்றுமே பின்நின்றதில்லை. இவ்வாறு தன்னிடம் உதவி வழங்குவதில் தெரிந்தவர் தெரியாதவர் என்ற வேறு பாட்டைக் காட்டியதில்லை. ஆனால், எம்மிடம்தான் இவ்வாறான சிறந்த இசை ஆய்வாளரின் சேவையை பெற்றுக் கொண்டு எமது இசைத்துறையை வளர்த்துக் கொள்வதற்கான சிந்தனைத் தெளிவு இருக்கவில்லை.

நண்பர் பராவால் வழிகாட்டப்பட்டு இன்று சிங்கள இசை உலகில் ஒரு சிறந்த கடம் வாசிப்பளராக விளங்கும் கிருஷ்ணாவை இங்கு குறிப்பிடாமல் இருக்கக முடியாது. அத்துடன் அந்தக் கிருஷ்ணா தான் நண்பர் பரா நோய்வாய்ப்பட்டிருந்த காலத்தில் பலவகையிலும் பராவிற்கு உதவினார்.

இவ்வாறாக அவருடைய கடைசிக் காலத்தில் மிகவும் உதவியாகவும் ஒத்தாசையாகவும் இருந்த மற்ற நண்பர் ஹுசைன் என்ற முஸ்லிம் இளைஞராவார். மற்றைய இனத்தவர்ரை வெறும் குறுகிய சிந்தனையோடு நோக்குகின்ற நம்மவர்கள் மத்தியில் பரா போன்ற பரந்த மனப்பான்மையுள்ள ஒரு சிலராவது இருப்பது எதிர்காலத்தில் மற்றவர்களுக்கும் வழிகாட்டியாக இருக்கும். இவ்வாறு ஒருவர் நல்ல மனப்பான்மையுடன் மிளிர்வதற்கு இசை ஒரு சிறந்த தூண்டுகோலாக அமையும். நண்பர் பரா எவ்வாறு பல கருத்துள்ளவர்களிடமும் நட்பைப் பாராட்டினாரோ அதேபோல் பல துறையில் உள்ளவர்களாலும் நண்பராகக் கொண்டாடப்பட்டார்.

அவரூடாக இசையை அறிந்து கொள்வதென்பது மின இனிமையான ஒரு அனுபவமாகும். அவர் எனக்கு இசை பற்றி அறிவூட்டியது தன்னிடமுள்ள மற்றும் தன்னால் படைக்கப்பட்ட படைப்புகளை கேட்க வைப்பதன் மூலமாகவே. அவரிடம் பல வகையான படைப்புகளும், தேடல்களும் உள்ளபோதும் என்னால் இங்கு குறிப்பிடக் கூடியவை பின்வருவன.

1. அவரால் டி.என்.எல் தொலைக் காட்சிக்காக உருவாக்கப்பட்ட நிகழ்ச்சியை இங்கு குறிப்பிடலாம். இந்த நிகழ்ச்சியில் ஒரே இராகத்தில் ஆங்கில, தமிழ், இந்துஸ்தானியில் பாடப்பட்டன.
2. அடுத்தது கிரேக்கத்தின் இசைமேதை ஜானியால் தாஜ்மகாலின் முன் நிகழ்த்தப்பட்ட இசை நிகழ்ச்சி.

இதற்கு மேலும் பராவின் திறமையைப் பற்றி பேராசிரியர் சிவத்தம்பியின் வார்த்தைகளுக் கூடாக நாம் புரிந்துகொள்ள முடியும். "தமிழில் முதன் முதலில் மெல்லிசையை வெளிப்படுத்தியவர் பரா" என்பது பேராசிரியரின் கூற்றாகும்.

நான் முன்னர் குறிப்பிட்டதுபோல் அவருக்கு பிடித்தமான பாடலான "அழகான ஒரு சோடி கண்கள்" என்ற பாடலை தாம் ஒரு பத்திரிகையில் தற்செயலாகக் கண்டே அதற்கு இசையமைத்துப் பாடியதாகவும், பின்னர் அப்பாடலை இயற்றிய முஸ்லிம் நண்பர் (பரா) தன்னை அப்பாடலிற்கூடாக கவிஞனாக்கிவிட்டதாக அடிக்கடி நன்றி கூறிக்கொள்வார் என்பதையும் நினைவு கூறுவார்.

பாரதியாரிற்குப் பின் தமிழ் இலக்கியத்தில் ஒரு புதிய பாய்ச்சலை ஈழத்து இலக்கிய விமர்சகர்கள், படைப்பாளிகள் முன்னெடுத்துச் சென்றார்களோ அதேபோல் தமிழ் ஒலிபரப்பு தகவல் சேவையின் வளர்ச்சிக்கும், தமிழ் இசை வளர்ச்சிக்கும் ஈழத்தவர்கள் பெரிய பங்களிப்பை வழங்கியுள்ளார்கள். இது ஒரு நீண்ட பட்டியலாக இருந்தபோதும் இங்கே ஒரு சிலரைக் குறிப்பிடாமல் இருக்க முடியாது.

விமர்சனத்துறையில் பேராசிரியர் கைலாசபதியும், சிவத்தம்பியும் இசைத்துறையில் தவில் மேதை தட்சணாமூர்த்தி, ஒலிபரப்புத்துறையில் சோ. சிவபாதசுந்தரம், எஸ்.கே. பரராசசிங்கம், நாட்டுக் கூத்தில் வைரமுத்து என்று அப்பட்டியல் நீண்டு செல்கின்றது. இவ்வாறான ஒரு ஆரோக்கியமான கலாசார வளர்ச்சிக்கு அரசியல் சூழ்நிலையும் மிக முக்கியமான காரணியாகும். 70களிலே தான் இவ்வாறான கலாசாரத்தில் மிக முன்னேறிய முயற்சிகள் நடந்தேறின. அதற்கு ஒரு முக்கிய காரணம் அன்று பல இந்தியக் கலாசாரக் குப்பைகளின் இறக்குமதி தடை செய்யப்பட்டிருந்தது என்பதையும் நாம் இங்கு மனம் கொள்ளவேண்டும். அன்று இலங்கை வானொலியில் பராவின் சொந்த ஊரான கட்டுவன் பகுதியில் ஆடப்படும் "வசந்தன் கூத்து" ஒலிபரப்பப்பட்டது. பின்னர் இவ் ஒலி நாடாவை அப்துல் ஹமிட் வாங்கி ஏ.ஆர். இரகுமானிற்கு வழங்கியதையும் பரா கூறியுள்ளார்.


சில கால ஓய்விற்குப் பின் திரும்பவும் இசைத்துறையில் செயல்பட முனைந்த வேளையில் தான் அவர் நோய்வாய்ப்பட்டதால் அம்முயற்சிகள் தடைபட்டன. இதில் முக்கியமாக இலங்கைத் தமிழ் இசைக் கழகம் என்ற ஓர் அமைப்பை அவரது தலைமையில் நாங்கள் உருவாக்க முயன்ற வேளையில் தான் அவர் நோய்வாய்ப்பட்டார். இன்றைய கால கட்டத்தில் இம்முயற்சி மிக இன்றியமையாததென்பது எல்லோரதும் கருத்தாகும். இம்முயற்சியில் நண்பர் பராவுடனும், என்னுடனும் துணை நின்றவர்கள் கடந்த காலத்தில் பலகளம் கண்டவர்கள். இதில் முக்கியமாக ரங்கநாதன் சிறினிவாசன், பேரின்பநாயகம், தர்மபாலன் போன்றவர்களை இங்கு குறிப்பிடலாம். இவர்கள் முன்னர் கொழும்பில் 25 வருடங்களுக்கு மேலாக கர்நாடக இசைவிழாவை நடத்தி அனுபவப்பட்டவர்கள். இவர்கள் தமது அனுபவத்தின் ஊடாக இன்றைய தமிழ் இசையின் தேவையை நன்றாக உணர்ந்தவர்கள்.

எமது எல்லோரது விருப்பமும் நிறைவேற தமிழ் இசை இயக்கம் என்ற புதிய திசையில் ஒன்றுபட்டு செயல்படுவதன் மூலம் நண்பர் பராவின் சிறப்பை, தேடலை எமது சமூகத்தின் முன்னேற்றத்திற்கு பயன்படுத்துவோமாக. நண்பர் பரா மாத்திரமல்ல அவரது சகோதரர் பேராசிரியர் மகேஸ்வரன் கூட ஒரு இசை மேதையும் தன்னகத்தே பல தேடல்களைக் கொண்டவருமாவார். அவரிடம் எமது வேண்டுகோள் என்னவென்றால், நண்பர் பராவின் தேடல்களைப் பாதுகாக்க வேண்டுமென்பதாகும்.

இங்கே நண்பர் பரா மறைந்த பின்னர் அவரது மெல்லிசைப் பாடல்கள் அருவி நிறுவனத்தால் இசைத்தட்டாக வெளியிடப்பட்டு பலராலும் வாங்கப்பட்டது. எமது தமிழ் இசை வளர்ச்சியின் முன்னேற்றத்தை கட்டியம் கூறுவதாகவுள்ளது. அருவியின் முயற்சிக்கு அனைத்துத் தமிழ் பேசும் மக்களும் உரிய ஆதரவளிப்பதன் மூலம் பராவின் ஏனைய படைப்புக்களையும் நாம் வெளிக் கொண்டுவர முடியும்.


## ஒரு சாலைக் கனவு

எப்பொழுதும் அவசரமாய்
ஓடிக் கொண்டே இருக்கும்
கார்களை
தலையை அழுத்தித் தேய்த்துச்
செல்லும் கனரக வாகனங்களை
அவை கழிந்து செல்லும் கரும்புகையை
அவ்வப்போது வந்து பிளந்து பார்த்து
ஒட்டுப் போட்டுப் போகும்
பணியாளர்களை - அவர்களின்
கொப்பளித்த உள்ளங் கால்களை
எச்சிலோடு அவர்கள்
துப்பி விட்டுச் சென்ற ஆசைகளை
குச்சி உடைந்த விளக்குமாறால்
ஆண்டுக் கணக்காய்
குப்பை பெருக்குபவர்களை
தளர்ந்த உடம்போடு
தள்ளு வண்டி இழுத்துச் செல்லும் கிழங்களை
துள்ளியோடும் பள்ளிப் பிள்ளைகளை
பின்னிப் பின்னி கால்சேர்த்து
நடக்கும் காதலர்களை
விபத்துக்களில் உறைந்து போன குருதியை
காலையில் பெய்த மழையை
பகலில் சுட்டெரித்த வெய்யிலை
எல்லாம் அசைபோட்டபடி
அதிகாலை நேரத்தில் அயர்ந்து தூங்குகிறது
நீண்ட தெரு
ஒரு நாளில் இவை எதுவுமே இல்லாமல்
தான் சுருட்டி மடிக்கப்பட்டு விடலாம் என்ற நினைவோடு.



## கணக்கு

எனக்குத் தெரிந்த நாளாய்
ஐப்பசி அமாவாசையில் தீபாவளி
அதற்கு முன்னால் மாரியம்மன் கோயில் தீமிதி
அக்டோபர் கடைசியில் இறுதித் தேர்வு வரும்.
அப்பா அடி அளந்து தீ மிதிப்பார்
அம்மா ஒன்பது சுற்று சுற்றி நூற்றியெட்டு
கும்பிடுதண்டம் போடுவார்
வீட்டில் எல்லாரும் விரதம் என்பதால்
பாட்டி சாம்பார், புளிக்குழம்பு என்று
மூன்று நேரமும் சைவமாய் சமைப்பார்.
தீக்குழி மூடியதும் அப்பா
ஏழுநாள் விரதம் முடிப்பார்
திரௌபதி திருவிழா முடிந்து
கொடியிறங்கிய பின்தான்
அம்மாவின் 21 நாள் விரதம் பூர்த்தியாகும்
முட்டை உடைத்து குவே டார்ட்
செய்யத் தொடங்குவார்.
எண்ணெய்ச் சட்டி வைப்பார் பாட்டி
எண்ணி எண்ணி டப்பாவில்
பலகாரங்களை நான் அடுக்குவேன்
பலகாரங்கள் முடிந்ததும்
வீடு கழுவத் தொடங்குவார்கள்
ஜன்னல் திரைகளை நான் அளந்து மாட்டுவேன்
இடையிலே நாலைந்து தடவை
தீபாவளி ஷாப்பிங் போய் வருவோம்
தேவையான சாமான்களை
லிஸ்ட் எழுதி எடுத்துப்போவது நான் தான்
21 வகை பதார்த்தங்களோடு
இறந்து போனவர்களுக்கு
மூன்று நாள் முன்னாடி சாமி கும்பிடுவோம்
தீபாவளிக்கு முதல் இரண்டு நாளும்
தூக்கம் இருக்காது
டிவி மசாலாக்களை ரெக்கார்ட் செய்வது
என் பொறுப்பு.
விழுந்து விழுந்து விருந்து படைத்து
இரண்டு நாளாவது 'எம்சி'" எல்லாருக்கும்
நான் தவறாமல் தேர்வுக்குப் போவேன்
கணக்குப் பாடத்தில் விட்ட கோட்டை
தீக்குள் இறங்கும் முன்
அப்பா கையில் விழுந்த
சாட்டையாய் என் முதுகில் கனக்கும்.



# என்னுள் விகசிக்கும் மு.பொ.

'வீடும் பல்லக்கும்' கதையினைப் படித்து முடித்த பின்னர் மு.பொ. என்ற இலக்கியவாதியைப் பற்றி எனக்குள்ளிருந்த அபிப்பிராயங்கள் எழும்பி உரத்த சிந்தனை கொள்ளச் செய்ததனால் இக்குறிப்பினை வரைகின்றேன்.

தமிழ் இலக்கிய உலகில் மு.பொ. மிக முக்கியமான ஒருவர். இவரது பங்களிப்பைத் தவிர்த்து குறிப்பாக ஈழத்து இலக்கிய உலகை யாரும் மதிப்பிட முடியாது. இதுவரையும் இவர் புரிந்துள்ள இலக்கிய விவாதங்கள், விமர்சனக் கட்டுரைகள், மதிப்பீடுகள், சிறுகதை, கவிதை போன்ற ஆக்க இலக்கியங்கள் அனைத்தும், தமிழிலக்கியத்தில் ஈடுபாடு கொள்கின்ற தீவிரவாசகனோ, படைப்பாளியோ படித்தேயாக வேண்டியவை. வாதப்பிரதிவாதமாக பந்திகளை தொடுத்துச் செல்கின்ற எழுத்து லா்வகம், தா்க்கப்புலமை இவரது கட்டுரைகளில், மதிப்பீடுகளில் கண்டு கொள்ளக் கூடியவை.

சுந்தரராமசாமி சொல்வதுபோலவே, தன் அண்ணனைப் போல் இலக்கிய விமர்சனத்தில் தொடங்கி தத்துவவாதியாக உருக்கொள்ளும் திசையே இவருடைய போக்குமாக இருக்கின்றது. அதனால் தான் யதார்த்தமும், ஆத்மார்த்தமும் என்ற எதிர்வினைப் பாங்கில் விவாதம் இன்னும் விரிகின்றது.

பிரபஞ்ச உணர்வு பெற்ற படைப்பாளிகளை ஈழத்து இலக்கிய உலகுக்கு மதிப்பீடுகள் மூலமாக முன்வைத்த பெருமை இவருக்கே உண்டு. காலங் கடந்தாவது Major poet ஆக நீலாவணன் பேசப்படுவதற்கு இவரே காரணம். இது போலவே இவரது அனேக மதிப்பீடுகள் அமைந்து விட்டதனால் இவரது எழுத்தில், வாதத்தில் நம்பிக்கை கொள்ள முடிகின்றது.

பனியின் விழிநீர், துயரத் திரையில் பாதை மறையும் முன்னே... என்ற நீலாவணனின் விமர்சிக்கும் ஆத்மார்த்த பண்பினை பிரபஞ்ச உணர்வாகக் கண்டு இன்புறுகிறார். இவ்வனுபவத்தை எமக்கும் தருகின்றார்.

இலங்கையர்கோனின் வெள்ளிப் பாதசரம் வல்வைவெளியையும், ரஞ்சகுமாரின் கோளாறுபதிக வெளியையும் ஒப்புநோக்கில் ஒருமித்த அமானுஷ்யத் தன்மை கொண்டிருப்பதனை எமக்கு உணரத் தருகின்றார்.

அன்னையிட்ட தீ மதிப்பீட்டில் புதுமைப்பித்தனின் எள்ளல் நடையினை காலத்தை மீறி நிலைத்திருக்கும் பாங்கினை எழுதுவதன் மூலமாக, புதுமைப் பித்தனின் எள்ளலும், வண்ணதாசனின் <u>கணுவழிவதான</u> தன்மையும் கொண்ட புனர்படைப்புத்தனம் என, உமாவரதராஜனின் நடையை கவிஞர் மீரா சொன்னதை மீண்டும் நினைவு கொள்ளச் செய்கின்றார்.

இதுவெல்லாம் மு.பொவின் ஆழமான ரசிகத்தன்மையினை அதனை வெளிப்படுத்தும் பாங்கினை எமக்குக் கூறுகின்ற விடயங்கள்.

2

மு.பொ. இதற்கு முன்னமும் சிறுகதைகள் எழுதியுள்ள போதிலும், வீடும் பல்லக்கும் எழுதப்பட்ட காலமும், விதமும் மிக முக்கியமானதாகப்படுகின்றது.

ஒரு தேசத்தைப் பற்றி புரிந்து கொள்வதில் வரலாற்று தந்திராத தரமாட்டாத உண்மையை ஒரு இலக்கியப் படைப்பு தந்து விட முடியும். சரித்திரம் எப்போதும் இலக்கியப் படைப்புக்களில் தான் மனிதத்தன்மை பெறுகின்றது என சுந்தரராமசாமி சொன்னதற்கு மிகப்பொருத்தமானதாக வீடும் பல்லக்கும் அமைந்து விடுகின்றது.

கொழும்பில் குடியிருக்க வீடு தேடி அலையும் ஒரு யாழ்ப்பாணத் தமிழ் அகதியின் கதை மட்டுமா இது? இல்லை. கூடவே சுதந்திரத்துக்கு பிற்பட்ட 50 வருட தமிழர் அரசியல் வரலாறுமல்லவா எமக்கு கூறப்படுகிறது.

இந்திய உபகண்ட அரசியல் நிகழ்வுகளும், ஈழத்தின் அரசியல் நிகழ்வுகளும் ஒன்றுடன் ஒன்று இயைபு கொண்ட பண்பினையும் எமக்குக் காட்டுகிறது தானே?

சேர் பொன் இராமநாதனின் பல்லக்கு எமக்குப் புகட்டுவதென்ன? தமிழரசுக் கட்சியினரின் வீடு எமக்குக்காட்டி நிற்கும் வரலாற்றுப் படிப்பினை என்ன? இக் கேள்விகளுக்குப் பதில்களும் <u>குமிழியிட்டு</u> எழுவது தானே மு.பொவின் படைப்பாற்றல் குறித்து நிற்கும் விடயம்.

காந்தியுடன் சேர்ந்து இந்திய சுதந்திரத்துக்காக போராடிய முகம்மது ஜின்னா, நேருவையும், பட்டலையும் நம்பாதது எங்களுக்குத் தரும் பெரும் படிப்பினையல்லவா?

தமிழரசுக் கட்சியின் உண்ணாவிரதத்தைக் கண்டு காந்தியும், ஜின்னாவும் ஏன் பரிகாசம் செய்ய வேண்டும்? அப்படியாயின் உண்மையான போராட்டம் எங்ஙனம் நடந்திருக்க வேண்டும். இதுவெல்லாம் எமக்குள் எழும் கேள்விகள் அல்லவா?

பல்லக்கில் உலா வந்த இராமநாதனுக்கு மாற்றீடாக ஜீ.ஜீ.பொன்னம்பலத்தாலோ, செல்வநாயகத்தாலோ ஆகமுடியாமல் போனதன் கோணல் தான் என்ன?

சுதந்திரத்துக்குப் பின்னான தமிழர் அரசியல் அவலத்தைச் சொன்ன மு.பொ. ஈழப்போராட்ட ஆரம்பத்துடன் ஏன் தனது படைப்பினை மட்டுப்படுத்த வேண்டும்? ஒரு வேளை, சிறுகதை என்ற வடிவத்துள் முழு வரலாற்றையும் கூற முடியாது என்றோ அல்லது இனிவரும் மு.பொவின் படைப்புக்களில் அது துலக்கம் பெறக் கூடும் என்றோ நாம் சமாதானம் கொள்ளலாம்.

வீடுதேடி அலைந்த தமிழ்த் தலைமைகள் போல, பல்லக்கில் உலாவந்த இராமநாதனைப் போலத் தானே தொடரும் தமிழ் அரசியல் தலைமைகளும் இருக்கின்றன? தமிழ் ஈழத்தில் தமிழ் பேசுகின்ற மக்கள் தொகுதியில் ஒரு பிரிவினரான முஸ்லிம்கள் தொடர்பான நிலைப்பாடும் இராமநாதனிடம் போலத்தானே உள்ளது?

முகம்மது ஜின்னாவை போலவே் மாதிரியான முஸ்லிம் தலைமை தமிழ் ஈழத்திலும் அவசியமல்லவா? நீங்கள் தமிழர்களல்ல. சோனிகள் என்று அகதிகளாக்கிய பின்னர் ஜின்னாவை முஸ்லிம்களும் கனவு காண்பது சரியல்லவா?

தமிழர்கள் மூளை பலம் மிக்கவர்கள். ஆனால், ராஜதந்திரமற்றவர்கள் என்று யாரோ சொன்னதாக ஞாபகம். அது கசப்பான உண்மையாகவே இன்னும் தொடர்வது தான் எமது சாபம்

இறுதியாக, உண்மைக்கு உண்மையாய் இருந்து சத்தியத்தின் ஒளியில் உலகைக் காணும் தத்துவவாதி மு.பொ. இனிவரும் இலக்கியம் மெய்யுளை உருவாகக் கொண்டிருக்கும் என்று வாதிடுவது எமக்கு ஞாபகம் வருகின்றது. கூடவே சுந்தரராமசாமி, மெய்யுளில் ஆராய்வு இருக்கின்ற விதத்தில் புனர்படைப்பு இல்லை என்று கூறியது ஞாபகத்துக்கு வருகின்றது.

ஆனால், வீடும் பல்லக்கிலும் புனர்படைப்பு உண்டு. காந்தியும், ஜின்னாவும் ஈழத்தமிழரின், சாத்வீகப் போராட்டத்தை எள்ளி நகையாடுவதும், கண்ணன் தமிழ் அகதிகளுக்கு வீடுவேண்டி கௌரவர்களிடம் போகப் போவதும் புனர்படைப்பின் மீதான விசயங்கள் தான்.

மு.தவை மதிப்பீடு செய்கின்ற நுஃமான் மு.தவின் புதுயுகம் பிறக்கிறது சிறுகதைகளை சிறந்த கதைகளாகவே பார்ப்பதும், மு.த தொடங்கி மு.பொ வரையிலான மெய்யுள்வாதத்தை நிராகரிப்பதும் சிந்திக்கவே செய்கின்றது.

முடிவாக சரித்திரம் எப்போதும் இலக்கியப் படைப்புக்களில் தான் மனிதத்தன்மை பெறுகின்றது என்ற சு.ராவின் கருத்து வீடும் பல்லக்கிலும் மேலும் நிச்சயப்படுத்தப் படுகின்றது.

எம்.ஐ.எம்.றஊப்

# மலியும் தவறுகள்

சரிநிகரில் வரும் கதை, கட்டுரைகளில் எழுத்துப்பிழைகள் மலிந்து வருகின்றன.

நான் எழுதிய புதுமைப்பித்தனின் 'அன்னையிட்ட தீ' விமர்சனக் குறிப்புகளில் பிழைகள் காணப்பட்டன. அப்பிழைகள் நாம் எழுதும் கருத்தையே திரித்துவிடும் பாரதூரமான பிழைகளாக மாறிவிடுகின்றன. இவ்வாறே எனது 'வீடும் பல்லக்கும்' சிறுகதையிலும் பிழைகள் மலிந்துள்ளன. சில வாக்கியங்கள் தவறவிடப்பட்டு பல்லில் கொறிபடாது தவறிப்பறக்கும் கடலைத் தெறிப்பாய் அவை தேவையற்ற இடங்களில் வந்து சொருகிக் கொண்டு 'திருட்டு முழி முழிக்கின்றன. இன்னும் அக்கறையில் 'இந்த நிகழ்வுக்கு வால்வைப்பது போல்' என்ற வசனம் திரித்து எந்த விதப் பொருத்தப்பாடும் இல்லாது இந்த 'நிகழ்வுக்கு வாய்ப்பளிப்பது போல்' என்று போடப்பட்டிருக்கிறது! இன்னும் அரபாத் அவர்களின் 'ஆண் மரம்' சிறுகதையிலும் பல பிழைகள் ஏற்பட்டுள்ளன. அதனால், படிக்கும் போது எங்கெங்கோவெல்லாம் நெருடல்கள்... ஒரே ஒரு தரமான பத்திரிகையாக இயங்கும் சரிநிகர் இப்படி பொறுப்பற்று நடக்க லாமா? இரண்டு கிழமைக் கொருக்கால் வெளிவரும் போது புரூப் அவசரப்பட வேணுமா?

மு.பொன்னம்பலம், தெஹிவளை.

# படைப்பாளியை அவமானப்படுத்தி விட்டீர்களே!

சரிநிகர் 172வது இதழ் படித்தேன். அவ்விதழில் பிரசுரமாகியிருந்த எனது 'ஆண்மரம்' சிறுகதையை மீளவும் ஒரு தரம் வாசித்த போது, அதிர்ச்சியும், விசனமும் ஏற்பட்டது. ஒரு படைப்பாளியால் ஜீரணிக்க முடியாத அம்சம் அவனுடைய சிருஷ்டியை சிதைப்பதுதான் அந்த வெற்றிகரமான வேலையை துணிந்து சரிநிகர் செய்துள்ளது. இதன் மூலம் ஒரு இலக்கியப் படைப்புக்கும், அதன் சிருஷ்டி கர்த்தாவுக்கும் மிகுந்த அவமானத்தையும், தலைகுனிவையும் ஏற்படுத்தி விட்டது. "ஆண் மரம் சிறுகதையில் 13க்கு மேற்பட்ட எழுத்துப் பிழைகளையும், வசனக் குழறுபடிகளை யும் ஏற்படுத்தி சரிநிகர் இக்கைங்கரியத்தைச் செய்துள்ளது. வாசகர்கள் சில பாத்திரங்களை தவறாகப் புரிந்து கொள்ளும் அளவிற்கு அச்சிறுகதையை சிதைத்திருப்பதானது சரிநிகரின் பொறுப்பற்றதனத்தையே வெளிப்படுத்துகிறது.

தவிர, இச்சிறுகதை முற்றுப்பெற்ற அதேதொடரில் மீளவும் முதல் பந்தியை ஆரம்பித்து மேலும் மேலும் குழப்பியடித்து ஆண்மரம் சிறுகதையின் உயிர்த்துடிப்பை வீணாக்கி விட்டது. இருவாரங்களுக்கொருமுறை வெளிவரும் தமிழ்பேசும் உலகின் நம்பிக்கைக்குரிய ஒரு பத்திரிகை இப்படி பொறுப்பற்ற விதத்தில் நடந்துகொள்வது விசனத்திற்குரிய தாகும். எனது சிறுகதைக்குத்தான் இப்பரிதாப நிலையென்றால், வேறுசில ஆக்கங்களிலும் கட்டுரைகளிலும் தாராளமாக எழுத்துப் பிழைகள் விரவிக் கிடக்கின்றன.

இனிவரும் சிறுகதைகளிலாவது (பிற ஆக்கங்கள் உட்பட) அதிகம் எழுத்துப் பிழைகளையும், வசனக்குழறுபடிகளையும் ஏற்படுத்தி, படைப்பாளிகளை அவமானப்படுத்தாமல் சரிநிகர் பொறுப்புணர்ச்சியுடன் வெளிவரும் என நம்புகிறேன்.

ஓட்டமாவடி அறபாத், ஓட்டமாவடி.

**கடந்த இதழில் செந்தூரன் என்று தவறுதலாக இடம்பெற்ற புலிகளின் யாழ் மாவட்ட பொறுப்பாளரது பெயர் செ.தூயவன் என்பதாகும். அசௌகரியங்களுக்கு வருந்துகிறோம்.**

# தலாக் ...

(13ம் பக்கத் தொடர் )

வீட்டுக்கு போயிடு.

நீங்க?

நான் எதுக்குமா? அதுதான் எல்லாம் நல்லபடியா முடிஞ்சுதே!

என்னங்க சொல்றீங்க?

Thank you Nisha. Thank you for the abortion. Thank you for the gift! அபார்ஷன் பண்ணுன தேதியைப் பார்த்தியா? என்ன நாளுன்னு மறந்துட்டியா? What a coincidence? நம்ம கல்யாண நாளு!

என்னங்க சொல்றீங்க?

உனக்கெதிரா ஷரியா கோர்ட்டுலே தலாக்குக்குபைல் பண்ணிட்டேன். மூனாவது தலாக். சீக்கிரம் முடிஞ்சிடணும் பாரும்மா. என் விருப்பத்துக்கு மாறா அபார்ஷன் பண்ணிட்டியேமா... ஒரு பெண் குழந்தைதான் பிறக்கப்போகுதுன்னு கனவு கண்டேனே... எல்லாத்தையும் கெடுத்துட்டியேமா!

ஏம்மா.. ஏம்மா என்னை கோர்ட்டுல நிறுத்த உனக்கு ஆசையா?

Nisha, now you have to meet me at the Shariah Court.

ஏங்க நாம சேர்ந்து வாழவே முடியாதா?

முடியும்மா.. மூனாவது தலாக்குக்கு பிறகு நீ இன்னொருத்தனை நிக்காஹ் பண்ணி அவனும் உன்னை தலாக் பண்ணுனதும், நானும் இன்னொருத்தியை நிக்காஹ் பண்ணி அவளையும் தலாக் பண்ணுனதும், நாம மறுபடியும் ஒன்னா சேரலாம். Okay! Bye! Have a nice day!

ஹலோ! ஹலோ! ஹலோ! ஹலோ! என்னங்க! என்னங்க! ஹலோ!

யா அல்லாஹ்

(உடைந்து போகிறாள். ரோஜாப் பூங்கொத்தை கட்டிக் கொண்டு அழுதவாறு பாடுகிறாள்.)

ஆராரோ அடி ஆராரோ
கண்ணே நீ ஆராரோ ஆரிராரோ...

தித்திக்கும் தேனே - என்
தெவிட்டாத தெள்ளமுதே

சித்தத்தில் உள்ளினிக்கும்
செங்கரும்பே கண் வளராய்

எங்கள் குலம் மங்காமல்
எதிர்குலத்தார் ஏசாமல்

தங்கமணிப் பொக்கிஷத்தை
தானாள வந்த கண்ணே

(மௌனம். சிறுமியின் குரலில்...)

வாப்பா நான் ஒரு கதை சொல்றேன் வாப்பா...

உப்பு பொம்மை தைரியமா கடலுக்குள்ளே இறங்கி நடந்துச்சு.. அது போகப் போக கரைஞ்சி போயிக்கிட்டே இருந்துச்சு.. கடைசியிலே துளியோண்டு அதோட வாய் மட்டும் இருந்துச்சு. இப்பதான் நான் யாருன்னு எனக்கே தெரிஞ்சதுன்னு சொல்லிக்கிட்டு கரைஞ்சு போக விரும்பாம.. கரையை நோக்கி கத்திக்கிட்டே வந்துச்சு....

(மேடையின் விளிம்புக்கு தவழ்ந்து வருகிறாள். நிற்கிறாள். பர்தாவைக் கழட்டி வைக்கிறாள். தூய வெண்ணிற ஆடையில் காட்சியளிக்கிறாள். அரங்கத்தைக் கேள்வி கேட்டவாறே, மேல் நோக்கி கைகளை உயர்த்தி இறைஞ்சியவாறே உறைந்து போகிறாள். ஒளி மங்கி மேடையில் இருள்.)

இந்த அலைகள் எல்லாம் ஏன் ஆண் அலைகளா இருக்கு?

இந்த அலைகள் எல்லாம் ஏன் ஆண் அலைகளா இருக்கு?

இந்த அலைகள் எல்லாம் ஏன் ஆண் அலைகளா இருக்கு?

இந்த அலைகள் எல்லாம் ஏன் ஆண் அலைகளா இருக்கு?

இந்த அலைகள் எல்லாம் ஏன் ஆண் அலைகளா இருக்கு?

இந்த அலைகள் எல்லாம் ஏன் ஆண் அலைகளா இருக்கு?

இந்த அலைகள் எல்லாம் ஏன் ஆண் அலைகளா இருக்கு?

முற்றும்

# ராசிக்...

விட்டு புறப்பட்டதுவும் கண்மூடித் திறப்பதற்குள் நடந்துமுடிந்து விட்டது. ஆனால், ராசிக் 1 1/2 மணித்தியாலயம் கராஜில் தரித்து நின்றதாலேயே அந்த இடைவெளியில் புலிகளுக்கு தகவல் பறந்து ஏற்கெனவே தயார் செய்யப்பட்ட குண்டுதாரி தாக்குதலை மேற்கொண்டார் என்று கூறப்படுகின்றது ஆயினும் இதனை நம்புதற்கில்லை. ராசிக் தன்னுடைய பலத்தாலும் பாதுகாப்பாலும் இதைப்பற்றி பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை என்பதும் உண்மை.

ராசிக்கின் தற்கொலை தாக்குதல் வரைக்கும் எந்தவொரு தற்கொலைப் போராளியின் உடலையும் புலிகள் பொறுப்பேற்கவில்லை. ஆனால், ராசிக்கிற்கான தற்கொலைப் போராளியான அரசப்பனின் உடலை புலிகள் பொறுப்பேற்றுள்ளனர்.

ஆனாலும் இந்த கொலையை நியாயப்படுத்தலாம் என்ற நம்பிக்கையிலேயே புலிகள்இவ்வுடலைக் கையேற்றுள்ளனர். இந்த நிலையில் பாதுகாப்பு தரப்பினர் செய்கின்ற விசாரணைகளும், பின் தொடர்ந்து அவதானிப்பதும் போலிப் பாதுகாப்பை நிரூபனம் செய்வதாகவே அமைகின்றது. ராசிக்கின் கொலைக்குப் பின் குறூப்புக்குள் பல்வேறுபட்ட ஊகங்கள் கிளம்பியுள்ளன. தற்போது ராசிக் குறூப்புக்குப் பொறுப்பாக காந்தி நியமிக்கப்பட்டிருக்கின்றார். இவர் கொக்கட்டிச்சோலையைச் சேர்ந்தவர். இவர் ஈ.பி.ஆர்.எல்.எப்.பின் இராணுவப் பொறுப்பாளராக இருந்த ரஞ்சித்துடன் தீவிரமாகச் செயற்பட்டவர். இதேவேளை இராணுவத் தரப்பில் இருந்தும் கேணல் ஷியாம்மையும் , ராசிக்குழுவுக்கு பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ளார். இருந்தும் குறூப்புக்குள் நிலவுகின்ற பதவிப் போட்டிகள் காரணமாகவும் நிர்வாகத்திறமை இல்லாததாலும் அதற்குள் சிக்கல்கள் நிலவுகின்றன. ஏற்கெனவே இருநூறுக்கும் மேற்பட்டவர்கள் குறூப் ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து வந்து வந்து போயிருக்கிறார்கள் என்றும் கூறப்படுகிறது. ஏற்கனவே ராசிக்குடன் பிரச்சினைப்பட்டு நின்ற ஒரு சிலரை காந்தி சேர்த்து நடத்தும் முகமாக அழைப்பு விடுத்துள்ளதாகவும் தெரியவருகின்றது. அதில் தயாநிதியும் ஒருவர். இவர் ஏற்கெனவே தான் வாகன விபத்தொன்றில் சிக்கி வைத்தியசாலையில் இருந்தபோது ராசிக் தனது குடும்பத்தைப் பார்க்கவில்லையென்று குறூப்பை விட்டு விலத்தி நின்றவர். இப்போது இவருக்கும் காந்தி அழைப்பு விடுத்துள்ளாராம்.

ராசிக் என்ற தனிமனிதனுடைய இந்தக்கொலையை புலிகள் தற்கொலைக் குண்டுதாரியைக் கொண்டு தான் செய்யவேண்டும் என்றால் அதற்கு நிச்சயம் முக்கிய காரணம் இருக்கவேண்டும் என்பதை யாரும் மறுப்பதற்கில்லை.

Registered as a newspaper in Sri Lanka

# சரிநிகர்

இரு வாரங்களுக்கு ஒரு முறை

"சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே"

- பாரதி

இல. 19/04, 01/01, நாவல வீதி, நுகேகொட.

தொலைபேசி / தொலைமடல் : 814859, 815003, 815004.

## அதிகாரத்தால் வாராது ஐக்கியம்!

தமிழீழ விடுதலைப் புலிகளின் சார்பில் அரச படைகளுடன் இணைந்து செயற்படும் முன்னைநாள் விடுதலை இயக்கங்களை நோக்கி விடப்பட்ட வேண்டுகோள் ஒன்று புலிகளின் குரல் வானொலியில் கடந்தவாரம் ஒலிபரப்பாகியது.

"மக்கள் விரோத செயல்களைக் கைவிட்டு பொதுவாழ்வில் இணைந்து கொள்ளுங்கள். நீங்கள் அவ்வாறு இணைவதை நாம் மனப்பூர்வமாக அனுமதிக்கிறோம்." என்று கோரும் இந்தக் கோரிக்கை ஆங்கில தமிழ்ப் பத்திரிகைகளில் முன்பக்க செய்திகளாக வெளியிடப்பட்டிருந்தது.

"நாம் தோளோடு தோள் நின்று போராடும் போது மக்களும் எம்மோடு அணிதிரள்வர் முழுத் தேசமும் எமக்குப் பலமாக நிற்கும்..."

"களத்தில் எதிரியைச் சந்திக்கும் போது எம்மத்தியில் பரஸ்பர ஒத்துழைப்பும் நல்லெண்ணமும் பிறக்கும். அதே சமயம் உண்மையான ஒருமைப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான முயற்சிகளையும் நாம் மேற்கொள்வோம்."

தமிழீழ விடுதலைப் புலிகள் காலங்கடந்தாவது ஐக்கியம் தொடர்பாக அக்கறை காட்டி வெளியிட்டிருக்கும் இந்தக் கோரிக்கை வரவெற்புக்குரியதென்பதில் ஐயமில்லை. அரசியல் போராட்டத்தில், பிரதான இலக்கை அடைவதற்காக பல்வேறு போராடும் அணிகளும் தம்முள் ஒரு ஒருமைப்பாட்டுக்கு வருவதும், அந்த அடிப்படையில் ஐக்கியப்பட்டு செயற்படுவதும் போராட்ட வரலாற்றில் முன்நோக்கிய நகர்வுக்கு மிகவும் அவசியமானவை. இன்றுவரையான வெற்றிகரமான அரசியல் விடுதலைப்போராட்டங்கள் அனைத்துமே, எந்தத் தனிக்கட்சியினதும் சாதனையாக இருந்ததில்லை.

சமூகங்கள் இனங்களாகவும், வர்க்கங்களாகவும் பிளவுபட்டு இருக்கின்ற ஒரு சூழலில் எந்தத் தனியான பிரிவும் தன்னால் மட்டுமே அரசியல் அதிகாரத்துக்கான போராட்டத்தில் வெற்றி பெற்றுவிட முடியும் என்று கருதுவது சாத்தியமற்ற ஒன்றாகும். மாபெரும் ரஷ்ஷியப் புரட்சி முதல் இன்றைய பாலஸ்தீன விடுதலைப் போராட்டம் வரை மக்களின் பல்வேறு அரசியல் அணிகளதும் போக்குகளதும் ஐக்கியப்பட்ட போராட்டமே வெற்றிகரமான முன்நகர்வுக்கு காரணமாக இருந்து வந்திருக்கிறது.

அவ்வாறே ஐக்கியத்தை நிராகரித்த தனிப்பட்ட குழுக்கள் அல்லது அரசியல் சக்திகளின் போராட்டம் ஒரு போதும் வரலாற்றில் வெற்றியைத் தேடித் தந்ததில்லை.

பிரதான அரசியல் முரண்பாடு மற்றெல்லா முரண்பாடுகள் மீதும் செல்வாக்கு செலுத்துவதன் காரணமாக ஐக்கியத்தக்கான வாய்ப்புக்கள் என்றென்றைக்கும் இருந்துகொண்டுதான் இருக்கும்.

இலங்கை இனப்பிரச்சினையை எடுத்தக்கொண்டால் தமிழ் முதலாளிகள் வரையான அனைத்து பிரிவினரும் பௌத்த சிங்கள பேரினவாத அரசின் இன ஒடுக்குமுறையினால் பல்வேறு அளவுகளில் பாதிக்கப்படுபவர்களாகவே உள்ளனர். தமிழ் மக்கள் மத்தியில் உள்ள சகல சாதிப் பிரிவினருக்கும் கூட இதே நிலைதான். அதுமட்டுமல்லாமல் பேரினவாத அரச ஒடுக்குமறை முஸ்லிம் மக்களையும் கூட இனரீதியில் ஒடுக்குவதாக உள்ளது. ஆகவேதான் தமிழ்த் தேசிய விடுதலைக்கான போராட்டம் என்பது அனைத்துத் தமிழ் முஸ்லிம் மக்களதும் ஏகோபித்த ஒரு போராட்டமாக வெடிக்க வேண்டிய வரலாற்று சூழலும் உருவானது.

இது தனியெ தமிழர்களதோ அல்லது தனியே முஸ்லிம்களதோ அல்லது தனியே தமிழ் உயர் சாதியினரதோ அல்லது தனியெ யாழ்ப்பாண தமிழர்களது அல்லது இளைஞர்களது மட்டுமேயான போராட்டமல்ல. இவர்கள் அனைவரதும் வாழ்வுக்கான ஒரு போராட்டம். அதனால்தான் 1977 பொதுத்தேர்தலில் தமிழீழத்தை ஆதரித்து வடக்கு கிழக்கு முழுவதுமே ஏகப்பெரும்பான்மையான வாக்குகளை தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு வழங்கியது.

தமிழர் விடுதலைக் கூட்டணி மக்களின் இந்தக் கோரிக்கையையும் ஆணையையும் பிறகு கைவிட்டுவிட்டதென்பது வேறு விடயம். ஆயினும் போராட்டம் இளந்தலைமுறையினரால் முன்னெடுக்கப்படத்தொடங்கியது. எனென்றால் அது ஒரு தவிர்க்க முடியாத வாழ்வியல் பிரச்சினையாக இருந்தது.

ஆனால் அதற்காக, தமிழ் முஸ்லிம்களுக்கிடையில் முரண்பாடுகள் இருக்கவில்லை என்பதோ தமிழர்கள் மத்தியிலான சாதி, வர்க்கப்பிரிவுகளிடையே முரண்பாடுகள் இருக்கவில்லை என்பதோ அவை கணக்கெடுக்கப்படத் தேவையில்லாதவை என்பதோ அர்த்தமல்ல. அவை முக்கியமானவை மட்டுமல்ல, கணக்கெடுக்கப்பட்டு தீர்ப்பதற்காகப் போரா வேண்டியவையும் கூட.

ஆனால் இவை, பிரதான பிரசினையின் முக்கியத்துவத்தை அதற்கான சகலரதும் ஒருமித்த பங்களிப்பை பாதிக்காத விதத்தில் அமைய வேண்டும்.

ஆனால் எமது வரலாறு துரதிருஷ்டவசமாக அப்படி அமையவில்லை. இயக்க மோதல்கள் முதல் முஸ்லிம் மக்களை முற்றாகவே இனச்சுத்திகரிப்பு செய்தல் வரை எல்லாவித உயர் முரண்பாடுகளையும் பூதாகரமாக வளர்த்து விட்டிருக்கிறத. இந்த நிலைமை தேச விடுதலைப் போராட்டத்தை முன்னேநாக்கி கொண்டு செல்வதற்குப் பதில் அதை சிதறடித்து சிதைத்து அனாவசியமான அழிவுகளையும், நம்பிக்கையனத்தையும் மக்களுக்கு ஏற்படுத்தி தந்துள்ளது.

புலிகளின் இந்த உரை இவற்றையெல்லாம் உணர்ந்து ஐக்கியத்தை நோக்கமாகக் கொண்டு செய்யப்பட்டதாக இருந்தால் அது வரவேற்புக்குரியது என்பதில் ஐயமில்லை.

ஆனால் அந்த வானொலி உரையின் தொனியில் அதிகாரமும் மிரட்டுலும் சேர்ந்து இருப்பதால் ஐக்கியத்துக்கான ஒரு கோரிக்கையாக அதனைக் கொள்ள முடயவில்லை.

மற்றைய இயக்கங்களின் துரோகத்திற்கும், அரசுடன் சேர்ந்து செயற்படுவதற்கும் வெறுமனே அவர்கள் மட்டும் காரணம் அல்ல, தாங்களும் தான் என்பதை புலிகள் மறுப்பது ஒரு நியாயமான யேவல்ல. ஐக்கியத்துக்கு உதவக் கூடிய ஒரு அடிப்படையை அது ஒரு போதும் தரப்போவதுமில்லை.

தமிழ் தேசிய விடுதலைப் போராட்டம் த.வி.கூ.வினால் கைவிடப்பட்ட நிலையில் அதனைத் தோளில் சுமக்கவேண்டிய பொறப்பை எடுத்துக்கொண்ட இளஞ்சந்ததியினர்களின் இன்றைய விடுதலைப்புலி இயக்கத் தலைவருடன் இன்னும் பலர் இருந்தனர். முன் அனுபவமில்லாத நிலையில் பொறுப்பு மிக்க ஒரு பணியை மேற்கொள்ள வெண்டிய நிலைக்கு தள்ளப்பட்டவர்கள் என்ற அடிப்படையில் அவர்கள் தவறிழைத்ததில் வியப்பு ஏதும் இல்லை. அந்தத் தவறுகளை திருத்திக்கொண்டு முன்செல்லும் ஆர்வமும் விருப்பும் இருக்குமானால் அதற்கான தேடல் இருக்குமானால், வரலாறு இத்தவறுகளை மறந்துவிடம் என்பது உண்மை. ஆனால் தவறுகளை எப்போதும் பிறர் மீது மட்டும் காண்பவர்கள் தமது தவறுகளை இனங்காணத் தவறிவிடும் ஆபத்து இருப்பதை மறந்துவிடக்கூடாது. விடுதலைப்புலிகள் தவகளே விடாத என்றென்றைக்குமே சரியாக இயங்கிவந்த ஒரு இயக்கம் என்று கூறியபடி ஐக்கியத்துக்காக கோரிக்கை விடுவது உண்மையான ஐக்கியத்தை ஒருபோதும் கொண்டுவர உதவாது.

அதுவும் ஐக்கியத்துக்கான கோரிக்கையில் பரஸ்பர அங்கீகாரமும் கௌரவிப்பும் இருக்க வேண்டும். விடுதலைப் புலிகளுக்கு அப்படியான ஒரு நிலைமையில் ஏற்படும் தலைமைப் பாத்திரமே நிலையானதும் உறுதியானதுமாக அமைய முடியும். அல்லாவிடில் இதற்கும் ஜே.ஆர்.ஜெயவர்தனா பிரேமதாச வழங்கிய மன்னிப்புக்கும் ஐக்கியக் கோரிக்கைக்கும் வித்தியாசமில்லாத ஒன்றாகவே போய்விடும்.

ஐக்கியம் அதிகாரத்தின் மேலும் மிரட்டல்களின் மேலும் கட்டப்படுவதில்லை என்பது புலிகளுக்குத் தெரியாததல்ல.

ஆனால், அதை அவர்கள் தாமும் கடைப்பிடிக்கவேண்டும்.

அப்போது தான் உண்மையான ஐக்கியம் மலரும்.

இன்றுள்ள எந்த முன்னாள் இயக்கமும் சிறப்பானதென்றோ, சரியானதென்றோ வாதிடுவதல்ல இதன்நோக்கம்.

ஆனால் ஐக்கியம் கட்டியெழுப்பப்படுவது இப்படித்தான் சாத்தியம் என்பதை சுட்டிக்காட்டுவதே.

இதை தமிழீழ விடுதலைப்புலிகள் புரிந்து செயற்பட வேண்டும் என்பதே சரிநிகரின் விருப்பம்.

மக்களின் விருப்பமும் அதுவே தான்.!


# ராசிக் :

# கொலைக்கு காரணம் என்ன?

'ராசிக்' கின் பெயர் தேசத்துரோகி என்ற புலிகளின் பட்டியலில் இருந்தாலும் கூட அண்மையில் தற்கொலைக் குண்டுத் தாக்குதல் ஒன்றின் மூலம் இவர் மட்டக்களப்பில் வைத்து கொல்லப்படுவதற்கு உடனடிக் காரணமாக இருந்தது அதுவல்ல என்றே பேசப்படுகிறது.

ராசிக்கின் மக்களுக்கு எதிரான செயற்பாடுகள் பல முன்பு நடந்த போதும் இவர் கொல்லப்படவில்லை.

யாழ் வடமராட்சியில் 1987இல் மேஜர் ஜெனரல் கொப்பேகடுவவின் தலைமையில் நடைபெற்ற ஒப்பரேஷன் லிபரேஷன் இராணுவ நடவ டிக்கை முதல் கடந்த மூன்று வாரங்களுக்கு முன் மாவட்ட மன்றத்தில் விடுதலை செய்யப்பட்ட பழுகாமத்தைச் சேர்ந்த மாணவனைப் புலி எனக் கைது செய்து கத்தியால் கீறி கொடூரமாக சித்திரவதை செய்தது வரை அவரது நடவடிக்கைகள் பலவும் புலிகளுக்கு எதிராக மட்டுமல்ல மக்களுக்கு எதிராகவும் செயற் பட்டவர் என்பதைக் காட்டு பவை.



இந்திய அமைதிப்படை காலத்தில் 'மண்டையன்' குழுவாகச் செயற்பட்டு மட்டக்களப்பை ஆட்டிப் படைத்தவர்கள் இவரது குழுவினர். அக்கரைப்பற்றில் சனக்கூட்டத்துக்கு மத்தியில் மூன்று பொதுமக்களை ராசிக்கும், கணேசுமாக நிறுத்தி வைத்துச்சுட்டது . உன்னிச்சையில்' ஏழு பேரை ஒரே நிரையில் வைத்து ராசிக் சுட்டது, வெல்லாவெளியில் ஒரே குடும்பத்தில் நான்குபேரை கழுத்து வெட்டி முண்டங்களுக்கு வேறு தலைகளைப் பொருத்தி வைத்து விட்டு வந்தது, மட்டக்களப்பு சென்ரல் ரோட்டில் புலி உறுப்பினர் என ஒருவரை வாளால் துண்டுதுண்டாக அரிந்து போட்டது. அருட்தந்தை சந்திரா பெர்னாண்டோவை ராசிக்கும், ரஞ்சனுமாக ஈவிரக்கமற்றமுறையில் சுட்டுத் தள்ளியது என இவரது சாதனைகள் பல.

06.06.1999 உடன் அருட்தந்தை சந்திரா பெர்னாண்டோ சுட்டுக் கொல்லப்பட்டு 11 வருடம் நிறைவுறுகின்றன.

இவை தான் ராசிக்கை புலிகள் கொல்வதற்கு நியாயப்படுத்தும் காரணங்கள் என்றாலும், இப்போது அவர் கொல்லப்பட்டதற்கு,அதுவும் தற்கொலைக் கொலையாளி ஒருவரைப் பயன்படுத்திக் கொல்லப்பட்டதற்கு இவற்றை விட முக்கியமான ஒரு காரணம் இருக்க வேண்டும் என்று நம்பப்படுகிறது.

'வரதரின்' இலங்கை விஜயமும், ஜனாதிபதியுடனான வரதரின் சந்திப்பும் அவரது தீவிர அரசியல் நடவடிக்கைகளும் அந்நடவடிக்கைகளில் ராசிக் இணைந்து கொண்டதுமே இதற்கான உடனடிக் காரணமாக இருக்க வேண்டும் என்று பேசப்படுகிறது.

சிங்கள இராணுவம் மட்டும் தான் இலங்கையின் தேசிய இராணுவம் அல்ல என்று உலகுக்குக் காட்ட இலங்கை அரசாங்கம் வடகிழக்கில் உள்ள தமிழ் இளைஞர்களையும், ராசிக்கையும் பயன்படுத்தி தமிழ் இளைஞர்களையும் இராணுவத்தில் சேர்க்கும் முயற்சிக்கு அடிகோலியவராக கருதப்படும் வரதரின் பின்னால் போனதே ராசிக் அவசரமாகக் கொல்லப்பட்டமைக்கான காரணம் என கூறப்படுகிறது.

எது எவ்வாறிருப்பினும் இது அரசின் அரசியல் சாணக்கியத்துக்கும், வரதரின் அரசியல் மீள்வருகைக்கும் விழுந்த ஒரு பெரும் அடியாகும். இந்நிலையில் ராசிக் மீதான தற்கொலைத் தாக்குதல் தொடர்பாக பல்வேறு ஊகங்களும், சந்தேகங்களும் எழுந்துள்ளன.

இவை ஒரு வகையில் புலிகளுக்கு சாதகமாக இருந்தாலும், இன்னொரு வகையில் சம்பந்தமில்லாதவர்கள் பாதிக்கப்படுவதற்கும் வாய்ப்பை ஏற்படுத்துகின்றன. ராசிக்கின் கொலைக்கான தகவல் ராசிக் குழுவுக்குள்ளே இருந்து போனதாகவும் அவரது குழுவுக்குள் உள்ள உள் முரண்பாடே இவர் கொல்லப்படுவதற்கு உதவியது என்றும் நம்பப்படுகிறது. இவர் பற்றிய தகவல்கள் புலிகளுக்கு அவரது மோட்டார் சைக்கிளை திருத்திய கராஜிலிருந்து போனதாக கூறப்படுகிறது. ஆயினும் இன்று வரைக்கும் இக்கொலை தொடர்பாக எவ்வித ஆதாரங்களும் கண்டுபிடிக்கப்படவில்லை.

தற்கொலைச் சம்பவம் நடப்பதற்கு ஒரு நாளைக்கு முன்பே தற்கொலை குண்டுதாரியும், இயக்குனர்கள் இருவரும் நகருக்குள் ஊருடுவி இருக்கின்றனர். அன்றைய தினம் ராசிக்கின் முகாமை அண்டிய பகுதிகளில் இருந்தே ராசிக்கின் நடவடிக்கைகள் பற்றி ஆராய்ந்திருக்கிறார்கள். முழுநாளும் இவர்களின் நடமாட்டம் அப்பகுதிகளிலே இருந்திருக்கின்றது. மறுநாள் முகத்துவாரத்துக்கு மீன் எடுக்கவும், வியாபாரம் செய்யவும், செல்லும் குறுாப்பை தாக்கினால் ராசிக் அந்த இடத்துக்கு வரக்கூடும். அந்த இடத்தில் வைத்து தற்கொலைத் தாக்குதலையும் மேற்கொள்ளலாம் என தற்கொலைப் போராளிக்கு குண்டு கட்டப்பட்டது என்று கூறப்படுகிறது. ஆனால் பொலிசார் நின்றதினால் தாக்குதலை மேற்கொள்ளமுடியாமல் போய்விட்டது. ஆனால், விடாமுயற்சியுடன் தொடர்ந்து பின் தொடர்ந்திருக்கிறார்கள். அன்றிரவு ராசிக்கும் சக தோழர் ஒருவரும் மோட்டார் சைக்கிளில் முகாம் வாசலில் நின்று கொண்டிருக்கும்போது தற்கொலைப் போராளியின் சைக்கிள் மோட்டார் சைக்கிளை அண்மித்தபோது முகத்துக்கு 'லைற்' அடித்திருக்கிறார்கள். இதனால் நிலை தடுமாறி சுதாகரித்துக் கொண்டு தற்கொலைப் போராளி சென்று விட்டார் என்றும், கொலை நடந்த அன்றும் தொடர்ந்தும் அதே முயற்சியில் ஈடுபட்டபோது ராசிக்கினுடைய சி.ஜி.125 மோட்டார் சைக்கிளை கராஜிக்கு கொண்டுபோய் விட்டு வந்ததையும், வெளியில் செல்வதற்காக மோட்டார் சைக்கிளுடன் சக தோழர்கள் வேலை செய்வதை ராசிக் அவதானித்துக் கொண்டிருந்ததையும் தற்கொலைக்கொலையாளி நோட்டம் விட்டுக்கொண்டிருந்ததாகவும் கூறப்படுகிறது.

ராசிக்கும் சக தோழர் மூவரும் புறப்பட்டதை அவதானித்துக் கொண்டிருந்த தற்கொலை கொல்லயாளியை ஏற்றிக்கொண்டு மோட்டார் சைக்கிள் பின் தொடர்ந்துள்ளது. ராசிக்கின் மோட்டார் சைக்கிள் கராஜினுள் சென்றதும், தற்கொல்லைப் போராளியும் தாக்குதலுக்கு தயார் நிலைக்கு வந்து சைக்கிளும் வந்துசேர ராசிக் வெளியில் வர மோதுவது என்ற தயார் நிலையிலேயே நின்றுகொண்டிருந்திருக்கிறார்கள். 11.40 அளவில் உள்ளே போனவர் நீண்ட நேரமாகியும் வெளியில் வராதது தற்கொலைக் குண்டுதாரிக்கு பதட்டத்தைக் கொடுத்திருக்க வேண்டும். இதற்கிடையில் அருகில் உள்ள குளிர்பான கடையில் தயா வந்து சோடா வேண்டியதையும் அவதானித்துக் கொண்டே இருந்திருக்கிறார்கள். நேரம் ஆக ஆக பதட்டமும் அதிகரிக்க ராசிக் வெளிவாசலைவிட்டு வெளியேறு- முன்பே முட்டவேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது. இதனாலேயே அருகில் இருந்தவர்களுக்கும் பாதிப்பு ஏற்படவேண்டி வந்தது என்று கூறப்படுகின்றது. தற்கொலை குண்டுதாரி ராசிக்கின் வலது கையை எட்டிபிடிக்கவும் வெளியில் காத்து நின்றவர்கள் றிமோட்டை அழுத்தி-

→ 19



வெளியிடுபவர் : ச. பாலகிருஷ்ணன் , இல. 18/02, அலோ சாலை, கொழும்பு 03, அச்சுப்பதிவு : பிறின்ற் இன், இல. 07, கெட்டிய இடம், சிறிமல் உயன, இரத்மலானை.